# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 28 திங்கட்கிழமை (13.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 291


# யாழ். அபிவிருத்திக் கூட்டத்தில் முதன்முதலில் கூட்டமைப்பு

## அமைச்சர்களுடன் சேர்ந்து சுரேஷ் கட்டடத்தைத் திறந்தார்

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 13

**யாழ். குடாநாட்டின் அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வு விவகாரங்கள் குறித்து அரசு நடத்தும் கூட்டங்களில் பங்கேற்பது என்ற முடிவுக்கு அமைய -**

**யாழ். செயலகத்தில் நேற்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தலைமையில் நடந்த கூட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றினர்.**

கடந்த ஏப்ரலில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலையடுத்து, அரசின் அபிவிருத்தி, மீள்குடியமர்வுப் பணிகளுக்கு ஆதரவு வழங்கும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.

அதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நடந்த சந்திப்பின்போதும் இந்தக் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி மற்றும் மீள்குடியமர்வு தொடர்பாக அரசு நடத்தும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு கரையோரங்களில் 25 புதிய படை முகாம்கள்

கொழும்பு, செப்.13

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் மீண்டும் தலைதூக்குவதைத் தடுப்பதற்காக அப்பிரதேசங்களில் 25 புதிய கரையோரப் பாதுகாப்பு முகாம்களை நிர்மாணிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தப் புதிய முகாம்கள் கரையோரப் பாதுகாப்புக்கான கடற்படையினரின் ஒருங்கிணைப்புடன் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. பயங்கரவாதம் மீண்டும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் அனர்த்த முகாமைத்துவ செயற்திட்டம் 167 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்படும்

### யாழ்.வந்த அமைச்சர் பௌஸி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்டத்தில் 167 மில்லியன் ரூபா செலவில் இயற்கை அனர்த்த முகாமைத்துவ செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் திறைசேரியின் ஒப்புதலும் பெறவேண்டியுள்ளது எனத் தெரிவித்தார் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி.

நேற்று யாழ்.மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட

(24ஆம் பக்கம் பார்க்க)

## 25 எம்.பிக்கள் தனித்தியங்கும் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் சஜித் நாட்டம்

கொழும்பு, செப். 13

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 25 எம்.பிக்கள் சுயேச்சைக் குழுவாக நாடாளுமன்றத்தில் இயங்கப் போவதாக செய்திகள் வெளிவந்தபோதிலும் இதுவரை கட்சித் தலைமைக்கு இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று ஐ.தே.கட்சிப் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக நேற்று தெரிவித்தார்.

'அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

25 எம்.பிக்கள் அடங்கிய குழுவில் எனது பெயரும் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது குறித்தும் எனக்குத் தெரியாது. இக்குழுவினர் கட்சியின் செயற்குழுவை உடன

(24ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சம்பந்தன் சாட்சியம் அளிப்பார்

### தமிழர் தரப்பு நியாயங்களை வரலாற்று ரீதியாகப் பதிவு செய்ய

கொழும்பு, செப். 13

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இந்தத் தகவலை அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்பின் நியாயங்களை வரலாற்று ரீதியாக பதிவு செய்வதற்காகவே தாம் இந்த முடிவை எடுத்துள்ளனர் என்றும் -

நல்லிணக்க ஆணைக்குழுவின் முடிவு தமிழருக்குச் சாதகமாக அமைகிறதோ அல்லது பாதகமாக அமைகிறதோ என்பது

(24ஆம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச் சபை உட்பட மூன்று அமைப்புகள் சாட்சியம் அளிப்பது குறித்து முடிவில்லை

### நல்லிணக்க ஆணைக்குழு அழைப்பை அனுப்பிவிட்டுக் காத்திருக்கிறது

கொழும்பு, செப். 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஏற்படுத்தப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு தன் முன்னிலையில் சாட்சியம் அளிக்குமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

குறிப்பாக சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச அனர்த்த குழு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த மாதம் மேற்கொள்ளப்படவுள்ள விசாரணைகளில் பங்கு பற்றுவதற்காக தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு குறித்த அமைப்புகளிடம் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும், அழைப்பு விடுக்கப்பட்ட பிரஸ்தாப மூன்று நிறுவனங்களும் இதுவரை தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. ஆணைக்குழுவின் அழைப்பு

(23ஆம் பக்கம் பார்க்க)

## சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை பிணையிலாவது விடுவியுங்கள்!

### ஜனாதிபதி மஹிந்தவிடம் பெற்றோர் மன்றாட்டம்

கொழும்பு, செப்.13

''எமது பிள்ளைகள் நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் தடுத்த வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பாக ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை. அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள் அல்லது அவர்களை பிணையிலாவது விடுதலை செய்யுங்கள்.''


- இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கடித விவரம் வருமாறு-

கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையின் போதும், அதன் பிற்பாடும் பல்வேறு காரணங்களுக்காக பயங்கரவாதம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ்

(23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் சுயநிர்ணய உரிமை அடையாளங்களை அழித்துவிட இலங்கை அரசு தீவிரமான முயற்சி



### ஜேர்மனியில் நடைபெற்ற அகம்புலம் தமிழர் வாழ்வியல் மாநாட்டில் மாவை

ரேயினே, செப்.13

தமிழர்களின் தாயகத்தை, அவர்களின் சுயநிர்ணய உரிமை அடையாளங்களை அழித்துவிட இலங்கை அரசு தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஜேர்மனியின் ரேயினே நகரில் நடைபெற்ற உலகத்தமிழ் பண்பாட்டியக்கத்தின் அகம்புலம் தமிழர் வாழ்வியல் மாநாட்டில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இம்மாநாட்டில் இலங்கையில் இருந்து வருகை தந்த மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சி.யோகேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் உட்பட ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருகை தந்த ஊடகவியலாளர்கள், தமிழ் அறிஞர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் மாவை சேனாதிராஜா தொடர்ந்து உரையாற்றுகையில்,

2009மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில்

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வட மாகாணப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அரசாங்கம் உதவும் எனக் காத்திருப்பது தவறு; பழைய மாணவரே உதவ வேண்டும்

## யாழ்.இந்து சர்வதேச பழைய மாணவர் மாநாட்டில் சரா

யாழ்ப்பாணம்,செப்.13

இலங்கை அரசிடம் பணம் இல்லை. அதேசமயம் வட மாகாணப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு அரசு உதவும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பது தவறு. அவற்றின் வளர்ச்சிக்கு பழைய மாணவர்கள் தாராளமாக உதவ வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசிய்க கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் "அன்னையின் மடியில்" முதலாவது சர்வதேச பழைய மாணவர் மாநாடு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

எமது பாடசாலைக்கு பராமரிப்புச் செலவுக்காக மட்டும் வருடாந்தம் 20 லட்சம் ரூபா வரை தேவைப்படுகின்றது. அந்த நிதியை பழைய மாணவர் சங்கங்கள் தான் வழங்கவேண்டும். பழைய மாணவர்கள் இங்கு நிதி அனுப்புவதற்குத் தயக்கம் காட்டுகின்றார்கள்.

ஏனெனில் இங்கு அனுப்பப்படுகின்ற பணம் ஒழுங்கான முறையில் பயன் படுத்தப்படுகின்றதா என்பதில் அவர்களுக்குச் சந்தேகம். இங்கு அனுப்பி வைக்கப்படும் பணத்துக்கான முழு விவரங்களையும் அனைத்து செலவினங்களையும் பழைய மாணவர்களுக்கு அறியத்தர வேண்டும். அதேசமயம் அவர்கள் நேரடியாக பழைய மாணவர் சங்கக் கிளைகளுக்கு பணத்தை அனுப்புவதன் மூலம் வீண் சந்தேகங்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

எமது கல்லூரி தேசிய பாடசாலை என்ற போதிலும் அரசாங்கம் தேவைப்படும் உதவிகளை வழங்குவதில்லை. எமது கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்காக பழைய மாணவர்களாகிய நாம்தான் உதவ வேண்டும். எமது யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம் ஏனைய பழைய மாணவர் சங்கங்களுக்கு எல்லாம் தாய்ச் சங்கமாக செயற்பட்டு வருகின்றது. - என்றார்.

இந் நிகழ்வில் மற்றும் பலர் உரையாற்றினர். (ஒ-15)

## வேலணையில் இன்று தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், செப்.13

வேலணை கிற்பனை முருகன் ஆலயப் பெருந் திருவிழாவில் இன்று தேர்த் திருவிழா இடம்பெறுகிறது.

காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முருகப் பெருமான் 10 மணிக்கு தேரில் ஆரோகணித்து அருட் காட்சி வழங்குவார்.

(சிறப்பிதழ் 19ஆம் பக்கத்தில்)(ஐ)

# சாக்குப் பையில் சுற்றிக் கட்டப்பட்ட நிலையில் ஒரு நாளேயான ஆண் சிசு உயிருடன் மீட்பு!

## கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.13

பிறந்த ஒரு நாளான ஆண் சிசு ஒன்று சாக்குப் பையினால் சுற்றிக் கட்டப்பட்ட நிலையில் வீதியோரமாக இருந்த பற்றைக்குள் இருந்து உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுக்காலை தனது கடமையின் நிமித்தம் வீதியால் சென்றுகொண்டிருந்த அப் பகுதி வாசி வீதியோரமாக இருந்த சாக்குப் பையினுள் அசைவு ஏற்பட்டதையடுத்து அழுகுரல் சத்தமும் கேட்கவே அதனை அயலவர்களுக்குக் கூறியுள்ளார்.

அதையடுத்து அவ்விடத்தில் ஒன்று கூடிய அயலவர்கள் சாக்குப் பையை அவிழ்த்த போது மலம் கழித்த நிலையிலும் தொப்புள்கொடி வெட்டப்படாத நிலையிலும் இருந்த குழுந்தையை மீட்டனர். கையில் நீலம் பாரித்திருந்த நிலையில் இருந்த அக் குழந்தையின் தொப்புள் கொடியை வெட்டிய அயலவர்கள் அதனை சுத்தம் செய்து பால் கொடுத்தனர்.


அந்தச் சிசு இதுதான்!

அப்பகுதி கிராம சேவகரின் மூலம் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் அந்தச் சிசுவை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்ததுடன் அயலவர்களிடம் வாக்கு மூலங்களையும் சேகரித்தனர். மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-6-310-72)

## அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான

# உதைபந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளிலும் கால் இறுதிக்குள் நுழைந்தது மானிப்பாய் இந்து

வலி.வடக்கு, செப்.13

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் 17வயது, 19 வயது ஆகிய பிரிவுகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி கால் இறுதிக்குள் நுழைந்துள்ளது. இன்று கால் இறுதி ஆட்டங்களில் மானிப்பாய் இந்து மோதும்.

நீர்கொழும்பு பொஸ்கோ கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற 19 வயதுப் பிரிவு ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து கேகாலை புனித சேவியர் கல்லூரி மோதியது.

இந்த ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி கேகாலை புனித சேவியர் கல்லூரியை 9:0 எனும் கோல் கணக்கில் வெற்றி கொண்டு காலிறுதிக்குள் நுழைந்தது.

நேற்று மாலை நடந்த 17 வயதுப் பிரிவு ஆட்டத்தில் அநுராதபுரம் ரணசிங்க ம.வியை 2:1 என்ற கோல் கணக்கில் வென்று மானிப்பாய் இந்து கால் இறுதிக்குள் நுழைந்தது.

(ஒ-ஐ-6-86)

# பிரபல பாடகி ஸ்வர்ணலதா நுரையீரல் பாதிப்பால் மரணம்

சென்னை செப்.13



பிரபல பாடகி ஸ்வர்ணலதா நுரையீரல் பாதிப்புக் காரணமாக நேற்றுக்காலை காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 37. சென்னை அடையாறு பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்த ஸ்வர்ணலதா சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை 11 மணியளவில் காலமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

கேரள மாநிலம் பாலக்காடு இவருடைய சொந்த ஊர். 1990இல் தமிழில் வெளியான சத்ரியன், 95இல் வெளியான ராணி ரத்னப்ரபா என்ற தெலுங்குப் படம், 95இல் ஹிந்தியில் வெளியான ரங்கிலா படங்களின் மூலமாக தன் வசீகரக் குரலால் பெரும் பாலான ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் ஸ்வர்ணலதா.

90ஆம் ஆண்டு வெளியான கப்டன் பிரபாகரன் படத்தில் இவர் பாடிய ஆட்ட மா...தேரோட்டமா.... சின்னத் தம்பி படத்தில் இடம் பெற்ற "போவோமா ஊர் கோலம்... ஆகிய பாடல்கள் இவரை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றதுடன் தமிழக அரசின் சிறந்த பின்னணிப் பாடகிக்கான விருதும் மற்றும் தேசிய விருதும் (கருத்தம்மா படத்தில் பாடிய போறாளே பொன்னுத்தாயி பாடலுக்காக) பெற்றுள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, பஞ்சாபி, கன்னடம் என பல் வேறு மொழிகளில் 500க்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருக்கிறார்.

பிரபல இசையமைப் பாளர்களான இளைய ராஜா, ஏ. ஆர். ரகுமான் உள்ளிட்ட பெரும்பாலான இசையமைப் பாளர்களின் இசையிலும் இவர் பாடியிருக்கிறார். சென்னை சாலிக கிராமத்தில் உள்ள வீட்டில் அவரது உடலுக்கு திரையுலகப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.


LAVA HOSPITAL

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

www.lavahospitals.com/blog

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup

அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான Obesity package - 1200/=



தேவை

★ பூபதி பாண் ★ பூபதி பணிஸ் ★ பூபதி கேக் என்பவற்றை விற்பனை செய்வதற்கு முகவர் தேவை.

★ பத்து முகவர்களே தேவை. முன்னுரிமை அடிப்படையில் முகவர்கள் தெரிவு செய்யப் படுவர்.

பூபதி கேக்

யாழ்.மானிப்பாய் வீதி,

ஆனைக்கோட்டை. T.P.: 0777427777



A/L 2010 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு.

இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

DMI COMPUTER EDUCATION

Real Offer 75% for All

நேரடி உண்மைக் கட்டணக்கழிவு

DIPLOMA IN PC APPLICATION
DIPLOMA IN MICROSOFT OFFICE
ADV. DIP. IN HARDWARE & NETWORKING
DIPLOMA IN PRE-PRESS DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN WEB PAGE DESIGNING AND DEVELOPMENT
TALLY FINANCIAL ACCOUNTING TRAINING
DIP. IN VIDEO PRODUCTION AND MULTIMEDIA
MASTERS DIPLOMA IN DIGITAL ANIMATION
MASTERS DIP. IN MULTIMEDIA & ANIMATION

ICDL AutoCAD INTERNET E-MAIL



புதிய பிரிவுகள் ஆரம்பம்.
13/9/2010 9.00 a.m.
18/9/2010 10.00 a.m.
20/9/2010 9.00 a.m.

சர்வதேச அங்கீகாரத்துடன்.

veta Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்
13/9/2010 9.00 a.m.
18/9/2010 9.00 a.m. & 3.30 p.m.
20/9/2010 9.00 a.m.

veta Experts in English Training An ISO 9001:2008 Company

ITECS Tally IAB ICDL

Get Certified Internationally

குறைந்த கட்டணத்தில் முழுமையானதும் தரமானதுமான கணனி கல்விக்கு.

DMI COMPUTER EDUCATION

No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.Tel.: 021-222 4403

M.M.V. வீதி, நெல்லியடி. Tel.: 021 320 7700



நீங்களும் அரச/சர்வதேச அங்கீகாரமுள்ள மருந்தாளர் (Pharmacist) ஆகலாம்!!

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஆரம்பமாகின்றது!!!

Higher National Diploma in Pharmacy

(HND in Pharmacy - External- Batch - 3)




முக்கிய குறிப்பு :-

இக் கற்கை நெறியை கற்றதன் பின்னர் நீங்கள் விரும்பின் UK இல் உள்ள அதி சிறந்த பல்கலைக்கழகங்களில் Bachelor Of Pharmacist (B.Pham) பட்டத்தை இலகுவில் பெற்று, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பை இலகுவில் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

External Pharmacy examination conducted by Sri Lankan Medical Council SLMC registration

Admission criteria to sit for the external examination is G.C.E A/L Three passes with Chemistry

(Durations :- 18 Months)

WHAT DO YOU LEARN? LEARNING COMPONENT
Basic Pharmaceutical English Forensic
Pharmacy Pharmaceutics
Human Anatomy & Physiology
Pharmacology Pharmacognosy
Pharmaceutical Management Pharmaceutical Ethics
Pharmaceutical Marketing Practicals and Internship

Batch - 3 ஆரம்பம் :-
16/09/2010 & 18/09/2010
உங்கள் அனுமதிக்கு முந்துங்கள் !!!

மேலதிக விபரங்களுக்கு :-

UNI ICT CAMPUS

No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

T.P :- 021 321 6433 / 0777 110 862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யார் சொல்லியும் இனிக் காதில் ஏறாதே!

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியலில் மாற்றங்கள் தெற்காசியப் பிராந்தியத்தின் நலன்களில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?

அண்மைக் காலமாக இந்த நாட்டில் உண்டாகி வரும் சகல மாற்றங்கள் குறித்தும் உங்கள் பார்வை என்ன?

அரசமைப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், அவை ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்த உங்கள் கருத்து என்ன?

இந்த ஆழமான, அர்த்த்முள்ள கேள்விகளை நாம் எழுப்பவில்லை. இங்குள்ள எவரும் எழுப்பியதாகத் தகவல்களும் இல்லை. அவ்வாறான செய்திகளும் வெளியாகவில்லை.

ஜனநாயக நடவடிக்கை என்ற பெயரில் இம்மாதம் எட்டாம் திகதி இந்நாட்டின் நாடாளுமன்றத்தில் அமோகமாக நிறைவேற்றப்பட்ட அரச்மைப்புக்கான பதினெட்டாவது சட்டத் திருத்தத்தைக் கருத்தில் கொண்டு, இந்தியாவிடம் அமெரிக்கா கேட்ட கேள்விகளே மேற்கண்டவை. சட்டத்திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள், இந்தக் கேள்விகளைத் தொடுத்திருக்கிறது அந்த வல்லரசு.

அமெரிக்கா கேட்ட இந்த வினாக்களுக்குரிய பதில்கள் அந்நாட்டுக்குத் தெரியாதவை அல்ல. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து, இவற்றுக்கான பதில்களை மட்டுமன்றி பின்னணிகள் மற்றும் சகல அம்சங்கள் குறித்தும் இதில் சம்பந்தப் பட்டவர்கள், எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், எதுவுமே இயலாதவராகி வாய் கிழியக் கத்தியவர்கள் என்ற சகல விவரங்களும் அச்சொட்டாகத் தகவல் அறிக்கை வடிவத்தில் நியூயோர்க்கிற்குப் பறந்திருக்கும்!

அந்த அறிக்கையில், இலங்கையில் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து, அதனால் இந்த நாட்டுக்கு ஏற்படக்கூடிய கெடுதல்கள், அமெரிக்கா எந்தத் தளத்தில் நின்று பணியாற்ற வேண்டிவரும் என்ற குறிப்புகளும் அடங்கியிருக்கும் என்று நம்பலாம்.

அந்த அறிக்கை கொடுத்த தகவல்களின், அடிப்படையிலேயே அமெரிக்க ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் பி.ஜே.குரொவ்லி பதினோராம் திகதி வெளியிட்ட அறிக்கை அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

கடந்த வாரம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்தம் - அரசமைப்புச் சட்டத் திருத்தம் - ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பலவீனப்படுத்துவதாக அமெரிக்கா கவலை கொண்டிருப்பதாக அந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.

இலங்கை அரசு ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது. சுயாதீனக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக, தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமித்தல், அதிக அளவிலான வெளிப்படைத் தன்மை, தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், அதிகாரப் பரவலை விரிவுபடுத்துதல், அதற்கான பேச்சுக்களைத் துரிதப்படுத்துதல், தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் அத்தியாவசியத்தை ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் குரொவ்லி வலியுறுத்தி இருக்கிறார்.

அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் பின்னரான அமெரிக்க அரசின் ஆரம்பகட்ட - அதிகாரி மட்ட - அறிக்கை இது. அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ நிலைப்பாடும் கொள்கையும் இன்னும் ஒருசில வாரங்களில் வெளிவரக்கூடும். அது, இதனைவிடக் காரசாரமாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

அமெரிக்காவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டால் என்ன, அது கண்டித்தால் என்ன, உலகின் எந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த சக்திமிக்க நாடு இடித்துரைத்தால் என்ன, சென்றவாரம் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டம் நினைத்தது எதனையும் செய் வதற்குக் கொடுத்துள்ள அதிகாரங்களை இலங்கை அரசு, நூறு வீதம் செயற்படுத்தும். அதில் சந்தேகமில்லை.

முன்னர் அரைகரைவாசியேனும் சுயாதீனமாக இயங்குவதற்கு அதிகாரம் கொண்டிருந்த நீதித்துறை,பொலிஸ், தேர்தல் ஆணைக்குழுக்கள் மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் அதிகாரத்தை ஜனாதிபதி தமது கையில் எடுத்துள்ளார். இவை நல்லாட்சிக்குக் குந்தகம் விளைவிக்கவல்லவை.

மொத்தத்தில், ஆட்சியின் செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மை அற்றுப்போய்விடும். அரசாங்கம் தான் நினைத்ததைச் செய்வதற்கு தாராள இடம்கொடுக்கப் பட்டுள்ளது. உள்ளே என்ன நடந்தது, ஏது நடக்கிறது என்று தெரிந்தால் மட்டுமே தட்டிக்கேட்கலாம். அதற்கு இடமில்லாமற் செய்யப்பட்டதால் நல்லாட்சிக்குப் பாதகத்தை ஏற்படுத்தும்.

நிலைமை இவ்வாறிருக்கும் என்பது அமெரிக்க அதிகாரிகளுக்குத் தெரியாததும் அல்ல.

எனினும் அருகில் உள்ள இந்தியாவிடம் கருத் துக் கேட்டிருக்கிறது. ஆனால் இலங்கை மீது தனது செல்வாக்கைச் செலுத்தி இந்தியா, புதிய சட்டத்திருத்தம் வழங்கும் வலுவான அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்க முடியாது. விநயமாகக் கேட்டாலும்கூட இலங்கை அரசு ஏதோ சாக்குப் போக்குக் கூறித் தந்திரோபாயத்துடன் சமாளிக்குமே அன்றி, தான் செய்ய நினைப்பதைச் செய்தே தீரும்!

இனப்பிரச்சினை குறித்து உறுக்கிக்கூறி நியாயமானதைத் தானும் செய்விப்பதற்கு வலுவற்ற இந்தியா, இந்த விடயத்தில் வாய்திறந்து பேச முற்படுமோ என்பதே கேள்விக்குறி.

இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக அழுத்தம் கொடுத்தாலும்கூட இலங்கை அரசாங்கத்தை இது விடயத்தில் நிதானமான நிலைக்குக் கொண்டுவர முடியுமா என்பது சூரியனைக் கைக்குள் பிடிக்கும் முயற்சியாகவே இருக்கும் !

# ஐ.தே.கவில் பூசல் பூதாகரமாகிறது; ரணிலை எதிர்க்க சஜித் தயாராகிறார்!

நேற்று 12.09.2010 ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமரிசனத்திலிருந்து ஒரு பகுதி இது.

கடந்த வாரம் அமைச்சரவை உறுப்பினர்கள் மத்தியில் பேசிய ஜனாதிபதி ராஜபக்ஷ 'இது எமது எம்.பிக்கள் அனைவருக்கும் எம்மை ஆதரித்தவர்களுக்கும் கூட ஒரு வெற்றியே' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை 161 உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்றி விட்டு அமைச்சர்கள் அனைவரும் அலரிமாளிகைக்கு வழமையான கூட்டத்துக்காகச் சென்றார்கள்.

'ஒருநாளும் நான் இரவு நித்திரையைக் குழப்பிக் கொள்ளவுமில்லை, அதே சமயம் நாடாளுமன்றத்தில் எம்மை ஆதரித்த எதிர்க்கட்சியினருக்காக ஒரு சதத்தையும் கூட செலவழித்ததும் கிடையாது' என்று ஜனாதிபதி அமைச்சர்கள் கூட்டத்தில் கூறினார்.

இது முன்னைய காலங்களில் வேறு விதமாகவிருந்தது. வரவு செலவுத் திட்டத்தின் மீது அரசு தோல்வியைச் சந்திக்கும் நிலைமை ஏற்பட்டிருந்தது. அதைத் தவிர்ப்பதற்கு நாம் கடுமையாக வேலை செய்ய வேண்டியிருந்தது. அதனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது என்று கூறிய அவர் இப்பொழுது நிறையவும் பணி இருக்கின்றது. நாம் அதில் இறங்கி உழைக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் ஜனாதிபதியுடன் அமைச்சர்களும் கலந்துகொண்டனர். அவர்கள் நாடாளுமன்றத்தில் தமக்கு கிடைத்த வெற்றி யைப் பற்றியே அதிகமாகவும் கலகலப்பாகவும் பேசிக்கொண்டார்கள். அவர்கள் மத்தியில் மகிழ்ச்சி நிரம்பிவழிந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் ஐ.தே.க. கூட்டத்தில் நேர்மாறான நிலைமை நிலவியது. ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களும் நிலைமைகளை அலசி ஆராய்ந்தனர். கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தரப்புக்குத் தாவியமை குறித்து பலரும் வெறுப்புடன் கருத்து வெளியிட்டனர். சட்ட நிபுணர்களோடும் ஆலோசனைகள் நடத்தினர்.

லக்ஷ்மன் செனவிரட்ண (பதுளை), ஏர்ள் குணசேகர (பொலன்னறுவ) ஆகிய இரு உறுப்பினர்களுக்கும் உடனடியாக விளக்கம் கேட்டுக் கடிதங்கள் அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது. முன்னையவர் ஐ.தே.கவின் பிரதிச் செயலாளர் பதவியிலி ருந்து

என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

மனுஷா நாணயக்கார (காலி), அப்துல் காதர்(கண்டி), சிறிரங்கா (நுவரெலியா), நில்வல விஜேசிங்க (குரு நாகல்), உகேம்ஷா ஸ்வர்ணமாலி (கம்பஹா) ஆகியவர்களே பிரச்சினைக் குரித்தாகியுள்ள ஐ.தே.க. எம்.பிக்கள் - செயற்குழு விவாதித்து தீர்மானம் எடுக் கும்வரை இந்த ஏழு உறுப்பினர்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் ஐ.தே.க. தலைவர்கள் எச்சரிக்கையாய் இருந்து வருகின்றனர். விவாதிக்கப்பட்டு வரும் விடயங்களில் ஒன்று ஐ.தே.க. உறுப்பினர்கள் தாம் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படு வதற்கு முன்னர் கட்சித் தலைவரிடம் கையளித் திருந்த ராஜினாமாக் கடிதங்க ளாகும். இந்தக் கடிதங்களை தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பித்து சம்பந்தப்பட்ட ஆசனங்கள் காலியாகிவிட்ட தாகக் கூறி அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதை செயற்குழு ஆராயவிருக்கின்றது. இந்த விடயத்தில் சட்ட ஆலோசனையை அவர்கள் நாடியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இதில் ருசிகரமான விடயம் என்ன வென்றால் ஐ.தே.க.வின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் எட்டுப் பேரும் நடவடிக்கை எதற்கும்

வெளிப்படுத்தவும் வழி செய்கின்றன. முதல் வாசிப்பானது மசோதாவை நாடாளுமன்றில் சமர்ப் பிப்பதையும் இண்டாவது வாசிப்பு அது விவாதிக்கப்பட்டு ஏற் றுக்கொள் வது அல்லது நிராகரிப்ப தைக் குறிப்பனவாகும். இவ்வாறு அவர் பல விடயங்களை விவரித்து உரை நிகழ்த்தினார்.

தமிழில்: கோகுலன்

கடந்த வாரம் சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவாக ஒரு ஊர்வலமும் ரவி கருணா நாயக்காவுக்கு ஆதரவாக இன்னொரு ஊர்வலமும் ஐ.தே.கட்சியின ரால் நடத்தப்பட்டன.

ஐ.தே.கட்சியினரான பிரேமதாஸாவும் கருணாநாயக்கவும் இப்போது ஒரு வரை ஒருவர் எதிர்க்கும் எதிர்பாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

பிரேமதாஸா கட்சியின் தலைமைப் பதவிக்கு விக்கிரமசிங்கவை எதிர்த்து நிற்கப்போவதாக அறிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் பிரேமதாஸா விக்கிரம சிங்கவுடன் இணைந்து பணியாற்றும் வகையில் பிரதித் தலைவர் பதவி கேட்டி ருந்தார். பின்னர் தாம் பதவி எதனை யும் விரும்பவில்லையென்றார். இப் பொழுது கட்சியின் தலைவர் பதவியை எதிர் பார்த்து நிற்கிறார் கட்சியின் அடி பட்ட உறுப்பினர்களுடன் இப்போது தலைமைப் பதவிக்

# அரசு தரப்பில் மகிழ்ச்சி விருந்துண்ணல்; வெற்றிப் பெருமிதத்தில் ஜனாதிபதி

உட்படாமல் தப்பிவிட்டமைதான். அதேபோல் பிரபாகணேசன் மற்றும் பி.திகாம்பரம் ஆகியவர்களும் தப்பி விட்டனர். கட்சியிலிருந்து வெளியேற்றப்பட இருப்பவர்களுக்கு இது சாதகமான நிலைமையை உருவாக்குவதாக கருதப்படுகின்றது. இதனை சுட்டிக்காட்டும் அவர்கள் இவ்வாறு பல உறுப்பினர்கள் முன்னரும் எம்.பிக்களும் கூட ஒழுக்காற்றை மீறினார்கள் என்பதற்காக கட்சியை விட்டு வெளியேற்றப்படவில்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவசர காலத்தை நீடிப்பது தொடர்பான விவாதம் நடைபெற்றபோது எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க நல்லதொரு உரையை நிகழ்த்தினார்.

ஒவ்வொரு நாடாளுமன்றத்துக்கும் தனது செயற்பாடுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் தீர்மானித்துக் கொள்ளவும் உரிமை உண்டு. இங்கி

காக உரையாடிவ ருகிறார்.

கட்சியின் தொழில் பிரமுகர்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஐ.தே.க.வின் ஆதரவு அமைப்பான சுதந்திர தொழில்சார் பிரமுகர்கள் கழகத்தை அடுத்தவாரம் சந்திக்கவிருக்கிறார் அவர்.

ஐ.தே.கட்சியின் எதிர்பார்ப்பாட்டங் களுக்குநேர் மாறாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) எதிர் பார்ப் பாட்டங்களில் அதிக மக்கள் கூட்டத்தை காணக் கூடியதாகய் இருந்தது. தமது ஆர்ப்பாட்டங்களுக்கு வந்திருந்தவர்கள் பலரை பொலிஸார் துரத்திவிட்டார்கள் என்று ஜே.வி.பியினர் கூறினார் கள். தமது ஆதரவாளர்கள் பலர் நாட் டின் பல பாகங்களில் இருந்தும் பஸ்க ளில் கொழும்புக்கு வந்திருந்தார்கள் என்று அவர்கள் கூறினார்கள். சில சமயங்களில் பஸ்களில் மோப்பம் பிடிப்பதற்காக மோப்ப நாய்கள் வந்து சேரும் வரை மக்கள் பலமணி நேரம் தடுத்து வைக் கப்பட்டிருந்ததாக அவர்கள் கூறினர். ஆனால் இந்தக் குற்றச் சாட்டை பொலிஸார் மறுத்தனர்.

18 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் அனுரகுமார திஸாநாயக்க நல்லதொரு உரையை நிகழ்த்தினார். சமீப காலத்தில் நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட சிறப்பான உரைக ளில் ஒன்று என்று பலர் கூறியுள்ளனர்.

அரசு தரப்பினர் ஏன் கத்துகிறார்கள்?

இன்று ஒரு வரலாற்று முக்கியத்துவமான நாள் என்று அரசதரப்பு உறுப்பினர்கள் கூறினார்கள். நல்ல காரியத்துக்காக மட்டும் நாள்கள் முக்கியத்துவமான தில்லை. மோசமான நிகழ்வுகள் காரணமாகவும் அவை முக்கியத் துவமாவதுண்டு. அப்படியான ஒரு நாள்தான் இது. இன்று ஜனநாயகத்துக்கான இழவுநாள். நாடாளுமன்ற வளாக இடுகாட்டில் அது இன்று புதைக்கப்படுகின்றது. அரசதரப்பு உறுப்பினர்கள் பலர் இன்று ஏன் உரக்க கத்துகிறார்கள் என்பது விளங்குகின்றது ஏனென்றால் எவ்வளவு உரத்து அவர்கள் கத்துகிறார்களோ அந்த அளவுக்கு அரசு தரப்பில் அவர்கள் நீடித்திருப்பது உறுதியாகும்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தின் தவணை நீடிக்கப்படுவதன் மூலம் இனி வரும் காலங்களில் எந்த வொரு சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினரின் குழந்தையும் கூட ஜனாதிபதியாக வருவதற்கு ஆசைப்படு வதாய் இருக்கும்.

இன்று ஜனநாயகம் தோல்வியடைந்து கொண்டு வருகின்றது. அமை

(04 ஆம் பக்கம் பார்க்கவும்)

# ஜனநாயகம் புதைக்கப்பட்டுவிட்டது குமுறுகிறது ஜனதா விமுக்தி பெரமுன

நீக்கப்பட்டு விட்டார். மற்றவர் உதவி பொருளாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். கட்சி செயற்குழுவில் இருந்தும் இருவரும் நீக்கப்பட்டு விட்டனர். இருவருக்கும் கூரியர் சேவை மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஆனால் அவைகளை உடைத்துத் திறந்து பார்த்ததின் பின்னர் ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கூறி திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன.

செனிவிரட்ண மற்றும் குணசேகர ஆகிய இருவருடன் ஏனைய ஐந்து எம்.பிக்களின் எதிர்காலம் ஐ.தே.கட்சியின் செயற் குழுவின் முடிவில் தான் இனித் தங்கியுள்ளது. கடந்த 17 ஆம் திகதி கூடிய கட்சியின் செயற்குழுவில் 18 ஆவது திருத்தத்தை ஆதரித்த கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியை விட்டு விலக்குவது

## நாளை

ஆவணி 29 14.09.2010
செவ்வாய்க்கிழமை
திதி: : ஸப்தமி
பி.இ.04.55 வரை
நட்சத்திரம் : அனுஷம்
மு.இ.08.04 வரை
சுபநேரம் : 10.33-12.03 வரை
ராகுகாலம் : 03.03-04.33 வரை

லாந்தின் கொமன்சபை முதலாவது சார்ள்ஸ் அரசருடன் சிவில் யுத்தம் ஒன்றை நடத்தியது. இந்த உரிமையை நிலை நாட்டுவதற்கு அவரது மகன் 2ஆவது ஜேம்ஸை பதவி நீக்கம் செய்தது. அதன்பின் உலகிலுள்ள எல்லா நாடாளுமன்றங்களுமே இந்த உரிமையை அனுபவிக்கத் தொடங்கின. நாடாளுமன்றத்தின் உரிமையானது அதன் செயற்பாடுகளின் சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்கான தேவையாயிலும் அதன் தீர்மானங்களின் கண்ணியத்திலும் தங்கியுள்ளது என இங்கிலாந்தின் ஹல்ஸ்பரி சட்டங்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் அரசமைப்பும் இந்த உரிமையைக் கொண்டுள்ளது. நாடாளுமன்றமானது அதன் அதிகாரங்கள் சிறப்புரிமைகள் தொடர்பான சட்ட அதிகாரங்களை நேரடியாக செயற்படுத்திக்கொள்ளும் என்று அத்தியாயம் 4(சி) கூறுகின்றது. மேலும் அத்தியாயம் 74 (1) ஆனது நிலையியற் சட்டங்கள் மூலமாக அதன் செயற்பாடுகளுக்கு வழிசெய்கின்றது. இப்போதைய நாடாளுமன்றின் நிலையியற் விதிகளாவன நாடாளுமன்றில் மசோதாக்களை சமர்ப்பிக்கவும் அவைகளை கட்டமாக வெளிப்படுத்தவும் வழி செய்கின்றது. இப்போதைய நாடாளுமன்றில் மசோதாக்களை சமர்ப்பிக்கவும் அவைகளை கட்டமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு முஸ்லிம்களின் வீடுகளைப் புனரமைக்க அரபு நாடுகளின் உதவியைப் பெற்றுத் தாருங்கள்

## அமைச்சர் பௌஸியிடம் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மகஜர்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்களது வீடுகள் அனைத்தும் மீளக்குடியமர முடியாத வகையில் மிக மோசமாகச் சீரழிந்து கிடக்கின்றன.

எனவே எமது மக்கள் மீளக்குடியமர்வதற்கு ஏற்றதாக வீட்டு வசதிகளை ஏற்படுத்தித்தர - புனரமைக்க அரபு நாடுகளின் உதவிகளைப் பெற்றுத்தாருங்கள்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியிடம் மேற்கண்ட கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

மானிப்பாய் வீதி, யாழ். நகரிலுள்ள பெரிய முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல். நிர்வாகத்தினர் கையளித்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் பிற்பகல் பள்ளிவாசலுக்கு வருகை தந்து முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடினார். அதன்போது பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் மௌலவி எம்.எல். லாபீரினால் அமைச்சர் பௌஸியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு :-

2006ஆம் ஆண்டு ஏ-9 வீதி மூடப்பட்டதன் பின்னர் யாழ். மாவட்டத்தில் வசித்துவந்த முஸ்லிம் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் புனித ரம்ழான் மாதத்தில் தத்தமது வீடுகளுக்குச் செல்ல உதவிய அமைச்சர் பௌஸிக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

எமது பள்ளிவாசலை 2002இல் இருந்து புனர் நிர்மாணம் செய்து வருகிறோம். அடுத்த மாதம் ஜும்ஆ தொழுகை நடைபெறவுள்ளது. எனினும் பள்ளிவாசலின் கட்டட நிர்மாணப்பணிகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை. எனவே அதற்கான நடவடிக்கையை எடுத்து எமக்கு உதவ வேண்டும் - என்றுள்ளது. (ஒ-14)

## மாணவிகளின் சைக்கிள் ஓட்டத்தால் வந்தது வினை

தென்மராட்சி, செப். 13

வீதியில் சமாந்தரமாக மூன்று மாணவிகள் சைக்கிள்களில் பயணித்த காரணத்தால், மோட்டார் சைக்கிளில் சென்றவர் அதன் சில்லு மணலில் புதைந்து சறுக்கியதில் தூக்கிவீசப்பட்டுக் காயமடைந்தார்.

புத்தூர் சந்தியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த ஏ.யோகராசா (வயது-60) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-207)

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, செப். 13

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 834ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் உத்தியோகபூர்வ முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி "U" என்ற ஆங்கில எழுத்தும் 05/14/38/51 ஆகிய இலக்கங்களும் 21 எனும் போனஸ் இலக்கமும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்து இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 4 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 294 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,853 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 2,08,293 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

"U" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 31,284 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா 20 ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-6)

# ஐ.தே.கவில் போட்டி....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியாக நடக்கும் கூட்டங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. அரசியல் பழிவாங்கல் நடைபெறுகின்றது. அரச அமைப்புகள் அரசியல் மயமாக்கப்படுகின்றன. ஊடகங்கள் தாக்கப்படுகின்றன. எதேச்சதிகார ஆட்சியின் காரணமாக எங்கும் விசர்த்தனம் தலைவிரித்தாடுகின்றது. இந்த நிலைமை எதிர்கால சந்ததியினராலும் அனுபவிக்கப்படும் என்று அவர் கூறினார்.

18ஆவது திருத்தத்தை ஆதரித்துப் பேசியவர்களில் பிரதமர் டி.எம்.ஜயரட்ண, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முதலியவர்கள் குறிப்பிடக்கூடியவர்கள். பிரதம மந்திரி பேசும் போது 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தன புதிய அரசமைப்பைத் தனது தேவைக்காக கொண்டுவந்தார். பொதுமக்கள் நலனுக்காகவன்று என்றார்.

30 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி ராஜபக்ஷ பயன்படுத்தியிருக்கிறார்.

### மக்கள் ஆணையை நிறைவேற்ற

தேர்தல்களை பின்போடுவதற்கு அதிகாரங்களை அவர் பயன்படுத்தவில்லை என்றார். அமைச்சர் பசில் ராஜபக்ஷ பேசும் போது மக்களின் ஆணையை நிறைவேற்றுவதற்காகவே இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகின்றது. மூன்றாவது தடவையும் ஒரே மனிதரை தெரிவு செய்ய மக்கள் விரும்புகிறார்கள் என்றால் அதற்கு இடமளிக்கப்பட வேண்டும். அரசமைப்புச் சபையானது தொடர்ந்து பல வருடங்களாக செயல்பட முடியாமல் போய்விட்டது. அதற்கு முட்டுக்கட்டைகள் இருந்தன. இந்தத் திருத்தத்தின் மூலம் நாடாளுமன்ற சபை உருவாக்கப்படுகின்றது. இதனால் நாடாளுமன்றத்துக்கு அதிகப் பொறுப்புகள் வருகின்றன. பிரதம மந்திரியும் எதிர்க்கட்சித் தலைவரும் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்க முடியும். 17 ஆவது திருத்தத்தின் மூலம் ஏற்பட்டிருந்த பிரச்சினையை இது இலகுவாக்கும் இரண்டாம் தவணையில் மக்களுக்குப் பணியாற்றுதவற்காக ஜனாதிபதிக்கு உறுதியான அரசு ஒன்று தேவைப்படுகின்றது. இந்த நோக்கத்தை அடைவதற்கு இப்போதைய திருத்தங்கள் உதவியாய் இருக்கும் என்றார்.

### பொன்சேகாவின் கருத்துக்கு யு.என்.பி எதிர்ப்பு

முன்னாள் ராணுவத்தளபதி சரத் பொன்சேகா கூறியிருந்த சில கருத்துக்களுக்கு அடுத்தநாள் ஐ.தே.க. கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

''மிகப்பலம் வாய்ந்த எதிர்க்கட்சி நாடாளுமன்றம் வராமல்போனமை துரதிருஷ்டமாகும். நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாடாளுமன்றத்துக்கு வந்து எமது கருத்துக்களை நாம் வெளியிட வேண்டும். 18 வது திருத்தம் அரசமைப்பு சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கப்போகிறது. அரசு புரட்சிகளுக்கும் சதித்திட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது. மார்கோஸ் மற்றும் சுகார்ட் டோவுக்கு என்ன நேர்ந்தது என்பதை நாம் கண்டோம் என்று அவர் கூறியிருந்தார்.

அடுத்த நாள் அவசரமாகக் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் கூட்டத்தில் ஐ.தே.க.வின் தயாசிறிஜயசேகர பேசும் போது பொன்சேகா தமது வாயை பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அது அவருக்கு நிறையவும் கஷ்டங்களை கொடுத்துள்ளது என்றார் அவர்.


## மரண அறிவித்தல்கள்

### மிக்கேல் மரியரெத்தினம் (யோகமணி)



யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கேல் மரியரெத்தினம் (யோகமணி) கடந்த வியாழக்கிழமை (09.09.2010) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் மிக்கேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மிக்கேல் யேசுதாசன் மற்றும் டாக்டர் மிக்கேல் தூயமணி (அமெரிக்கா), மிக்கேல் முத்துக்குமார் (மார்ஷல் வீடியோ), காலஞ்சென்ற மிக்கேல் புலேந்திரன் மற்றும் யேசுதாசன் வசந்தமாலை (பிரான்ஸ்), ஜெயக்குமார் முத்து ராணி, காலஞ்சென்றவர்களான மிக்கேல் தயாளன், ஜெயக்குமார் சோதிமலர் ஆகியோரின் அன்புத் தாயும் யேசுதாசன் ஜசோதா, தூயமணி நிறஞ்சினி, முத்துக் குமார் மஞ்சு, சிங்கராயர் யேசுதாஸ், எசக்கியர் ஜெயக்குமார் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (13.09.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு பூதவுடல் நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 02, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
0771896628 முத்துக்குமார் (இலங்கை)
7182062769 தூயமணி (அமெரிக்கா)
0622455131 ஜேசுதாஸ் (பிரான்ஸ்)

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்.

(103282)

### திருமதி வள்ளியம்மை செல்வராசா

(ஓய்வுபெற்ற மருத்துவ பரிசாரகர் - மறவன்புலோ)



மறவன்புலோ மேற்கு, தோப்பைப் பிறப்பிடமாகவும் 51/33 A, Swarna Road, Wellawatteயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை செல்வராசா நேற்று முன்தினம் (11.09.2010) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியம், புஸ்பராணி காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் வனதராணி, தவநேசன், சுபநேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஸ்ரீரவீந்திரா, யசிந்தா, சாந்திகுமாரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சரணிஜா, லக்ஷியன், மெலிசா, மிகேல், அ்கிசா, சானு, ஆதுர்ஸ், விதுர்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மூளாய் வீதி, மூளாய் சுழிபுரத்தில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் இன்று, (13.09.2010) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் வீதி, மூளாய்,
சுழிபுரம்.
T.P. 0213210686

(103284)

தகவல் :
பிள்ளைகள்,
மருமக்கள்.



## துயர் பகிர்கின்றோம்



எமது நண்பர்களான உதயலிங்கம் (உதயன்), புஸ்பலிங்கம் (புஸ்பா) ஆகியோரின் அன்புத் தாயார்

திருமதி இராசலிங்கம் சிவமணிதேவி

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பொ.ஜெயந்தன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(103281)





R.K. and SONS Electronics

Main Street Nelliyady

3ஆவது வருடத்தில் கால் பதிப்பதை வாடிக்கையாளர், நண்பர்களுக்கு தெரிவிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

★ இதை முன்னிட்டு இன்றும் நாளையும் (13, 14) மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

R.K. and Sons
உரிமையாளர்.

(103275)



கணினி திருத்தமும் விற்பனையும்

உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம். (Computer Repair) தொ.பே. 0777483840 உத்தரவாதத்துடன் புதிய கணனி கள் நியாய விலையில் விற்பனைக்கும் உண்டு.(Sales)



தவறிவிட்டது

குமாரத்தியாணம் அரங்கன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [772762070 V], சாதி அனுமதிப் பத்திரம் அடங்கலாக இதர முக்கிய ஆவணங்களைக் கொண்ட மணிபர்ஸ் ஒரு தொகைப் பணத்துடன் 12.09.2010 அன்று கச்சேரி பின்வீதி பேரின்பநாயகம் லேன் ஊடாக பென்தகோஸ் சேர்ச் வரை வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இல.198, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது பின்வவரும் தொலைபேசி எண்ணுடனே தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே. 0773854671, 0779352968



வீடு வாடகைக்கு

விருந்தினர் விருதியாகப் பாவிக்கக்கூடிய நவீன வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு யாழ். மாநகர சபை எல்லைக்குள் உண்டு.

தொடர்பு : 0783260261



STUDY IN UK

VISA வின் முன்போ அல்லது பின்போ எந்த விதமான கட்டணமும் அறவிடப்படமாட்டாது

U.K., CYPRESS, MALAYSIA, BELARUS, IRELAND

ஆகிய நாடுகளில் தொழில் வாய்ப்புடன் கூடிய அரிய வாய்ப்பு

★CYPRESS 100% VISA CURRENTLY (VISA பெற்ற பின் College Part Payment செலுத்தும்வசதி)
★ Part time Job Arrangement
★ Sponsor Arrangement
★ O/L இல் ஆங்கில அறிவு இல்லாதவர்களும் U.K. செல்லக்கூடிய வசதி
★ Sponsor இல் நிராகரிக்கப்பட்ட Visa க்களுக்கு 100% உத்தரவாதத்துடன் Sponsor ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.
★ Sponsor ஆல் Visa நிராகரிக்கப்பட்டால் Sponsor Payment மீளளிக்கப்படும்.
★ சகல நாடுகளுக்குமான Visa பெற்றுக்கொள்வதற்கான ஆவணங்கள் தகுந்த முறையில் செய்து தரப்படும்.

IELTS அவசியமில்லை



533, ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்டம், (ஆரியகுளம் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0778098592, 0214910436( Office)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் '' அன்னையின் மடியில்'' எனும் முதலாவது சர்வதேச பழைய மாணவர் மாநாடு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதை முதலா வது படத்திலும், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா, பழைய மாணவர் சங்க யாழ். கிளையின் தலைவர் கப்டன் நா. சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துவரும் படங்களிலும் தேசிய மட்டத்தில் 15 வயது பிரிவினருக்கான துடுப்பாட்ட போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்ற வீரர்கள் விருந்தினர்களுடன் காணப்படுவதை ஆறாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்: டிலீப்)*

# தென்மராட்சியில் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய கழிவுப் பொருள்களை அகற்ற நடவடிக்கை

## சாவகச்சேரி நகரசபை விசேட ஏற்பாடு

தென்மராட்சி,செப்.12

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் சாவகச்சேரி நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றில் விசேட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி வரை தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளனர்.

டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய கழிவுப் பொருள்களை உள்ளூராட்சி சபைகளின் வாகனங்கள் மூலம் அகற்றுவதற்கான ஏற்பாடுகளையும் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

பின்வரும் இடங்களில் வாகனங்கள் மூலம் கழிவுப் பொருள்களை ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பொலித்தீன் பைகள் போன்றவற்றை வீதியோரங்களில் வைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை கல்வயல் மற்றும் மிருசுவில் எழுதுமட்டுவாழ் கிராம அலுவலர் பிரிவுகளிலும் நாளை செவ்வாய்க் கிழமை நுணாவில் மேற்கு, நுணாவில் கிழக்கு, கொடிகாமம், உசன் பிரிவுகளிலும் நாளை மறுதினம் புதன்கிழமை நுணாவில் மத்தி, சாவகச்சேரி நகரம், கச்சாய் அல்லாரை, விடத்தற்பளை பிரிவுகளிலும் எதிர்வரும் 16ஆம் திகதி மண்டுவில், சாவக்சேரி வடக்கு, மீசாலை வடக்கு, மந்துவில் பிரிவுகளிலும் 17ஆம் திகதி மீசாலை மேற்கு, மீசாலை கிழக்கு, நாவற்குளி, மறவன்புலோ பிரிவுகளிலும் 18ஆம் திகதி சங்கத்தானை, கோயிற்குடியிருப்பு பிரிவுகளிலும் 20ஆம் திகதி இயற்றாலை, குடமியன், நாவல்காடு பிரிவுகளிலும் 28ஆம் திகதி வரணி வடக்கு, வரணி மத்தி 23ஆம் திகதி மட்டுவில் பிரிவுகளிலும் 24ஆம் திகதி சரசாலை பிரதேசத்திலும் இத்தகைய கழிவுப் பொருள்களை அகற்றும் மேற்கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-207)




# சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலமர்வு

நாவற்குழி,செப்.13

நீதியமைச்சின் அனுசரணையுடன், 'சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்புதல்' எனும் செயற்திட்டத்தின் கீழ் வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இருநாள் செயலமர்வு எதிர்வரும் 16 ஆம்17 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

16 ஆம் திகதி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், வெளிக்கள அதிகாரிகள் ஆகியோருக்கான செயலமர்வு நடைபெறவுள்ளது.

17 ஆம் திகதி நீர்வேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் கிராம அபிவிருத்திச் சங்க மாதர் கிராம அபிவிருத்திச் சங்க சனசமூக நிலைய விவசாய சம்மேளன முதியோர் சங்க பிரதிநிதிகள் பங்குபற்ற உள்ளனர். (6-121)

# திருநெல்வேலியில் விபத்து: ஓட்டோ சாரதி கைது

யாழ்ப்பாணம், செப்.13

பலாலி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஓட்டோவும், ஆடியபாதம் வீதியூடாக கொக்குவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த சைக்கிளும் திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை மோதி விபத்துக்குள்ளாகின.

சைக்கிளில் பயணம் செய்த வாய்பேச முடியாத இளைஞன் விபத்தின் போது கீழே விழுந்தார். பின்னர் எழுந்து பாய்ந்து ஓட்டோ சாரதியைக் கடுமையாகத் தாக்கத் தொடங்கினார். தொடர்ந்து வாய்பேசமுடியாத இளைஞன் தாக்குதலுக்கு இலக்கானார். இக்கைகலப்பு நடந்தவேளை அருகில் கடமையில் இருந்த கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சேர்ந்தனர்.

விசாரணையின்போது ஓட்டோச் சாரதியான இளைஞர் மதுபோதையில் இருந்தது தெரியவந்தது. பொலிஸார் அவரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச் சென்றனர். ஓட்டோவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஓ-15)

# பெருந்திருவிழா

தென்மராட்சி,செப்.13

சாவகச்சேரி செருக்கல்பதி பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (எ-207)

# கைதிகள் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்.சிறையிலிருந்து 24 பேர் விடுதலை





யாழ்ப்பாணம், செப். 13

கைதிகள் தினத்தை முன்னிட்டு பலாலி வேலைத்தளத்தில் இருந்த 4 சிங்களக் கைதிகள் உட்பட 24 சிறைக்கைதிகள் யாழ்ப்பாணத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். சிறைச்சாலையில் இருந்து 16 ஆண் கைதிகளும் 4 பெண்கைதிகளுமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

சிங்களக் கைதிகள் நால்வரும் நேற்றுக் காலை அனுராதபுரத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அவர்கள் அங்கு வைத்து விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (எ-7)

# பொம்மை வெளிப்பகுதி அபிவிருத்தி; அமைச்சர் பௌஸி நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச். எம்.பௌஸி பொம்மை வெளிப்பகுதிக்கு



விஜயம் செய்து அப்பகுதியின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

அமைச்சர் பௌஸி பொம்மை வெளிப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேரில் கண்டறிந்தார். பொம்மைவெளி பள்ளக் காணியாகக் காணப்படுவதால் அங்குள்ள மக்கள் மழை காலங்களில் பெரும் வெள்ளம் காரணமாக இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படுவது தெரிந்ததே.

எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் இங்குள்ள மக்களை அயலிலுள்ள மேட்டு நிலங்களுக்கு மாற்றி அதன் பின்னர் அப்பகுதியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக யாழ். மாநகர ஆணையாளர் மு.வே.சரவணபவவுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

அத்துடன் இப்பகுதியிலுள்ள இராஜாளிக் குளத்தையும் பார்வையிட்ட அமைச்சர் அக்குளத்தை அகலமாக்கி நன்னீரைச் சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணித்திருந்தார்.

இதையடுத்து இதற்கான பிரேரணையை யாழ். மாநகர சபையில் சமர்ப்பிக்கப் பட்டு இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், யாழ். மாநகரசபை பிரதி மேயர் இளங்கோ, மாநகரசபை உறுப்பினர் மௌலவி சுபியான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ-16)

# இராமாவில் முகாமில் இன்னமும் 300 குடும்பங்கள் தங்கவைப்பு

யாழ்ப்பாணம், செப். 13

வடமராட்சி கிழக்கின் மருதங்கேணி பிரதேச சபைக்கு உட்பட்ட நாகர்கோயில், வெற்றிலைக்கேணி, கேவில், போக்கறுப்பு போன்ற கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் இதுவரை மீளக்குடியமர்த்தப்படாமல் இராமாவில் நலன்புரி முகாமிலேயே தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போர்ச்சூழ்நிலையின்போது இராமாவில் முகாமில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்ட குடும்பங்களில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 1,143 அங்கத்தவர்கள் இவ்வாறு அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படாமல் தங்கவைக் கப்பட்டுள்ளார்கள். வடமராட்சி கிழக்கில் தாளையடி வரையான பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

எனினும் எப்போது எம்மையும் சொந்தக்கிராமங்களில் குடியமர்த்துவார்கள் என ஏக்கத்துடன் [illegible] முகாமில் இன்னமும் தங்கியுள்ள பொது மக்கள். (ஐ-314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி நிறுவுநர் மழவராயர் கந்தையா அவர்களின் நிறுவுநர் நாள் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் பக்தி பூர்வமாக இடம்பெற்ற போது திருவுருவப் படம் சோமாஸ்கந்தர் ஆலயத்தில் பூஜையின் பின் வீதி உலா வாக எடுத்துவரப்பட்ட போது பிரதேச பொது மக்கள் மாலையிட்டு வணக்கம் செலுத்துவதையும் கல்லூரி முதல்வர் இ.இராஜமகேந்திரன் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதையும் பாடசாலை பிரதி அதிபர் வே.அரசகேசரி, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.தர்மலிங்கம் உரை நிகழ்த்துவதையும் நிறுவுநரை வாழ்த்தும் பாடலை பாடசாலை மாணவிகள் இசைப் பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்களின் ஒருபகுதியினரை படங்களில் காணலாம். *(படங்கள்: கோப்பாய் செய்தியாளர்)*

### வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம்:
# கிளிநொச்சி செயலகத்தில் இன்று தெரிவான பயனாளிகளுக்குக் கொடுப்பனவு

கிளிநொச்சி, செப்.13

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கொடுப்பனவுகள் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் கிளிநொச்சி செயலகத்தில் இயங்கும் 'நேர்ப்' அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட விருக்கின்றன.

இன்று காலை 8.30 மணி முதல் முற்பகல் 10 மணிவரை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கும்-

முற்பகல் 10 மணிமுதல் முற்பகல் 11 மணிவரை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கும்-

முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கும்-

நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை கண்டாவளை பிரதேச செயலா பிரிவுக்கும்-

கொடுப்பனவு வழங்கப்படவிருப்பதாக 'நேர்ப்' பிரதித் திட்டப் பணிப்பாளர் க.தெய்வேந்திரம் தெரிவித்தார். (ஒ-ஐ)


## இலங்கை மின்சாரசபை - யாழ்.பிரதேச அலுவலகம்
### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாள்களில் உயர்அழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகளை செய்யும் பொருட்டு காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 14.09.2010 (செவ்வாய்க்கிழமை) | சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி. |
| 16.09.2010 (வியாழக்கிழமை) | சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி. |
| 18.09.2010 (சனிக்கிழமை) | உடும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதி. |

*"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"*

(சி/570795)


## பிரதேச செயலக உப அலுவலகத்தை மீள இயங்க வைக்க நடவடிக்கை

வடமராட்சி, செப். 13

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து, பருத்தித்துறை பிரதேச செயலக செம்பியன்பற்று உப அலுவலகத்தை மீள இயங்க வைப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மருதங்கேணியில் உள்ள சேதமடைந்த செம்பியன்பற்று உப அலுவலகத்திருந்த வேலைகள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் உத்தரவுக்கமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

சேதமடைந்த அலுவலகத்திற்கு கூரை, கதவுகள், ஜன்னல் அமைப்பதுடன் மற்றும் கட்டட திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் வேலைகள் பூர்த்தியானதும், அநேகமாக அடுத்தவாரம் முதல் பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-236)

### சேர்த்து வாசிக்கவும்

நேற்றைய பதிப்பில் 10 ஆம் பக்கத்தில் வெளியான திருமதி வள்ளிப்பிள்ளை வன்னியசிங்கம் என்பவரின் மரண அறிவித்தலில் ஆறுமுகலிங்கம் (கனடா) என்பவரின் தாயார் என்பது தவறுதலாக விடுபட்டுவிட்டது. அதைச் சேர்த்து வாசிக்கவும்.


## வாழ்த்தி மகிழ்கின்றோம்



இளம்வயதில் பேராசிரியராகப் பதவி உயர்வுபெற்று மணிமகுடம் சூடியுள்ள எங்கள் ஆசானைப் பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர்

**கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்**

தமிழ்த்துறையின் தலைமுறைவாரிசாக அண்மையில் 'பேராசிரியர்' என்ற உயர்ந்த நிலைக்குத் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

தமிழ்ச் சிறப்புக் கலை கற்று முதலாம் வகுப்பில் (First Class) தேர்ச்சிபெற்று பட்டமளிப்பு விழாவில் சகலதுறைச் சிறந்த மாணவனாகப் (All Round Performance) பல்வேறு விருதுகளைப்பெற்று பதவியிலுயர்ந்து தமிழாய்வில் ஈடுபட்டு கலாநிதிப் பட்டத்தையும் விரைவிலேபெற்று இன்று 'பேராசிரியராக' உயர்வு பெற்றுள்ள எங்கள் ஆசான், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் பயின்ற பெருமைக் குரியவர்.

அண்மையில் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிலும் கட்டுரை படித்த பேராசிரியர், பெரும் பதவிகளைப் பெற்றபோதும் பெருமை கொள்ளாது அனைவர் மீதும் பரிவுடனும் இயல்பாகவும் பழகுவது அவருக்கே உரிய தனித்துவமாகும். புகழ்பூத்த பேராசிரியர்கள் சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, ஆ.வேலுப்பிள்ளை, அ.சண்முகதாஸ், எஸ்.சிவலிங்கராஜா என்ற வரிசையில் எங்கள் ஆசானும் இடம்பெறுவது பெருமைக்குரிய விடயமாகும் பேராசிரியர் எல்லா நிலைகளிலும் சிறப்படைய வாழ்த்துகிறோம்.

தமிழ் முதுகலைமாணி,
இரண்டாம் அணி மாணவர்கள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(103195)



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 29 வயது, செவ்வாய்குற்றமற்ற கிரக பாவம் 5 லண்டனில் Quantity Surveyor கல்வி பயிலும் (Student Visa) 5'7'' உயரமுடைய மணமகனுக்கு லண்டன் அல்லது ஐரோப்பிய நாடுகளில் பிரஜா உரிமை (Nationality) உடைய மணமகள் தேவை.

தொடர்பு: 0771536758



## APPLICATION FOR TRAINING OF PSYCHOLOGICAL COUNSELLORS

The applications are called for training of counsellors. This is a one year, week-end (Saturday & Sunday) course that consists of 450 hours. The applicants should have the following prerequisites to apply for this course.

1. Knowledge of English as to read, write and understand
2. A pass in Advanced Level
3. Age between 25 and 45 years
4. Interested in social Activities.

The applicants will have to buy the special application form at our office and submit them before the 25th of September 2010. Only 25 applicants will be selected to follow this training. The forms are available at our office

**For further details please contact:**

**"AHAVOLI"**
**INSTITUTE OF COUNSELLING PSYCHOLOGY**
**Affiliated to National University of Ireland, Galway**
**St. Patrick's Road, Jaffna.**
**Contact No:- 021-222-2856**


## மரண அறிவித்தல்கள்

### இளையவி பொன்னம்பலம்

முடவேம்படி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி பொன்னம்பலம் நேற்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் தர்மராசா, காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முடவேம்படி, சுன்னாகம்.* (103272) தகவல்: பொ.கணபதிப்பிள்ளை (மகன்).

### செல்லத்துரை யோகலிங்கம்



வட்டுக்கோட்டை, மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகலிங்கம் நேற்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் இளைய புதல்வரும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் ஆசை மருமகனும் ராதாவின் அன்புக் கணவரும் பிரதீபன் (பிரான்ஸ்), வாமதீபன் (டென்மார்க்), பார்த்தீபன், றமணதீபன், துஸ்யந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவநிதி, சோபனா ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதுசனின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவராமலிங்கம் மற்றும் தவேஸ்வரி, ஜெகநாதலிங்கம், இராசலிங்கம், புவனேஸ்வரி, பஞ்சலிங்கம், ரட்ணேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் பரமானந்தம், காலஞ்சென்ற சந்திரா மற்றும் ரட்ணா நிர்மலா, அனுசுயா, ரவிகரன் (லண்டன்) பிரபாகரன் (லண்டன்), கலாதேவி, ராஜினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கணேசலிங்கம் - தபோதினிதேவி, அம்பிகாபதி - சரஸ்வதி ஆகியோரின் சம்பந்தியும் பத்மநாதன், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற ரவிச்சந்திரன் மற்றும் தில்லைநடராஜா, சூரியகுமாரி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (13.09.2010) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாவடி தெற்கு, கொக்குவில்.* (103278) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிஹின் லங்கா விமான சேவை நிறுவனத்தின் கிளை நேற்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
விருந்தினர்களை வரவேற்று அழைத்துச் செல்வதையும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் பராம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அருகில் நிற்பதையும் மிஹின் லங்கா நிறுவனப் பணிப்பாளர் கபில சந்திரசேன உரையாற்றுவதையும் முதலாவது விமானச் சீட்டை அமைச்சர் பௌஸி பெறுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: சுகந்தன்)*

# ஒழுக்கச் சீர்கேடுகளில் இருந்து எமது மக்களைப் பாதுகாக்க சமூக, சமயத் தலைவர்கள் முன் வரவேண்டும்

## திருமறைக் கலாமன்றப் பணிப்பாளர் மரியசேவியர் அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்டத்தில் ஒழுக்க சீர்கேடுகள் தற்போது அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே எமது மக்களை அதிலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது சமூக, சமயத் தலைவர்களின் தார்மீகப் பொறுப்பாகும்.

திருமறைக் கலாமன்றத்தின் பணிப்பாளர் பேராசிரியர் வண பிதா.என்.எம். மரியசேவியர் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

திருமறைக் கலாமன்றத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தின் தற்போதைய சூழலில் எமது பண்பாட்டுக் கூறுகள் சீரழிவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதை அறிய முடிகிறது. அதிலிருந்து எமது மக்களை நாம் பாதுகாக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அதுமட்டுமன்றி வன்னிப் பகுதியில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு அவர்களது தேவைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. அவர்கள் பல்வேறு துன்ப, துயரங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் ஆடம்பர நிகழ்வுகளையும், பண்பாட்டு அம்சங்களற்ற கேளிக்கைகளையும் நடத்துவதால் எந்தவிதத்திலும் அவை மக்களுக்குப் பயனளிக்கப் போவதில்லை. அவை மென்மேலும் மக்களைப் பாதிப்பதாகவே இருக்கும்.

எமது பாரம்பரியம், பண்பாடுகள் எவை என அடையாளப்படுத்தி அவை பாதுகாக்கப்படவேண்டும். பண்பாட்டு பெறுமானமுள்ள நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும். அவை எமது மக்களின் தனித்துவத்தைப் பாதுகாப்பதாகவும் வளப்படுத்துவதாகவும் இருக்கும்.

அபிவிருத்தி என்ற பெயரில் எமது மரபுரிமைகள், கலாசார சின்னங்கள் அழிவடையும் அபாயம் தற்போது ஏற்பட்டுள்ளது. அவை அழிக்கப்படுவது அனுமதிக்க முடியாது.

எமது மக்களதும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுக்கும் கருத்துக்கும் முக்கியம் கொடுத்து பழமையைப் பாதுகாப்பதன் ஊடாக நவீனமயப்படுத்தப் படவேண்டும்.

இவற்றைக் கருத்திற்கொண்டே திருமறைக் கலாமன்றம் செயற்பட்டு வருகிறது. எமது பண்பாட்டுப் பெறுமானங்களை மேலும் அர்த்த முனைப்புடன் எமது அமைப்பினால் 'முத்தமிழ் சங்கமம்' எனும் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

பண்பாட்டுப் பாரம்பரியங்களில் மக்களுக்குப் பற்றுதலையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் முத்தமிழ் சங்கமம் இடம்பெறவுள்ளது-என்றார்.

இந்தச் சந்திப்பின்போது திருமறைக் காலாமன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜே.ஜோன்சன் ராஜ்குமார், செயலாளர் சூ.சதீஸ்குமார், ஊடக இணைப்பாளர் கி.செல்மர் எமில் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (6-14-86)

# வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திக்கு உதவ உலக வங்கி முன்வருகை

யாழ்ப்பாணம்,செப்.13

வடமராட்சி கிழக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து மக்களின் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்.செயலகத்தில் அரச அதிபருக்கும் உலகவங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே உலக வங்கிப் பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவுவதாக வாக்குறுதியளித்தனர்.

இந்த அபிவிருத்திப் பணிகளில் முதற்கட்டமாக மருதங்கேணி வைத்தியசாலை, சோரன்பற்று பாலம், வீதிகள் என்பவை புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான மதிப்பீட்டுப் பணிகள் யாவும் நிறைவடைந்ததும் உலகவங்கி அதற்கான நிதியை அரச அதிபரிடம் கையளிக்கும்.

இதேவேளை வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட 353 குடும்பங்களும் நாளை செவ்வாய்க்கிழமை தமது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவுள்ளனர். (6-15)

# நீர்வேலி குறுக்கு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

கோப்பாய்,செப்.13

நீர்வேலி குறுக்கு வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதாகப் பிரதேசமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வீதியில் ஆங்காங்கே பொறிகிடங்குகள் போன்ற பெரிய குழிகள் காணப்படுவதுடன் கற்களும் வெளிக்கிளம்பி வீதியில் சிதறிக் காணப்படுகின்றன.

இவ்வீதியை அதிகளவில் விவசாயிகளே பயன்படுத்தி வருவதால் அவர்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப் படுத்துவதில் பல பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் விபத்துக்களும் நிகழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனமெடுத்துச் சீர்படுத்தித் தருமாறு இப்பிரதேச விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (6-72)

# நேற்று மழை

கோப்பாய்,செப்.13

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை சுமாரானளவில் மழை பெய்துள்ளது.

இதனால் இப்பிரதேசத்தில் குளிர்ச்சி ஏற்பட்டதுடன் விவசாயச் செயற்பாடுகளுக்கும் நன்மை கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (எ-72)




# அதிகரித்துவரும் காசநோயைக் கட்டுப்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் காசநோயைக் கட்டுப்படுத்தும் முகமாக பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் என்பவற்றை வெளியிட்டு வருவதாகக் காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இருவாரங்களுக்கு மேல் இருமல் இருப்பின் சளிப் பரிசோதனை செய்யவேண்டும் எனவும் குடும்பத்தில் ஒருவருக்கு காசநோய் ஏற்படுமானால் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் எனவும் டாக்டர் யமுனானந்தா மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். இவ்வாறு சிகிச்சை பெறுவதன் மூலம் காசநோயினை நூறு வீதம் முற்றாகக் குணப்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (6-315-317)

# திருமறைக் கலாமன்றத்தின் 'முத்தமிழ் சங்கமம்' போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.திருமறைக் கலாமன்றம், தமிழ் மக்களுடைய கலை, கலாசார பண்பாட்டை மேம்படுத்தும் முகமாக 'முத்தமிழ் சங்கமம்' நிகழ் வொன்றை இம்மாதம் 25ஆம் திகதி முதல் நடத்த ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளது.

இயல், இசை, நாடகம் என முத்தமிழுக்கும் இடமளித்து நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை யாழ்.மாவட்டத் திருமறைக் கலாமன்றம் கோரியுள்ளது.

16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட அனைவரும் போட்டிகளில் கலந்துகொள்ள முடியும்.

இயல்துறையில் தேச வழ்மை என்னும் பொருளில் 3 நிமிடங்களுக்கான பேச்சுப் போட்டியும்

இசைத்துறையில் 3 நிமிடங்களுக்கான பண்ணிசைப் போட்டியும்

நாடகத்துறையில் 'எமது பண்பாட்டை பாதுகாப்போம்' என்ற தலைப்பில் 7 நிமிடங்களுக்கான நாடகப் போட்டியும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள், அமைப்புகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் 'திருமறைக் கலாமன்றம் இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது. (6-14-86)

# தொலைத்தொடர்புக் கோபுரம் அமைக்கப்படுவதால் இடம்மாறும் முன்பள்ளி, பூங்கா, சனசமூக நிலையம்

சண்டிலிப்பாய்,செப்.13

தொலைத்தொடர்புக் கோபுரத்தை அமைப்பதற்காக மானிப்பாய் மேற்கில் இருபது வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் சனசமூக நிலையம், முன்பள்ளி, சிறுவர் பூங்கா என்பவற்றை வேறு இடத்திற்கு மாற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலால் மானிப்பாய் மேற்கில் இயங்கிவந்த தொலைத் தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் இயங்காமல் இருந்தது.

இதனால் தொலைத்தொடர்பு நிறுவனத்திற்குச் சொந்தமான காணியில் இப்பகுதி மக்களின் முயற்சியினால் திருவள்ளுவர் சனசமூக நிலையம், முன்பள்ளி, சிறுவர் பூங்கா ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

தற்போது நாட்டில் அமைதிச் சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து மக்களின் நலன்கருதி தொலைத்தொடர்பு சேவை விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் மானிப்பாய் மேற்கில் தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலையம் அமைந்திருந்த இடத்தில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப் படவிருக்கின்றது. இதனால் இருபது வருடங்களுக்கும் மேலாக இயங்கிவரும் சனசமூக நிலையத்தையும் முன்பள்ளியையும் இக்காணியில் இருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டது.

இத்திடீர் உத்தரவைத் தொடர்ந்து நிர்வாகத்தினர் சனசமூக நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (6-115)

# வறுமைக் கோட்டுக்கு கீழ்பட்ட மக்களுக்கு இலவச சட்ட உதவி

நாவற்குழி,செப்.13

மீளக்குடியேறிய மக்களுக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள சட்ட உதவி நிலையம் சட்ட உதவிகளை வழங்கி வருகின்றது.

வறுமைக் கோட்டுக்கு கீழ்பட்ட இந்த மக்களுக்கு உரித்தான காணிகளின் தொலைந்துபோன உறுதிகளை மீளப்பெற உதவுவதுடன், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு சட்ட உதவியை வழங்குவதுடன் தாபரிப்புப் பணத்தைப் பெறவும் உதவுகின்றது.

வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்களுக்கு எவ்வித பணமும் பெறாமல் இலவச சட்ட உதவிகளை வழங்கும் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பொது மக்கள் பலரும் வரவேற்றுள்ளதுடன் பாராட்டும் தெரிவித்துள்ளனர். (6-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இறைமையை வெளிப்படுத்தவே அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரப்பட்டது

## அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

''மக்கள் தமது இறைமையை முழுமையாக வெளிப்படுத்தவே அரசமைப் பில் திருத்தம் கொண்டுவரப்பட்டது.''

- இவ்வாறு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற 18ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் பேசியவை வருமாறு:-

இந்த அரசமைப்புத் திருத்தத்தினூடாக 12 நோக்கங்களை அடைய எதிர்பார்க்கின்றோம். மக்களின் இறைமையை செயற்படுத்துவதற்கு ஏதும் தடை இருந்தால் அதனை முதலில் அகற்ற வேண்டும்.

மக்களை கருத்தில் கொண்டதாகவே இலங்கைக் குடியரசின் இறைமை காணப்படுகிறது என அரசமைப்பின் 3ஆவது சரத்துக் கூறுகிறது. மக்கள் இறைமையை செயற்படுத்த வேண்டிய மற்றும் எவ்வாறு அனுபவிக்கப்படுகிறது என்பது குறித்து அரசமைப்பின் 4ஆவது அத்தியாயம் குறிப்பிடுகிறது. மக்களின் அரசமைப்பு ரீதியான அதிகாரம் நாடாளுமன்ற உறுப்பி னர்களைக் கொண்ட நாடாளுமன்றத் தினூடாகவே வெளிப்படுத்தப்படுகிறது. சர்வஜன வாக்கொடுப்பு நடத்தப்படும்போது கூட மக்களின் இறைமை அவர்கள் அளிக்கும் வாக்கினூடாக வெளிப்படுகிறது.

நாட்டின் பாதுகாப்பு அடங்கலான மக்களின் நிறைவேற்று அதிகாரம், மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி யினூடாக அமுல்படுத்தப்படுகிறது. அதேபோன்று அரசமைப்பினூடாக உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களினூடாக மக்களின் நீதிமன்ற அதிகாரம் செயற்படுத்தப் படுகிறது.

அவ்வாறாயின் மக்களின் நிறைவேற்று அதிகாரத்தை வெளிப்படுத்துவதற்கும் அவர்களின் இறைமையைச் செயற்படுத்தவும் தடை காணப்பட்டால் அதனை நீக்குவது நாடாளுமன்றத்திலுள்ள மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். அதனை முழுமையாகச் செயற்ப்டுத்துவதற்கு அரசமைப்பின் 31 (2) மற்றும் 92 (ஆ) ஆகிய சரத்துக்கள் தடையாக உள்ளன. அவற்றை நீக்குவதன் மூலம் மக்களின் இறைமையை முழுமையாக வெளிப்படுத்த முடியும். இதனூடாக எவருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை வழங்க மக்களுக்கு இயலும்.

ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு பல தகுதிகள் தேவை. மக்கள் இரு தடவைகள் ஜனாதிபதியாக தெரிவு செய்திருக்கவேண்டும் என்பது அதில் முக்கியமான தகுதி தகைமையாகும். ஒருவரை மக்கள் ஒரு தடவையோ - இரு தடவையோ - மூன்று தடவையோ அல்லது நூறு தடவை நிராகரித்திருந்தாலும் அவ ரால் திரும்பத் திரும்பப் போட்டியிடலாம். ஆனால், மக்கள் இரு தடவை தெரிவு செய்திருந்தால் அதனை தகுதியின்மையோக கருதப்படுகிறது. அந்தத் தடையை யே நாம் முதலில் நீக்கியுள்ளோம்.

அரசமைப்பின் 42ஆவது சரத்து ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அந்தப் பொறுப்பை மேலும் பலப்படுத் தும் வகையிலே ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு கட்டாயம் சமுகமளிக்க வேண் டும் என அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, 17ஆவது அரசமைப்புத் திருத்தத்திலுள்ள குழப்பங்களை தீர்ப்பது அடுத்த நோக்கமாகும். கடந்த 9 வருடங்களாக 17 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. பல சந்தர்ப்பங்களில் இந்தத் திருத்தம் நடைமுறைச் சாத்தியமற்றதாகவே புலனானது. இத னால் அரசமைப்பு சபையை உருவாக்க முடியாமல்போனது. அதேபோன்று அரசால் முன்னெடுக்க வேண்டிய மக்கள் சேவைகளையும் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. ஐ.தே.க. ஆட்சியிலிருந்த போதும் இச்சிக்கலுக்கு முகம் கொடுத்தது. குறைந்தபட்சம் சுயாதீன தேர்தல்ஆணைக்குழுவை நியமிக்கக் கூட முடியவில்லை.

அரசமைப்பு சபை நாடாளுமன்ற சபையாக மாற்றப்பட்டுள்ளது. இதனூடாக நாடாளுமன்றத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசமைப்பு சபையில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் மூவரே அங்கம் வகித்தனர். பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய அந்த மூவரும் நாடாளுமன்ற சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி நியமிக்கும் பிரதிநிதி என அரசமைப்பின் 41 அ (1) (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி நீக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக எப்படிக் கூற முடியும்? பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் பெயரிடும் ஐவரை ஜனாதிபதி தான் நியமிப்பார். ஜனாதிபதியே அதனை முடிவு செய்வார். ஆனால், புதிய திருத்தத் தின்படி பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் பிரேரிக்கும் நபர்களை காலம் கடத்தாது ஜனாதிபதி நியமிக்க வேண்டும்.

எப்பொழுதும் சபாநாயகர் ஆளும் தரப்பில் இருந்து தெரிவாவதில்லை. எதிர்க்கட்சியினூடாக மூவர் தெரிவாகியுள்ளனர். முழுமையாக நாடாளுமன்ற உள்ளடக்கம் வேறு விதமாக சமமான முறையில் புதிய நாடாளுமன்ற சபைக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனூடாக சரியான முறை யில் மக்களுக்குப் பொறுப்புக் கூறும் மக்களின் இறைமையை வெளிப்படுத்தும் வகை யில் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபைகளுக்குள்ள அதிகாரத்தை பாதுகாக்கும் வகையில் அர சமைப்பின் 55 (4) அதே போன்று உட் படுத்தப்பட்டுள்ளது. சிறந்த வேலை யொன்றை பெறுவதானால் கட்டாயம் ஊழியர்களின் பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வு காணப்படவண்டும். பெரும் எண்ணிக்கையான ஊழியர்களின் பிரச்சினைகளை தொடர்பில் ஆணைக்குழு வினால் தீர்க்க முடியாது. இதற்கான உப குழுக்கள் நியமிக்க வேண்டும். ஆனால், ஆணைக்குழு அதனை செய்ய வில்லை. பணிகளை இலகுபடுத்தும் வகையில் நிறுவன தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கக்கூடியதாக இருந்தாலும் ஆணைக் குழு அதனை செய்யவில்லை. சில அரச ஊழியர்களுக்கு ஓய்வுபெற்ற பின்னர் கூட பதவி உயர்வு வழங்கப்பட்டது. ஆணைக்குழுவின் நடவடிக்கையால் எல்லா இடத் திலும் ஊழியர் பிரச்சினைகள் அதிகரித்தன. ஊழியர்களின் பிரச்சினைகளை துரிதமாக தீர்க்கும் வகையில் தேவையான திருத்தங் கள் செய்யப்பட்டுள்ளன. அதிகாரத்தை பரவலாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



பொலிஸ் சேவையை மக்கள் சேவைக்கான சுபாவத்தை ஏற்படுத்தும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் என்பது இராணுவமல்ல. பொலிஸ் சேவையை மேலும் மக்களுக்கு நெருக்கமான சேவையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக பொலிஸ் மக்கள் மயப்படுத்தப்படுகிறது.

தேர்தல் சமயங்களில் ஊடக சுதந்திரம் குறித்து பரவலாகப் பேசப்படுகிறது. ஆணைக்குழுவினால் இரு ஊடக நிறுவனங்களை மட்டுமே கட்டுப்படுத்த முடிந்தது. சகல ஊடகங்களையும் சமமாக நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக் குழுக்கள் நாடாளுமன்ற நிதிக் கட்டுப்பாட்டின் கீழ் வருவதில்லை. இதனால் நாடாளுமன்றத்திற்குப் பொறுப் புக் கூறத் தேவையில்லை. எனவே ஆணைக் குழு உத்தியோகத்தர்கள் அனைவரும் அரச சேவைக்குள்ள சட்ட திட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படுவதினூடாக தேர்தல் திணைக்களத்திற்கு என்ன நடக்கும். தேர்தல் திணைக்களத்தை பாதுகாக்கும் வகையில் 170 (8) இனூடாக தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் தேர்தல் ஆணைக்குழு உத்தியோகத்தர்களாக மாற்றப்படுகின்றனர்.

30 வருடங்களின் பின்னர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியவர் மஹிந்தர். ஒருவராலும் முடியாது எனக் கூறிய பயங்கரவாதத்தை ஒழித்து அவர் நாட்டில் அமைதியை நிலைநாட்டினார். எனவே, நிச்சயமாகவே ஆசியாவின் ஆச்சரியமாக நாட்டை மாற்றக் கூடிய சக்தி அவருக்கும் எனது அரசுக்கும் உள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.


## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 566

திகதி 2010/09/11

சுப்பர் இலக்கம்: 19

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 19 32 38 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 30,363,656.00 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | [illegible] | ரூ. 50,000.00 விகிதம் | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 244 |
| நான்காம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 விகிதம் | 482 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 12,329 |
| ஆறாம் பரிசு | [illegible] | ரூ. 40.00 விகிதம் | 7,125 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 177,833 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 28,419 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 8,162,940.00

சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மிகுதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 30,620,509.60

தேசிய லொத்தர் சபை www.nlb.lk


## மறக்க முடியாத நினைவுகளில் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இன்பமாக 26 ★ 06 ★ 1977

துன்பமாக 04 ★ 09 ★ 2000

### செல்வி நுதர்சினி நடராசா (தர்சா)

திதி: சஷ்டி (13.09.2010)

ஆண்டு பத்தாகிவிட்டால் ஆறிவிடுமா எம் துயரம்?
மொட்டாக இருந்த எம் தர்சினியே நீ பூவாக மலர்ந்து
நாம் ஆசையாய் பார்த்திடுமுன் சருகாகி
மண்ணில் மாண்டது ஏன்?
பாசக்கரம் பரிதவிக்க நேசக்கரம் துடி துடிக்க
தர்சினி நீ பறந்த மாயமென்ன?
நாம் சிறகிழந்த பறவையானோம்.
ஆயிரம் ஆயிரம் உறவு இருப்பினும் உம் பாசத்திற்கு
ஈடாகுமா? எம் நெஞ்சம் இருக்கும்வரை
உன் நினைவு துடி துடிக்கும்.

என்றும் நினைவுடன் வாழும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, அண்ணி

நீர்வேலி றோட், கைதடி வடக்கு, கைதடி.

(103182)


## கணனிகள் விற்பனைக்கு

புதிய, பழைய மடி கணனிகள் (Laptop) விற்பனைக்குண்டு.

தொடர்பு: B.நிரூபன் - 0714624900

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள தனியார் முன்பள்ளிக்கு ஆங்கில, கணனி அறிவுடைய ஆசிரியர்கள் தேவை.

முன் அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0776184250

## விற்பனைக்கு

முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு.

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.

## வாடகைக்கு

கிளிநொச்சி - கரடிப்போக்கு ஏ-9 வீதிக்கு அருகில் அமைந்துள்ள 3600, 2400, 3000 சதுர அடிகள் கொண்ட தனித்தனி (3) மூன்று கட்டடத் தொகுதிகள் வர்த்தக, காட்சியக, அலுவலக, வங்கி நடவடிக்கைகளுக்கு மிகப் பொருத்தமான இடம். தொழில் தொடங்கலாம். வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு: 0775355437

## உடன் விற்பனைக்குண்டு

HP:VP 6311, Sony: VPL - VW10HT Projectors உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0770868834

## விற்பனைக்கு

புதிய AHUJA (அகுஜா) SR X500 மொடல் 15'' Speaker இரண்டு கொண்ட ஒரு சோடி Box விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: T.P.:0712336271


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பேராசிரியராகப் பதவி உயர்வுபெற்ற

### கலாநிதி கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்

அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

எல்லோருடனும் இனிமையாகப் பழகிச் சமூக நல்லுறவைப் பேணிய தமிழ்ப் பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், எஸ்.சிவலிங்கராஜா வரிசையில் பேராசிரியராக நியமனம்பெற்ற கலாநிதி கி.விசாகரூபன் அறிவுப் புலத்திலும் சமூகத்தளத்திலும் தமக்கெனத் தனியானதோர் இடத்தைப்பெற்றவர்.

இவரது பணிகள் சிறப்புடன் தொடர வாழ்த்துகிறோம்.

(103223) திருநெல்வேலி நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது பழைய மாணவரும் வலிகாம கல்வி வலய பணிப்பாளருமாகிய

### திரு.ப.விக்னேஸ்வரன்

அவர்கள் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று சென்றிருப்பதை ஹாட்லிக்கல்லூரிச் சமூகம் மனமுவந்து பாராட்டுகின்றது.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம்), பருத்தித்துறை.

(சி/570790)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் அம்பாறையில் அதிகரிப்பு கட்டுப்படுத்துவதற்கு சகலரும் ஒத்துழைக்குக

## மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப்பிராந்திய இணைப்பாளர் கோரிக்கை

அம்பாறை, செப்.13

"அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் சிறுவர்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனை முடியுமானவரை குறைக்கும் நோக்குடன் மனித உரிமை ஆணைக்குழு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கு அனைவரும் ஒத்துழைப்புத்தரவேண்டும்."

- இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் எம்.எம்.சறூக் தெரிவித்தார்.

சர்வதேச தினத்தை முன்னிட்டு மனித உரிமை ஆணைக்குழு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப் பற்று, திருக்கோவில் கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் மத்தியில் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான திட்டமிடல் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கல்முனையிலுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழு பிராந்திய காரியாலயத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித அபிவிருத்தித் தாபனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் பி.ஸ்ரீகாந் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

இதில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று, திருக்கோவில் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்நடத்தை அலகு அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அங்கு மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் எம்.எம். சறூக் மேலும் கூறியவை வருமாறு:-

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தில் சிறுவர்களுக்கெதிரான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனை முடியுமானவரை குறைக்கும் நோக்குடன் மனித உரிமை ஆணைக் குழு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. மனித அபி விருத்தி தாபனமானது மனித உரிமை ஆணைக் குழுவுடன் இணைந்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்போடு ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகளை நடத்துவதற்கான திட்டமிடல் கூட்டத்தை இன்று ஏற்பாடு செய்துள்ளது.

இதில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புகளை முடியுமான வரை எதிர்பார்ப்பதாகக் கூறினார். மேலும் ஒவ்வொரு வருடமும் மனித உரிமை ஆணைக் குழுவானது அரச, அரசசார்பற்ற, சிவில் அமைப்புகளுடன் இணைந்து இந் நிகழ்வை நடத்தி வருகிறது" - என்றார்.

கிழக்கு ஊடக இல்லத்தின் தலைவர் எம்.ஐ.எம்.சதாத் தெரிவித்தவை வருமாறு:-

"மனித உரிமைகள் ஆணைக்குழுவும் மனித அபிவிருத்தி தாபனமும் இணைந்து சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக எடுக்கப்படுகின்ற விடயங்கள் வரவேற்கத் தக்கதாகும். ஊடகங்கள் சிறுவர் உரிமைகள் தொடர்பாகவும், துஷ்பிரயோகங்கள் தொடர்பாகவும் அடிக்கடி ஒலிபரப்பியும், ஒளிபரப்பியும், பிரசுரித்தும் வருகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக செயற்படுத்தப்படுகின்ற விழிப்புணர்வுகள் அனைத்தும் பெற்றோர்களுக்கும் சமூகத்திற்கும் சென்றடையக்கூடியதாக அமைய வேண்டும் எனவும் வீதி நாடகங்களை விட கிராம மட்டங்களில் விழிப் புணர்வுகளை ஏற்படுத்துவது நல்ல விடயமாகும்.- என்றார்.

கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.சுகிர்தராஜன் கூறுகையில்,

சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் கட்டுரை, சித்திரப் போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு அப்பால் ஒவ்வொரு நாளும் காலை ஒன்று கூடலில் 10நிமிடங்கள் மனித உரிமை ஆணைக்குழு உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அலகு அதிகாரிகளைக் கொண்டு மாணவர் களுக்கு உரிமைகள், துஷ்பிரயோகங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்குவது சிறப்பாக அமையும் எனவும் கூறினார். (ளி)




## மண்டூர் பிரதேச வைத்தியசாலையில் நீர்த்தட்டுப்பாடு; பொதுமக்கள் விசனம்

மட்டக்களப்பு, செப்.13

மட்டக்களப்பு மாவட்டப் பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு உட்பட்ட மண்டூர் பிரதேச வைத்தியசாலையில் நீர்த் தட்டுப்பாடு நிலவுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு குடிப்பதற்கோ - உபயோகத் திற்கோ உரிய நீர் வசதிகள் இன்மையால் வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் உட்பட வைத்தியசாலை நிர்வாகமும் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலையானது மிக நீண்ட காலமாக இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகிறது எனவும், இதனால் இங்கு நோயாளர் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் உட்பட இந்த வைத்திய சாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரும் மிகத் தூர இடங்களுக்குச் சென்றே நீரைப் பெற்று வருகின்றனர் எனவும் மக்கள் கூறுகின்றனர். (ளி)

## களுவாஞ்சிக்குடியில் சட்டவிரோதக் கடைகளை அகற்ற 15ஆம் திகதிவரை காலக்கெடு

மட்டக்களப்பு, செப். 13

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடு கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட தினத்திற்குள் அகற்றப்படாத சட்டவிரோத கட்டடங்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் பொலிஸாரால் அகற்றப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோதமான முறையில் கடைகளை அமைத்துள்ள வர்த்தகர்களை அழைத்து நேற்றுமுன்தினம் காலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விளக்கமளித்தார். களுவாஞ்சிக்குடி பிரதேசசபைத் தலைவர், சபையின் செயலாளர், வர்த்தகர் சங்கப் பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர்.

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் பொதுச் சந்தைப் பிரதேசம் உட்படப் பல இடங்களிலும் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட 150 வர்த்தக நிலையங்கள் உள்ளன என்று பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (ளி)

## இருபது மத்திய-ஊவா ஆசிரியர்களுக்கு திண்டுக்கல் பல்கலைக்கழகத்தில் பயிற்சி

கண்டி, செப்.13

மத்திய - ஊவா மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 20 ஆசிரியர்கள் இந்தியாவில் திண்டுக்கல் காந்தி கிராமிய பல்கலைக் கழகத்தில் பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர்.

- இவ்வாறு கண்டி இந்திய உதவித் தூதரகம் அறிவித்துள்ளது.

மத்திய மாகாண கல்வி அமைச்சுடன் இந்திய உதவித் தூதரகம் இணைந்து மேற் கொண்ட கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியிலேயே இந்த 20 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட 10வளவாளர்களை கொண்டு 10நாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

இச்செயலமர்வில் ஆங்கிலம், கணிதம், பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பித்தல் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மத்திய மாகாண ஆசிரியர்கள் 120 பேரும், ஊவா மாகாண ஆசிரியர்கள் 48 பேரும் கலந்து கொண்டனர். ஒரு பாடத்திலிருந்து நான்கு பேர் என்ற அடிப்படையில் 20 ஆசிரியர்கள் இந்தியாவில் நான்கு வாரம் பயிற்சி பெறத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என இந்திய உதவித்தூதரகம் அறிவித்துள்ளது. (ளி)

## காணி வாங்க வந்த வர்த்தகர்களை கிராம வாசிகள் தாக்கினர்

கொழும்பு, செப்.13

கலஹா நில்லம்பப் பிரதேசத்தில் காணியொன்றை விலைக்கு வாங்க வந்த சிலரை அப் பிரதேசவாசிகள் அறுவர் தாக்கியதுடன் அவர்களின் வாகனமும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட காணிக்குத் தாங்களே உரிமையாளர்கள் என உரிமை கொண்டாடியவர்களாலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

காணியை வாங்க வந்தவர்களின் வேன் அடித்து நொறுக்கப்பட்டபின் அதற்குத் தீ வைக்க எடுத்த முயற்சி கைகூடவில்லை,

இத்தாக்குதலில் ஈடுபட்ட மேலும் ஒன்பது பேர் தலைமறைவாகியுள்ளனர். வேனிலிருந்த 48 ஆயிரம் ரூபா பணமும் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளானவர்கள் கண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களெனவும் குறிப்பிட்ட காணியின் கொள்வனவு சம்பந்தமாக அதன் உரிமையாளரை சந்திக்க நில்லம்பைக்குச் சென்றிருந்த போதே இத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கம்பளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் பர்ணாந்துவின் மேற்பார்வையில் கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ளி)




## முன்பள்ளி ஆசிரியைகளின் கற்கை நெறியை விரைவில் மலையகத்தில் ஆரம்பிக்கக் கோரிக்கை

கொழும்பு, செப்.13

"முன்பள்ளி ஆசிரியைகளுக்கான திறந்த பல்கலைக்கழக சான்றிதழ் கற்கை நெறியை மலையகப் பகுதிகளில் ஆரம்பிக்க வேண்டும்"

இவ்வாறு பிரிடோ நிறுவனத் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு-

"மேற்படி கற்கை நெறியை மலையகப் பகுதிகளில் ஆரம்பிக்குமாறு பிரிடோ நிறுவனம் தொடர்ந்தும் பரிந்துரை செய்து வருகின்றது. ஆயினும், முன்னரைப்போல இம் முறையும் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும் மலையகப் பகுதிகள் எதுவும் கற்கை நிலையங்களாகத் தெரிவாக வில்லை.

இதற்கிடையில், ஹட்டன் பூல் பேங்க் தொண்டமான் பயிற்சி நிலையத்தில் இப்பயிற்சியை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதை அறிந்த பிரிடோ நிறுவனம் உடனடியாக இதுதொடர்பாக செயல்பட்டு, ஆர்வமுள்ளவரை விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தியது.

தற்போது கிடைத்துள்ள தகவல்களின் படி 70க்கும் மேற்பட்டோர் இக்கற்கை நெறிக்காக விண்ணப்பித்துள்ளார்கள். இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக போதியளவு விளம்பரம் செய்யப்பட்டிருந்தால் இதை விட அதிகமானோர் விண்ணப்பித்திருப்பர். 20க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகள் இருந்தால் மட்டுமே இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என சம்பந்தப்பட்டோரால் கூறப்பட்டது.

ஆயினும், தற்போதைய 70க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்த நிலையில், போதியளவு விளம்பரம் செய்யப் பட்டால் மேலும் அதிகமானோர் விண்ணப்பிக்கக் கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது. இதனால் இப் பயிற்சி நெறியைக் கூடிய விரைவில் ஆரம்பிக்குமாறு திறந்த பல்கலைக்கழக முகாமைத் துவம் மற்றும் இத்துறைக்குப் பொறுப்பானவர்களையே பிரிடோ நிறுவனம் கேட்டுக் கொள் கிறது.

இக் கற்கை நெறி, தமிழ்மொழியில், பெருந்தோட்டப் பிரதேசங்களில் இதுவரை ஆரம்பிக்கப்படாததால் பெருந்தோட்ட பகுதி முன்பள்ளி ஆசிரியைகளுக்கும், இத் தொழிற்றுறையை தெரிந்தெடுக்க விரும்புபவர்களுக்கும் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதனால் கற்கை நெறியை ஆரம்பிப்பதை மேலும் தாமதப்படுத்த வேண்டாம்.

மேலும், ஹட்டன் பகுதியில் திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு காணி ஒதுக்கப்பட்டிருப்பினும், அதற்கான நிதி வசதி இல்லாததால் அதை அமைக்க முடியாதிருப்பதாக திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ். சந்திரபோஸ் தெரிவித்திருக்கும் கருத்தை பிரிடோ நிறுவனம் கவனத்தில் கொண்டுள்ளது.

ஒரு சமூகத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்பை அதிகரிப்பதற்கும் பெரும் பங்களிப்பு வழங்கக் கூடிய திறந்த பல்கலைக்கழக கற்கை நிலையத்தை அமைப்பதற்கும் இதுவரை மலையக அரசியல் வாதிகள் அக்கறையும், ஆர்வமும் காட்டாமல் இருக்கிறார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். இது விடயத்தில் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு கற்கை நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்"

-இவ்வாறு பிரிடோ நிறுவனத் தலைவர் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.etisalat.lk
0722 123 123

# யாழ்ப்பாணத்தில் வாங்கும் சிம்களுக்கு ஆகக்குறைந்த IDD கட்டணங்கள்

இந்தியா - ரூ.2.00

கனடா - ரூ.2.50

அமெரிக்கா - ரூ.2.50

யூகே - ரூ.2.50

(நிலையான தொலைபேசிகளுக்கு)

குறைக்கப்பட்ட கட்டணங்களை அனுபவிக்க
IDD இலக்கத்திற்கு முன்
100 ஐ டயல் செய்து அழைக்கவும்

இன்றே சிம்மொன்றை வாங்கிக்கொள்ளுங்கள்!

பிரதான விற்பனை முகவர்:
ஆர் அண்ட் ஆர் டெலிகொம் யாழ்ப்பாணம் (பிரைவேட்) லிமிட்டட்
127, M.P.C.S. கட்டிடம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

etisalat
உங்களை பிரதிபலிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - இலங்கை நட்பு; மூன்றாம் உலக நாடுகளின் உறவை பாதிக்குமா?



ஜனாதிபதி மஹிந்த

**அனைத்துலக சண்டியர்களில் ஒன்றான இஸ்ரேலுடன் இலங்கை தனது சாணக்கியம் நிறைந்த நட்பைப் பேணிவருகிறது, அதன் மூலம் தனக்கு ஒரு பலம் அதிகரித்திருப்பதாகவே இலங்கை எண்ணுகிறது.**

**எனினும் இந்த நட்பு வல்லாதிக்கத்தை எதிர்த்துநிற்கும் மூன்றாம் உலகநாடுகளுடனான இலங்கையின் உறவில் பாதிப்பை உருவாக்குமா என்ற சந்தேகமும் உள்ளது.**

**இது தொடர்பாக 'கிரீன் லெப்ட்' (greenleft) என்ற ஆங்கில ஊடகத்தில் வெளியான செய்தி ஆய்வு இங்கு பிரசுரமாகிறது.**

தகவல் பரிமாற்றம், படைத்தளவாடங்கள் மற்றும் படைசார் தொழிநுட்பங்களை வழங்கியதன் ஊடாக நாங்கள் முன்னெடுத்த பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு இஸ்ரேல் எங்களுக்குத் துணைநின்றது என இஸ்ரேலுக்கான இலங்கையின் தூதுவர் டொனால்ட் பெரேரா கூறுகிறார்.

கடந்த ஜூலை 21ஆம் திகதி வெளிவந்த Yedioth Ahronoth என்ற இஸ்ரேலியப் பத்திரிகையில் இஸ்ரேலுக்கான இலங்கையின் தூதுவர் டொனால்ட் பேரோவின் செவ்வி வெளிவந்திருந்தது.

இந்தச் செவ்வியில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிரான போரின்போது இஸ்ரேல் வழங்கிய ஆதரவிற்கு இலங்கையின் முன்னாள் விமானப்படைத் தளபதியும் இஸ்ரேலுக்கான இலங்கையின் தூதுவருமான டொனால்ட் பெரேரா தனது நன்றியைத் தெரிவித்திருந்தார்.

''தேவையான தகவல் பரிமாற்றம் மற்றும் இராணுவத் தொழில்நுட்பம் மற்றும் நவீன படைத்தளவாடங்கள் ஆகியவற்றை இலங்கை பெறுவதற்கு வழிசெய்ததன் ஊடாக பயங்கரவாதத்திற்கு எதிராக நாங்கள் முன்னெடுத்த போரில் இஸ்ரேல் எங்களுக்கு உதவி வந்திருக்கிறது. எங்களுடைய விமானப்படையில் இஸ்ரேலியத் தயாரிப்பான கிபிர் விமானங்கள் 17 உள்ளன.

அத்துடன், கடற்படையினருக்கான ரோந்துக் கலங்களையும் நாங்கள் இஸ்ரேலிட மிருந்து பெற்றிருந்தோம்.

இலங்கையின் விமானப்படையிலுள்ள விமானிகளில் பலர் இஸ்ரேலிலேயே தங்களது பயிற்சிகளைப் பெற்றிருந்தார்கள். தவிரவும், கடந்த ஆண்டுகளில் பல பில்லியன் டொலர் பணத்தை இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. இதுபோல இஸ்ரேல் இலங்கைக்கு அதிக உதவிகளைச் செய்ததன் விளைவாகவே நான் இங்கு தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறேன்'' எனத் தூதுவர் டொனால்ட் பேரேரா கூறினார்.

மேலும், ஹமாஸ் அமைப்பிபையும் விடுதலைப் புலிகள் அமைப்பையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுக் கருத்துத் தெரிவித்த தூதுவர் பெரேரா, பலஸ்தீனியர்களுக்கு எதிராக இஸ்ரேல் முன்னெடுக்கும் போருக்குத் தனது ஆதரவையும் தெரிவித்தார். காஸா நோக்கிச் சென்றுகொண்டிருந்த நிவாரணக் கப்பல் இஸ்ரேலால் இலக்குவைக்கப்பட்டது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தூதுவர் பெரேரா, ''இராணுவத்துடன் தொடர்புடைய ஒருவன் என்ற வகையில் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற இஸ்ரேலின் கரிசனையைப் புரிந்துகொள்ளமுடிகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் தொடர்பில் எமக்கு அதிக அனுபவம் இருப்பதனால், பயங்கரவாதத்தை எதிர்க்கும் நாடுகள் எவையோ அவை அனைத்துக்கும் இலங்கை தனது ஆதரவை வழங்கும்'' எனக் கூறினார்.

பலஸ்தீனத்திற்கு எதிராக கண்மூடித்தனமாக முன்வைக்கப்பட்ட இந்தக் கருத்து இலங்கை அரசை தர்மசங்கடத்திற்குள் தள்ளியிருந்தது. இதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட இஸ்ரேலியப் பத்திரிகைக்குத் தாம் வழங்கிய செவ்வி தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டதாக தூதுவர் டொனால்ட் பெரேரா பின்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

எது எவ்வாறிருப்பினும் போர் இடம்பெற்ற வேளையில் இலங்கைக்கு இஸ்ரேல் வழங்கிநின்ற காத்திரமான ஆதரவு மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் ஆகியவற்றை இந்தச் சம்பவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.



டொனால்ட் பெரேரா

சர்வதேச சமூகத்தின் வேறுபட்ட தரப்பினர் ஒவ்வொருவரையும் சாந்தப்படுத்துவதற்கு ஏதுவாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசு ஒன்றோடு ஒன்று முரண்பட்ட கருத்துக்களை அவர்களுக்கு வழங்கி வருவது இந்தச் செவ்வியின் மூலம் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

கியூபா, பொலிவியா மற்றும் வெனிசுவேலா போன்ற மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளுடன் பேசும்போது உலகின் மேலாதிக்க சக்திகளின் கொடுமைக்குத் தானும் அகப்பட்டிருக்கிறது என்ற தோற்றப்பாட்டையே மஹிந்த ராஜபக்ஷவின் அரசு காட்ட முனைகிறது.

ஆனால், இலங்கை இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடு என்பதையே டொனால்ட் பேரேராவின் இந்தச் செவ்வி எடுத்துக்காட்டுகிறது. தனது பலத்தைக் காட்டி ஏனைய நாடுகளை வெருட்டி வைத்திருக்கும் ஐக்கிய அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியான இஸ்ரேல் தானும் ஒரு சண்டியனாகவே செயற்பட்டு வருகிறது.

அண்மைக்காலம் வரை மூன்றாம் உலக நாடுகளின் ஆதரவைத் தனதாக்குவதில் இலங்கை வெற்றிபெற்றிருக்கிறது என்றே கூறவேண்டும்.

இலங்கையில் மோசமாகிச்செல்லும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கடந்த ஆண்டு ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிராகரிக்கப்படுவதற்கு ஏற்ற அழுத்தங்களைத் தொடர்புடைய நாடுகள் மீது இலங்கையால் பிரயோகிக்க முடிந்திருக்கிறது.

பதிலாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்து இலங்கை வெற்றிவாகை சூடியதை வாழ்த்தும் வகையில் ஐ.நாவின் மனித உரிமைச் சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது.

இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும் அவை மேம்படுத்தப்படுவதற்குமான உதவிகள் வழங்கப்படவேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மனித உரிமைச் சபையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு இலங்கைக்கு உறுதுணையாக இருந்தது மூன்றாம் உலக நாடுகள்தான்.

எவ்வாறிருப்பினும், இந்த ஆண்டு இராஜதந்திர ரீதியில் இலங்கை அரசு குறைந்தளவிலான வெற்றிகளையே பெற்றிருக்கிறது எனலாம்.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு மூவர் அடங்கிய வல்லுநர்கள் குழுவை ஐ.நாவின் செயலாளர் பான் கீ மூன் நியமிக்கும் தீர்மானத்தை இலங்கையால் தடைசெய்ய முடியவில்லை.

அத்துடன், குறித்த அந்தத் தீர்மானத்தை எதிர்த்து ஓர் அறிக்கையை அணிசேராநாடுகளை வெளியிட வைப்பதற்கும் இலங்கையால் முடியவில்லை.

குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக அணிசேரா நாடுகளின் அமைப்பு முடிவுகளை எடுக்கும்போது வாக்குகளின் அடிப்படையில் அவை அமைவதில்லை. மாறாக பொதுவான கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படும். ஆதலால், வல்லுநர்கள் குழுவை அமைக்கும் பான் கீ மூனின் தீர்மானத்தை அணிசேரா நாடுகளில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான நாடுகள் ஆதரிக்கின்றன என நாம் அர்த்தப்படுத்திவிடமுடியாது.

அதேநேரம் வல்லுநர்கள் குழுவை அமைக்கும் பான் கீ மூனின் தீர்மானத்தை எதிர்க்கும் விடயத்தில் மூன்றாம் உலக நாடுகள் அனைத்தும் ஓரணியில் இல்லை என்பதையும் இது காட்டவில்லை.

**தமிழில் :வண்ணமதி**

அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் உள்நாட்டு விவகாரத்துடன் தொடர்புடைய விடயங்களில் முடிவுகளை எடுக்கும் போது அணிசேரா நாடுகள் தயக்கத்துடன்கூடியதொரு போக்கைக் கடைப்பிடிப்பதுதான் வழமை.

குறிப்பிட்ட ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டன எனக் கூறி அதற்கு எதிராக மேற்கொள்ளும் விசாரணைகள் தொடர்பாக அணிசேரா நாடுகள் எப்போதுமே சந்தேகத்துடன்கூடிய பார்வையையே கொண்டிருக்கின்றன.



இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு

மனித உரிமைகள் தொடர்பான இதுபோன்ற விசாரணைகள் பெரும்பாலும் மூன்றாம் உலக நாடுகளை இலக்குவைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. இதேநேரம், இதுபோன்ற குற்றங்களில் ஈடுபட்ட உலகின் வல்லாதிக்க சக்திகளுக்கு எதிராக எந்தவிதமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படுவதில்லை. தனது சொற்படி நடக்கத் தவறும் நாடுகள் எவையோ அவற றுக்கெதிராகவே 'மனித உரிமைகள்' என்ற ஆயுதத்தை ஐக்கிய அமெரிக்கா வும் ஏனைய மேற்குநாடுகளும் கையில் எடுப்பதுதான் வழமை. ஈரான், கியூபா மற்றும் வெனிசுவேலா ஆகிய நாடுகளை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

உண்மையில் இவை நியாயமான கரிசனைகள் தான். ஆனால், மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் அனைத்தும் அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் அடக்கியாளும் போக்கை அடிப்படையாகக் கொண்டன என நாம் அர்த்தப்படுத்தி விடமுடியாது. உண்மையில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்குமாயின் விசாரணைகள் இடம்பெறுவது அவசியமானதே. அத்துடன், வல்லாதிக்க நாடுகளில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள் அனைத்தும் கவனிக்கப்படாது கைவிடப்படுகின்றன என்றும் நாம் கூறிவிடமுடியாது.

உதாரணமாக, தனது நாட்டுக்குள் வரும் அகதிகள் மற்றும் பழங்குடியினரை ஆஸ்திரேலியா மோசமாக நடத்துகிறது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் மதம்சார் பாகுபாட்டிற்கு எதிரான குழு இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையை எடுத்துக்கொண்டால், புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழ்ச் சமூத்தினர் முன்னெடுத்த போராட்டங்களின் விளைவாகவே இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வாதம் வலுப்பெற்றது. போரின் இறுதிநாட்களில் 30,000 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் எனக் கூறி புலம்பெயர் தமிழர்கள் மேற்கு நாடுகளின் நகர வீதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

சில சமயங்களில், இதுபோன்ற பெருமெடுப்பிலமைந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களினால் உலகின் வல்லாதிக்க நாடுகளின் செயற்பாட்டில் செல்வாக்கைச் செலுத்தமுடியும் என்பது உண்மையே. (16 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




லண்டனில் வசிக்கும் திரு.திருமதி அகிலன் சிவறஞ்சினி தம்பதியரின் செல்வப் புதல்வி **செல்வி அகிலன் அபிசா** தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் இன்று (13.09.2010) திங்கட்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, கொக்குவில் மேற்கு, கேணியடியில் வசிக்கும் பாசம் உள்ள அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா லண்டனில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, சித்தி லண்டனில் வசிக்கும் மாமா, மாமி, மச்சான், மச்சாள் சுவிஸில் வசிக்கும் சின்ன அப்பப்பா, சின்ன அம்மம்மா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் எல்லாம் வல்ல நல்லூர் முருகன் அருளுடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
**திரு.திருமதி கனகலிங்கம்**
**க.பிரதீபன் சித்தப்பா**

ஸ்ரீசைலம்
கேணியடி, கொக்குவில் மேற்கு.

(103217)

Win **மெகா**

கம்பியூட்டர் ஸ்கொலர்ஸிப்

... இலவச பரீட்சை ...

**19-09-2010**



உங்கள் அறிவுத்திறனை நிரூபித்து

**80%**

இன்று முதல் **நெல்லியடி** மற்றும் **மீசாலையிலும்**

ஸ்கொலர்ஸிப் வெல்லுங்கள்

**TECHNO WORLD**
**Studies (Pvt) Ltd**

கணினிப் பயிற்சி நிறுவனம்

| | |
|---|---|
| 844, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎4921124 | மானிப்பாய் மகளீர் கல்லூரி அருகில் யாழ் வீதி, மானிப்பாய். ☎4922400 |
| 64, பலாலி வீதி, திருநெல்வேலி. ☎4922401 | கென்ஸ்மன் வீதி, நீதிமன்றம் எதிரில், சாவகச்சேரி. ☎5102600 |
| 246/25, மாலி சந்தி, கரவெட்டி-நெல்லியடி | ஐயாகடை சந்தி, மீசாலை |

கணினி உலகில் என்றும் உங்கள் நண்பன்

# Kalaimagal International College

NOTHING IS IMPOSSIBLE

**கலைமகள் சர்வதேச கல்லூரி 2011 ஆம் ஆண்டிற்கான அனைத்து வகுப்புகளுக்கும் விண்ணப்பப்படிவங்கள் செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் உள்வாங்க உள்ளதால் உங்கள் சிறார்களையும் எமது கல்லூரியில் இணைத்துப் பயன்பெற அனுமதிக்கு முந்துங்கள்.**

## எமது சிறப்பான செயற்பாடுகளாவன



- ★ முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த)வரை கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை கல்வித் திணைக்களத்திலும் பரீட்சைத் திணைக்களத்திலும் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை. (English Medium)
- ★ Play Group முதல் Grade-05 வரை 'Oxford' பாடத்திட்டமும் Grade-6 முதல் G.C.E. (A/L) வரை இலங்கை பாடத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும் கல்விக்கொள்கை
- ★ ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- ★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ★ பிரத்தியேக சீருடை
- ★ சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- ★ கணனி ஆய்வுகூடம்
- ★ விஞ்ஞான ஆய்வுகூடம் ★ நூலகம்
- ★ சாதாரண மக்களும் முகம்கொடுக்கக்கூடிய மிகக்குறைந்த கட்டண வசதி
- ★ தமிழ்,சமயம் ஆகிய பாடங்கள் தமிழ் மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும் கற்பித்தல் செயற்பாடு
- ★ அரச பாடசாலைகளின் நேரசூசியை பின்பற்றும் கல்விக்கொள்கை.
- ★ கலை, கலாசாரம், விளையாட்டு,நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- ★ மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா,கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி, கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் இக்கிளைகளில் மட்டுமே முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த),வரையிலான வகுப்புக்கள் உள்வாங்கப்பட்டும் உள்ளன. ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை, கொடிகாமம், நல்லூர் கிளைகளில் Play Group L.K.G, U.K.G போன்ற வகுப்புக்களை மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக்கிளைகளில் இணைந்துகொள்ளும் சிறார்கள் தமது மேல்வகுப்புகளுக்கு கிட்டிய பிரதான கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வட மாகாண செயற்திட்டம் காணப்படுகிறது என்பதையும் இங்கு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

எமது கல்லூரியின் 2011 விண்ணப்பங்கள் செப்ரெம்பர் 15 முதல் உள்வாங்கப்பட உள்ளதால் உங்கள் பிள்ளைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளவும். சமர்ப்பிக்கவும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**The Director :**

## Kalaimagal International College

Church Lane, Kulappiti Junction. Kokuvil.

தொ.பே: 021 3221 5785, 0778834592.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுவர்க்க வாழ்க்கை

அரிஷ்டரேமி என்ற ஒரு மன்னர் இருந்தார்.

அவர் அரசை தன் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டுக் காட்டுக்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தார். அரிஷ்டரேமி மிகவும் நல்லவர். ஏராளமான புண்ணிய காரியங்களைச் செய்தவர். அப்படிப்பட்டவர் காட்டுக்குச் சென்று தவம் செய்ய ஆரம்பித்தது இந்திரனுக்குப் பெரிய நடுக்கத்தையே உண்டு பண்ணிவிட்டது.

இந்திரன் 'அரிஷ்டரேமி அதிகத் தவத்தில் ஈடுபடுவது காரணமாக அவருக்குத் தவப்பயன் அதிகமாக ஏற்பட்டுவிடும். அதனால் அவரே இந்திரப் பதவிக்கு நேர்ந்துள்ள ஆபத்தை எப்படித் தவிர்ப்பது? அரிஷ்டரேமியால் என் இந்திரப்பதவி பறிபோவதை விட, அவரைச் சுவர்க்கத்துக்கு இப்போதே அழைத்து வந்து இங்குள்ள ஆளுகைக்குட்பட்ட தேவர்களில் ஒருவராக ஆக்கி விடலாம்!'' என்று யோசித்தார்.

உடனே அவர் ஒரு தேவதூதனை அழைத்து ''நீ தேவலோக விமானத்துடன் பூலோகம் செல். அங்கே காட்டில் அரிஷ்டரேமி கடுமையாகத் தவம் செய்து கொண்டிருக்கிறார். அவரிடம் நான் இப்போதே அவரைச் சுவர்க்கத்திற்கு அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லி அவரைக் கையோடு அழைத்து வா!'' என்று உத்தரவிட்டார்.

தேவதூதன் தேவலோக விமானத்துடன் அரிஷ்டரேமி தவம் செய்து கொண்டிருந்த ஆசிரமத்தை அடைந்தான். அவரிடம் இந்திரன் தெரிவித்த விஷயத்தைக் கூறினான் அதற்கு அரிஷ்டரேமி ''இதோ பார்! நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு முதலில் பதில் சொல் சுவர்க்கத்தில் என்னென்ன குறைபாடுகள் தோஷங்கள் இருக்கின்றன? அதாவது அங்கே உள்ள நல்லது, கெட்டது என்னென்ன என்று முதலில் நீர் சொல். அதன் பிறகு உன்னுடன் சுவர்க்கத்துக்கு நான் வரலாமா? வேண்டாமா? என்பது பற்றி முடிவு செய்கிறேன்! என்றார்.

''இந்த உலகத்தில் மக்கள் செய்யும் புண்ணியத்திற்கு ஏற்ப மறுமையில் அவர்களுக்கு சுவர்க்க வாழ்க்கை அமைகிறது. உத்தம புண்ணியம் செய்தவர்களுக்கு உத்தம சுவர்க்கம் கிடைக்கிறது. மத்திம புண்ணியம் செய்தவர்களுக்கு மத்திம சுவர்க்கம் கிடைக்கிறது சுவர்க்கத்தில் கூட அவரவர் செய்த புண்ணியத்திற்கு ஏற்ப உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு உண்டு'' என்று தேவதூதன் சொன்னான்.

அதற்கு ''அப்படிப்பட்ட அந்தச் சுவர்க்கம் எனக்கு வேண்டாம்!'' என்று சொல்லி விட்டார் அரிஷ்டரேமி. ஏனென்றால் அவரது நோக்கம் சுவர்க்க இன்பம் அனுபவிப்பதோ, இந்திரன்ஆவதோ அல்ல மாறாக முத்தி பெறுவதே அவரது முடிவான லட்சியமாக இருந்தது.

சுவர்க்க வாழ்க்கை என்றும் நிலையானதல்ல. நாம் செய்யும் புண்ணியம் கரையும் வரையில் தான் அங்கே நாம் இருக்க முடியும். புண்ணியம் தீர்ந்தவுடன் மறுபடியும் பூமியில் வந்து எதாவது ஒரு ஜீவனாகப் பிறக்க வேண்டும் என்று மக்கள் விரும்பவேண்டும். அதுதான் முக்கியம்'' என்கிறார்கள் பெரியவர்கள்.

மனம் பக்குவமானால் சுவர்க்கமும் இன்பம் எப்படியிருக்கும் என்பதை உணரமுடியும். சுவர்க்கமும் நரகமும் கண்ணால் பார்க்கும் விஷயங்கள் இல்லை. அவை அனுபவித்து உணரும் விஷயங்கள்.

எல்லோரும் சுவர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறோம். ஆனால் நரகத்துக்குப் போவதற்கு உரிய செயல்கள் என்னென்ன உண்டோ அவ்வளவையும் தவறாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

கோ. சுவாமிநாதன்.

# நம்மால் முடியும்

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வீட்டில் விட்டு விட்டு வெளியே போகவேண்டுமென்றால் இப்போதெல்லாம் யாரிடம் விடுகிறார்கள்? பாட்டி தாத்தாவிடமா? இல்லை. பட்டணத்து வீடுகளில் பாட்டி தாத்தாக்களுக்கு விஸா கிடைப்பது கஷ்டம். வீடு கடத்தப்படுவார்கள். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள 'கிரீச்'வந்துவிட்டது. சில பெற்றோர்கள் தனி நபர்களைச் சம்பளத்துக்கு நியமிக்கிறார்கள். சென்னையில் அந்தப் பெண்மணிகளின் செல்லப் பெயர் 'ஆயா' கணவனும் மனைவியும் 'ஹாயா' க இருக்க வீட்டில் பிள்ளைகளைப் பேணும் பெண்மணியின் பெயர் ஆயா..! இது வாரியார் சொல்லும் ஜோக்.

பிரான்ஸ் நாட்டில் இப்படிப்பட்ட ஆயா ஒருத்தி உலகப் புகழ் பெற்றாள். மறக்க முடியாத மாமனிதர் பட்டியலில் இடம் பெற்றாள்.சாதிக்க முடியாத சாதனைகளைச் சாதித்துக் காட்டினாள். யார் அவள்? மேரி... தெரிய வில்லையா? இன்னும் கொஞ்சம் சொன்னால், ஆம் ஆம் என்று தலையாட்டுவீர்கள்.

பிரான்ஸ் நாட்டில் ஒரு பணக்கார வீட்டில் குழந்தைகளைப் பேணும் ஆயாவாக வேலைக்குச் சேர்ந்தாள் மேரி.

பதினெட்டு வயது நிரம்பிய அழகிய பெண். அன்பு ததும்பத் தன் பணிகளைப் புரிந்த அவள் மீது அந்த வீட்டின் மூத்த மகனுக்குக் காதல் அரும்பியது. வயசு அப்படி! அவ்வளவு தான் அந்தப் பையனின் பணக்கார அப்பா நம்மூர்ப் பண்ணையார்கள் பாணியில் ஆடித் தீர்த்துவிட்டார்.

கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கும் அந்தக் குடும்பத்துக்கு மருமகளாய், அடுத்த வீட்டில் சாப்பாட்டுக்குக் கையேந்தும் மேரி எப்படிக் குடியேற முடியும் என்று அவமானப்படுத்தினார். கேவலப்படுத்தினார். உடனே வீட்டை விட்டு வெளியேறினாள் மேரி. பாரீஸ்க்கு வந்தாள். தனது நெடுநாள் கனவுகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சிகளைத் தீவிரமாகத் தொடங்கினாள். அவமானம் அவளை வீறு கொண்டு எழச் செய்தது. சாதிக்கும் வெறி அவளுள் ஊதி ஊதி உலை வளர்த்தது. உலகமே வியக்கும் யுரேனிய எக்ஸ்ரே கதிர் வீச்சைக் கண்டறிந்து முன்வைத்தாள். நோபல் பரிசு பெற்றாள். நினைத்தபடி தான் காதலித்த அந்தப் பணக்கார வாலிபனைக் கைப்பிடித்து உலகப்புகழ் பெற்றாள். யார் அவர்? மேடம் மேரி க்யூரி அம்மையார்!

'ஜாதகம் சரியாக இருந்தால் சாதிப்பேன்... சாதகமாகப் பலர் இருந்தால் சாதிப்பேன்'' என்று நழுவாது விடாமுயற்சி செய்து வெற்றிபெற்றார் மேடம் க்யூரி அம்மையார்!

ஸ்காட்லாந்து மன்னர் புரூஸ் தமது அரண்மனையில் உட்கார்ந்திருந்தார். நாட்டை இழந்த சோகம் அவர் முகத்தில் வலை பின்னியிருந்தது. ஏன்..? தோல்வி.... தோல்வி... எல்லாப் போரிலும் அவருக்குத் தோல்விக்கு மேல் தோல்வி! மேலும் மேலும் அவமானப்பட அவரால் முடியவில்லை. பலமுறை முயன்றும் தோல்வி என்பதால் போர் முயற்சியைக் கைவிடலாமா என்று கவலையுடன் யோசித்தார். கன்னத்தில் கை வைத்தபடியே முகட்டு வளையைப் பார்த்துக் கொண்டிருந்த மன்னருக்கு அங்கே ஓர் ஆச்சரியமான காட்சி காத்திருந்தது.

வீட்டு மேல் கூரையில் ஒரு சிலந்தி. தனது எச்சிலை நூலாக்கி வலை பின்னிக் கொண்டிருந்தது. மிகமிக மெல்லிய நூல் இழை அதில் தொங்கிக் கொண்டே தன் எட்டுக் கால்களையும் அப்படியும் இப்படியும் அசைத்து அசைத்துத் தனது குடியிருப்பை... தனது உணவுகளைப் பிடிக்கும் படைக்கான அணிவகுப்பை... வலைப்பின்னலை உருவாக்கிக் கொண்டிருந்தது சிலந்தி. வலை அறுந்து அறுந்து போனாலும் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் ஓய்ந்து விடாமல் பாய்ந்து பாய்ந்து வலை பின்னியது சிலந்தி. தோல்வி அந்தச் சிலந்தியைப் பாதிக்கவே இல்லை.

மன்னருக்குப் பொறி தட்டியது. இத்தனை தோல்விக்குப் பிறகும் தளராமல் சிலந்தி செயல்படும்போது, காரிய சாதனை செய்யும் போது நாம் இப்படித் தளர்ந்து போகலாமா என்று தான் உணர்வு பெற்றார். சிலந்தியின் முயற்சி அவரைச் சிந்திக்க வைத்தது! நாட்டை மீட்டு மீண்டும் அரியணை நாற்காலியில் ஏற வைத்தது!

முடியாது என்று சிலந்திகூட ஒதுங்குவது இல்லை. முதுகெலும்புடைய மனிதன் ஒதுங்கலாமா? அவமானப் படுத்தப்பட்ட மேரி... அங்கீகரிக்கப்பட்ட மேடம் மேரி க்யூரி ஆகவில்லையா? நீங்கள் அப்படி ஆக முடியாதா? முடியும் முடியும்... உங்களால் முடியும். அதற்கு என்ன வேண்டும்? முயற்சி வேண்டும்.

சுகி.சிவம்.

# டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகள்

★ டெங்கு நோயானது ''ஏடிஸ் இஷிப்ரி'' எனும் நுளம்பு இனத்தினால் தோற்றுவிக்கப்படுகின்றது.

★ ''ஏடிஸ் இஷிப்ரி'' எனும் நுளம்பு இனம் பகல் வேளைகளிலும் கடிக்கும் பழக்கமுடையவை.

★ ''ஏடிஸ் இஷிப்ரி'' எனும் நுளம்பு இனம் பெரும்பாலும் காலை 6 மணி தொடக்கம் 9 மணி வரையிலும் மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரைக்கும் பறந்து திரியும்.

★ காய்ச்சல், தலைவலி, வாந்தி, கணுக்கள் வீங்குதல், மூட்டு நோவு வீக்கம், தசை நோவு, தோலின் கீழ் சிவப்பு நிறத்தடங்கள் புள்ளிகள் என்பன டெங்கு நோயின் அறிகுறிகள் ஆகும்.

★ டெங்குக் காய்ச்சலில் டெங்குக் குருதிப் பெருக்கு, டெங்கு அதிர்ச்சி ஆகிய நிலைகள் ஏற்படுவதுடன் இதனால் மரணமும் சம்பவிக்கலாம்.

★ டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டால் ஆரம்பத்திலேயே உரிய வைத்திய ஆலோசனையைப் பெறுவதன் மூலம் ஏனையோருக்கும் ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

★ நுளம்புகள் பெருகாதவாறு எமது சுற்றாடலை பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் இந்நோய் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

★ மழை பெய்யும் வேளைகளில் நீர் தேங்கக் கூடிய சிறிய கொள்கலன்கள், பொலித்தீன் பைகள், தகரப்பேணிகள்,பிளாஸ்ரிக் பொருள்கள், இளநீர்க் கோம்பைகள், சிரட்டைகளை எரியுங்கள். அல்லது புதைத்து விடுங்கள்.

★ பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். நீர் சேகரிக்கும் தொட்டிகள், பாத்திரங்களை நன்றாகக் கழுவி நான்கு நாள்களுக்கு ஒரு தடவையாவது மாற்றிக்கொள்ளுங்கள்.

★ வீட்டின் பின்புறத்தில் அல்லது வீட்டுச் சுற்றாடலில் சேகரித்து வைக்கும் தேவையற்ற பாத்திரங்கள் ஏனைய பொருள்களில் நீர் தேங்காதவாறு கழுவி வையுங்கள். அல்லது அவற்றை அழித்து விடுங்கள்.

★ ஓட்டில், பீலிகளில் , வாய்க்கால்களில் நீர் தேங்காதவாறு நீர் வழிந்தோடக் கூடிய வகையில் அடிக்கடி துப்பரவு செய்யுங்கள்.

★ ரயர்கள் , மரப்பொந்துகள் என்பவற்றில் நீர் தேங்காதவாறு மண்போட்டு மூடி விடுங்கள். அல்லது ரயர்களில் நீர் தேங்காதவாறு துளை விடுங்கள்.

★ சுற்றாடலில் நுளம்புகள் தங்காதவாறு பற்றைகளை வெட்டி குப்பை கூழங்களை எரித்து சுற்றாடலைத் தூய்மையாகப் பேணுங்கள்.

★ நுளம்புக் கடியிலிருந்து எம்மை பாதுகாத்துகொள்ள வீடுகளில் வலைகள், சுருள்கள் என்பவற்றை பயன்படுத்தல் வேண்டும்.

★ டெங்கு நோய்த்தொற்று ஏற்பட்டால் நுளம்பு வலையிலும் நோயாளியை ஓய்வெடுக்கச் செய்யுங்கள்.

★ புகையூட்டுதல், நுளம்புச்சுருள் கொழுத்துதல் மூலம் நுளம்பு பெருக்கத்தைக் குறைக்க முடியும்.

★ நுளம்பு விரட்டி எண்ணெய் பூசுதல் மூலமும் நுளம்புக் கடியிலிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும்.

★ நோய்த் தொற்று ஏற்பட்டால் முடியுமான வரை ஓய்வெடுக்க வேண்டும்.

★ அதிகமான நீரினை நோய்த்தொற்று ஏற்பட்டவர் பருகுதல் வேண்டும்.

★ அஸ்பிரின், அஸ்பிரின் கலந்த மருந்துக்கள் பாவிக்கக்கூடாது. பதிலாக பரசிற்றமோல் பாவியுங்கள்.

★ நோய்த் தொற்று ஏற்பட்டால் உடனடியாகத் தகுந்த வைத்தியரை நாடி உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

★ டெங்கு ஒரு உயிர்கொல்லி நோயாகும். எனவே அதற்கான பாதுகாப்புடன் இருந்து நோயில் இருந்து விடுபடுவோம்.

தனுசோபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமத்தில் காணி விற்பனைக்கு

தவசிகுளம், மிருசுவில், கொடிகாமம் அரசினர் வைத்தியசாலைக்கு முன் வீதியில் A-9 வீதியிலிருந்து 500 மீற்றர் தூரத்துள் நல்ல குடியிருப்புச் சுற்றாடலில் நீர், மின்சார வசதியுடைய 32 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கைத்தொழில் முயற்சிகளுக்கும் உகந்த இடம். பிரித்தும் கொடுக்கப்படும்.

**0779757531**

## தேவை

கொக்காகோலா குளிர்பானத்திற்கான விற்பனைப் பிரதிநிதிகள் (DSR) தேவை. விரும்பியவர்கள் விண்ணப்பிக்கலாம். மற்றும் கணனி மூலம் கணக்கியல் செய்யக் கூடியவர்களும் தேவை.

சிவா பிறதர்ஸ்
205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## அறை வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம், கொக்குவில் பிரதேசத்தில் K.K.S வீதிக்கு அருகாமையில் வைத்தியசாலையில் தொழில் புரிபவருக்கு தனி அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு:- 0783033748

## மணமகன் தேவை

42 வயதான இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த சதய நட்சத்திரத்தை உடைய மணமகளுக்கு மணமகன் தேவை. தாரம் இழந்த விவாகரத்துப் பெற்றவர்கள் தொடர்பு கொள்ளலாம். சைவபோசனம் விரும்பத்தக்கது.

தொடர்பு இல:- 0778591276




டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை லிபட்டி பிளாசா
2439422


## வீதியைத் திருத்துங்கள்

மந்திகையிலிருந்து உபய கதிர்காமம் வரை செல்லும் குடத்தனை அம்மன் பிரதான வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

தற்பொழுது வல்லிபுர ஆழ்வார் பெருந் திருவிழா நடைபெற்றுவரும் நிலையில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தினமும் இவ் வீதியூடாகவே பயணித்து வருகின்றனர்.

எனினும் குறித்த வீதி மோசமாகச் சேதமடைந்து இருப்பதால் பயணிக்கும் பக்தர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் உரியவர்கள் இந்த வீதியைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-315)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.13

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வட்டுக்கோட்டை பால் கொள்வனவு நிலையத்தில் இம் மாதம் 22ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் இ.கு.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(எ-311)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.13

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து இந்த வெற்றிடத்துக்காக விண்ணப்பிக்க முடியுமென்றும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு உரிய விண்ணப்பங்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

(எ)


## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

10.09.2010 — அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2290

வெற்றி எழுத்து: X — வெற்றி எண்கள்: 6 7 7 5 3 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X 6 7 7 5 3 8 | ரூபா.10,000,000/= | பரிசு 01 |
| 1 பரிசுகள் | 6 7 7 5 3 8 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் - |
| 2 பரிசுகள் | 7 7 5 3 8 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | 7 5 3 8 | ரூபா. 10,000/= | பரிசுகள் 114 |
| 4 பரிசுகள் | 5 3 8 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1182 |
| 5 பரிசுகள் | 3 8 | ரூபா. 100/= | பரிசுகள் 11845 |
| 6 பரிசுகள் | 8 | ரூபா. 20/= | பரிசுகள் 116831 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 6 7 7 5 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 09 |
| 8 பரிசுகள் | 6 7 7 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 119 |
| 9 பரிசுகள் | 6 7 7 | ரூபா. 100/= | பரிசுகள் 1139 |
| 10 பரிசுகள் | 6 7 | ரூபா. 50/= | பரிசுகள் 11658 |
| 11 பரிசுகள் | X | ரூபா. 20/= | பரிசுகள் 46620 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 18,881,320.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
23/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1224 சிவப்பு — 10-09-2010

வெற்றி இலக்கங்கள்: 15 22 28 54 — கடகம்

ஜக்பொட் பரிசு ரூபா. 5,039,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 202,361 | 20/- | 4,047,220/- |
| 2 இலக்கங்கள் | 18,593 | 40/- | 743,720/- |
| 1 இல. + லக்கினம் | 18,318 | 60/- | 1,099,080/- |
| 2 இல. + லக்கினம் | 1,665 | 200/- | 333,000/- |
| 3 இலக்கங்கள் | 495 | 1000/- | 495,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,039,600/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 7,808,020/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 541 | | 569,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 242,025 | | 8,377,020/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,491,500/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்: 08 42 47 55

ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 538 | 500/- | 269,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 541 | | 569,000/- |

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-

# VACANCY ANNOUNCEMENT

In response to the official request of the Government of the Democratic Socialist Republic of Sri Lanka, a Japan International Cooperation Agency (JICA) team is going to implement "the Project for Development Planning for the Rapid Promotion of Reconstruction and Development in Jaffna District", or PDP Jaffna in short. To carry out the tasks of the project, the JICA team now invites applicants for local consultant positions specified below.

**POST TITLE** : **Agriculture Development Specialist (1 person)**
**Fishery Development Specialist (1 person)**

**General Qualifications:**

Applicants for the positions above must have at least the following qualifications.

(a) Proven ability to undertake research, analytical and evaluation work on well-defined tasks, collect and organize required data and information, and apply appropriate computer skills.
(b) Excellent command of English in speaking and writing – capable to produce well-organized reports.
(c) Excellent command of Tamil language at least in speaking. Originating from or resident in Jaffna District is an advantage.
(d) Bachelor's degree or above in the area of expertise or related areas, preferably from a renowned university. A master's or more advanced degree is an advantage.
(e) Work experience with international donor organizations, bilateral development agencies, and projects supported by these organizations/agencies is an advantage.

**Qualification of Agriculture Local Consultant:**

(1) Minimum of eight (8) years working experience in the area of agricultural development.
(2) Good knowledge of crop production, livestock production, agro-processing, agro-products distribution and markets, farm household management and agricultural cooperatives.
(3) Experience of conducting survey relating to agricultural development.
(4) Minimum three (3) years working experience in Jaffna district.

**Qualification of Fishery Local Consultant:**

(1) Minimum of eight (8) years working experience in the area of fishery development.
(2) Good knowledge of capture fishery, fish farming, fish processing and fishery household management.
(3) Experience of conducting survey relating to fishery development.
(4) Minimum three (3) years working experience in Jaffna district.

**How to Apply:**

To apply,①please send your CV to the following email address **by e-mail**, or ②please post the following address **by post.**

**Closing Date: 24th September 2010**

**SPEED MANAGEMENT SERVICE (PVT.) LTD.**
**No 36/2, Rasavin Thoddam, Jaffna**
**speedms2010@gmail.com**

## ரன்வரை பாதுகாப்பு அடகுக்கு வெற்றி வாய்ப்பு

இலங்கையில் முதன்முறையாக யூனியன் வங்கியின் மூலம் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் பெறுமதியான வெற்றி வாய்ப்பு

ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் அடகு நகைகளை இலவசமாக மீட்டெடுக்க ஒரு சிறந்த வரம்...



ரன்வரை

முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 100,000/- விலக்கழிப்பு

இரண்டாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 75,000/- விலக்கழிப்பு

மூன்றாம் பரிசு:
முழு அடகு / வட்டிப் பணத்தில்
ரூ. 50,000/- விலக்கழிப்பு

24 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 30,000/-

22 கரட் தங்கப் பவுணுக்கு ரூ. 27,000/-

உயர் பாதுகாப்புடன் மிகக் குறைந்த வட்டி

உடனடி சேவைகளுக்காக நாடு பூராகவும் பரந்துள்ள யூனியன் வங்கியின் 19 கிளைகளும் உங்களுக்காக திறந்திருக்கும்.

யூனியன் வங்கி
தொலைபேசி: 011 2370870

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.naptbs.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்போவாக மாறியது கிளிநொச்சி பஸ் நிலையம்
## வீதியோரங்களே தனியார் பஸ்களுக்கு கதி

கிளிநொச்சி,செப்.13

கிளிநொச்சியில் இதுவரை இயங்கி வந்த பஸ் நிலையம் கடந்த 8 ஆம் திகதி முதல் இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போவாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பஸ் நிலையத்தினை டிப்போவாக மாற்றியதுடன் புதிய பஸ் நிலையத்திற்கென அம்பாள் குளம் பகுதியில் அமைந்துள்ள பொதுச் சந்தைக்கு அருகில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பகுதி ஏ-9 வீதியில் இருந்து கனகபுரம் வீதியில் ஒன்றரைக் கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரத்தில் உள்ளதால் அங்கு பஸ்களை நிறுத்தினால் பயணிகளுக்கு அப்பகுதிக்கு வர வாகனங்களுக்கு இருநூறு ரூபா செலவாகும் எனவும் இதனால் பயணிகள் அங்கு வராது ஏ-9 வீதியில் பயணிக்கும் ஏனைய பஸ்களையே பயன்படுத்துவர் எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 8 ஆம் திகதி பஸ் நிலையம் அமைந்திருந்த பகுதியில் பஸ் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது என கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளரின் ஒப்பம் இடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டதாகவும் பின்னர் தாம் அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதாகவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியை டிப்போவாக பயன்படுத்தினாலும் இதற்கு முன் உள்ள பகுதி பயன்படுத்தப்படாதுள்ளதால் அதனை பஸ் நிலையமாக பயன்படுத்தலாம் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியிலேயே யுத்தத்திற்கு முன்னர் கிளிநொச்சி பொதுச் சந்தை இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சியில் மீள் குடியேற்றம் இடம் பெற்றபின் பொதுச்சந்தை அம்பாள் குளம் பகுதிக்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கத்தொடங்கியது. கிளிநொச்சி பஸ் நிலையம் முன்னர் காக்கா கடைச்சந்தியிலும் பின்னர் பழைய பஸ் நிலையப் பகுதியிலும் இயங்கி வந்து தற்போது அம்பாள் குளம் சந்தைக்கு அருகில் மாற்றப்பட்டுள்ளது.

இதனால் கனகபுரம் வீதியில் தனியார் பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியே பஸ் நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இ.போ.ச. பஸ்கள் மாவட்டத்தின் உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டாலும் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களுக்கு தனியார் பஸ்களே சேவையில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (405)

# பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம் நாளை திறந்து வைப்பு

பளை,செப்.13

பச்சிலைப்பள்ளி பிரதேசசபைப் பிரிவில் போரின் பின்னர் மீள்குடியமர்ந்த மக்களின் நன்மை கருதி 'பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்' நாளை செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்குச் சேவையாற்றும் நோக்கிலேயே இந்தச் சங்கம் நிறுவப்பட்டது. இதன் தலைவராக சி.இராமலிங்கம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாளை நடைபெறவிருக்கும் திறப்பு விழா நிகழ்வுக்கு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (க-315-313)




# பச்சிலைப்பள்ளியில் 30 பொதுக்கிணறுகள் மக்களின் பாவனைக்கு ஏற்ற நிலையில்

கிளிநொச்சி,செப்.12

பளை நகரத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்த பிரதேசங்களில் 460 கிணறுகள் உள்ள நிலையில் 30 பொதுக் கிணறுகளே திருத்தி அமைக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்ந்து 2 மாதங்களுக்கு மேற்பட்ட நிலையில் தற்போது பாடசாலைகளில் உள்ளவை உட்பட 30 பொதுக் கிணறுகளை பிரதேச சபையினரும் சுகாதார சேவைத் திணைக்களத்தினரும் இணைந்து இறைத்து சுத்தம் செய்து குளோரின் போட்டு சுத்தமான நீரினை மக்கள் பெறும் வகையில் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இவற்றின் மூலம் பிரதேச சபைக்கு உட்பட்ட அனைத்து பொதுமக்களும் நீரினை பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-313-315)

# புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றம் தாமதம்

முல்லைத்தீவு,செப்.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையால் அந்தப் பிரதேச மக்கள் கவலை தெரிவிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசுவமடு தொடக்கம் இரட்டை வாய்க்கால்வரை விரிந்து பரந்த இப்பிரதேசம் மக்கள் குடியமர்த்தப்படாது காணப்படுகின்றது. விசுவமடு, உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம், கைவேலி, புதுக்குடியிருப்பு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகள் இப்பிரதேசத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுமார் 8000 குடும்பங்கள் மீள்குடியமர்விற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளன. ஆனால் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாத நிலையில் இந்த மக்கள் தமது மீள்குடியமர்விற்கான எதிர் பார்ப்புடன் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

# புலோப்பளையில் இராணுவ வீரருக்கு டெங்கு கொழும்பு வைத்தியசாலையில் அனுமதி

கிளிநொச்சி,செப்.13

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட புலோப்பளை மத்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் ஒருவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மூலமே இது கண்டு பிடிக்கப்பட்டது. இதனை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக இவர் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் இவ் இராணுவ முகாமிற்கு டெங்கு நுளம்பினை அழிக்கும் புகை மருந்துகள் பிரதேச சபை ஊழியர்களாலும் சுகாதார சேவை திணைக்கள ஊழியர்களாலும் இணைந்து முகாமின் சுற்றுப்புறங்கள் உட்பட அனைத்து பகுதிகளுக்கும் தெளிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளன. (க-315-313)

# 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் பளையில் மீன், மரக்கறிச் சந்தைகள் புனரமைப்பு

கிளிநொச்சி,செப்.13

மீளக் குடியமர்ந்த பளை நகர பொது மக்களின் பாவனைக்காக நகரத்தின் மையப்பகுதியில் உள்ள மீன் சந்தை மற்றும் மரக்கறிச்சந்தை என்பன பிரதேச சபையின் நிதி உதவியுடன் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ள மீன் சந்தைக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மரக்கறிச் சந்தைக்கு 3 இலட்சம் ரூபாவும் வழங்கி மக்கள் பயன்பெறும் வகையில் இச் சந்தைகள் புனரமைக்கப்பட்டுள்ளன. மேலும் 15 கடைகளுக்கு சந்தைக்குள் வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தற்காலிக கொட்டகைகளிலும் தமது வியாபார நடவடிக்கைகளை வியாபாரிகள் மேற்கொண்டு வருவதாக விசேட ஆணையாளரும் பிரதேச சபைச் செயலாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-313-315)

# 10 இலட்சம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி,செப்.13

புலம்பெயர்ந்து வாழும் மக்களின் அனுசரணையோடு சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நீரிறைக்கும் இயந்திரங்களை கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வைபவமொன்றில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இந்த நீரிறைக்கும் இயந்திரங்களைக் கையளித்தார். மாயவனூர், வட்டக்கச்சி, இராமநாதபுரம், சிவிக்சென்ரர், மருதநகர், விவேகானந்த நகர் மேற்கு மற்றும் கிழக்கு, நாகேந்திரபுரம் பகுதிகளைச் சேர்ந்த கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும், மாயனூர் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண்கள் நால்வருக்கும் இவை வழங்கப்பட்டன. அத்துடன் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை மாணவர்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு மின்சார நீர்ப் பம்பி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-301)

# இறுதிநேர நீர்பாய்ச்சுவதில் தடங்கல்; விளைச்சலைப் பாதிக்குமென விவசாயிகள் கவலை

கிளிநொச்சி,செப்.13

அக்கராயன் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட நெல்வயல்கள் அறுவடைக்குத் தயாராக உள்ளபோதிலும் இறுதி நேர நீர்பாய்ச்சுவதில் உள்ள குறைபாடுகளால் விளைச்சலில் பாதிப்புக்கள் ஏற்படலாமென விவசாயிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்குக் கட்டுப்படாத சில செல்வாக்கு மிகுந்த விவசாயிகள் குறித்த அளவிலும் பார்க்க அதிக பரப்பளவில் விவசாயத்தை மேற்கொண்டமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகின்றது. இவர்களின் இந்தச் செயல் காரணமாகவே நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

மீளக்குடியேறிய விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் ஊக்கமளிக்கப்பட்டு மானியங்களும் வழங்கப்பட்டதனால் ஏராளமான ஏழை விவசாயிகள் இம்முறை ஆர்வத்துடன் கமச் செய்கையில் ஈடுபட்டனர். ஆனால் இறுதிநேர நீர்பாய்ச்சுவதில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் இவர்கள் எதிர்பார்த்த விளைச்சலில் பாதிப்பை ஏற்படுத்தும் சாத்தியங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-301)

# பளை ஆயுள்வேத வைத்தியசாலையில் மீள் குடியேறிய மக்களுக்கு சிகிச்சை

கிளிநொச்சி,செப்.13

பளை நகரத்தில் இரு ஆயுள்வேத வைத்தியசாலைகள் போருக்கு முன்னர் இயங்கிய நிலையில் தற்போது ஒரு வைத்தியசாலையே பச்சிலைப்பள்ளி பொது நூலகத்தில் இயங்கி வருகின்றது.

போர் முடிவடைந்து மீளக்குடியமர்ந்த பொது மக்களின் தேவைக்கென பளை நகரத்தின் பச்சிலைப்பள்ளி பொது நூலகத்திலேயே பளை ஆயுள்வேத வைத்தியசாலை இயங்கி வருகிறது. இன்னொரு வைத்தியசாலை இயக்கச்சி இராணுவ படைமுகாமுக்குள் அமைந்துள்ளமையால் இயங்க முடியாத நிலையிலுள்ளது. தற்போது பொது நூலகத்தில் இயங்கிவரும் பளை ஆயுள்வேத வைத்தியசாலையில் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொது வைத்தியசாலையின் சீரற்ற சேவையினால் ஆயுள்வேத வைத்தியசாலையை மக்கள் அதிகளவில் நாடுவதாக விசேட ஆணையாளரும் பிரதேச செயலாளருமான சி.சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (க-315-313)

# கிராமிய வங்கிகளின் சமாசத்திற்கான எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி,செப்.13

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்திற்கு எழுதுவினைஞர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியில் இரு வருடங்களுக்கு குறையாத அனுபவமுள்ளவர்கள் அல்லது க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம் அல்லது எண்கணிதம், தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்க எழுதுவினைஞர் பதவியொன்றின் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகைமையுள்ள 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னராக விண்ணப்பங்களை தலைவர், கிளி/ முல்லை மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கூட்டுறவு சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது எனவும் அவர்கள் தமது கூட்டுறவுச் சங்கத்தினூடாக விண்ணப்பத்தினை அனுப்ப வேண்டும் எனவும் சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்போராக இருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

# கிராஞ்சி அ.த.க, வலைப்பாடு றோ.க.வில் சாரணர் சின்னங்கள் சூட்டும் நிகழ்வுகள்

கிளிநொச்சி,செப்.13

கிளிநொச்சி, கிராஞ்சி அ.த.க பாடசாலை, வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அகியவற்றில் சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் ஐ.கேசவன் தலைமை தாங்கினார். ஆண் சாரணர்கள் 15 பேருக்கும், பெண் சாரணர்கள் 15 பேருக்குமாக மொத்தம் 30 பேருக்கு சாரணர் சின்னங்கள் சூட்டப்பட்டன.

வலைப்பாடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பாடசாலை அதிபர் த.பிரபாகரன் தலைமை தாங்கினார். மொத்தமாக 20 மாணவ மாணவிகளுக்கு சாரணர் சின்னங்கள் சூட்டப்பட்டன.

இந்த இரு நிகழ்வுகளிலும் முதன்மை விருந்தினராக வடமாகாண சாரணர் ஆணையாளர் ரி.என்.போஜன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சுப்பிரமணியம் கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களெனப் பலர் கலந்து கொண்டனர். (க-496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



எதிர்காலம் தொடர்பான சிந்தனைகள் அதிகரிக்கும். அடுத்த சில நாட்களில் மேற்கொள்ள உள்ள பயணத்திற்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். உங்களுக்காகவோ, குடும்ப உறுப்பினர்களுக்காகவோ ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல் அனைத்தையும் நீங்களே செய்வீர்கள்.

### இடபம்



பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வீட்டில் சில மாற்றங்களை செய்வீர்கள். கடந்த காலத்தில் உங்களிடம் உதவி பெற்ற ஒருவரிடம் இப்போது பிரதி பலனை எதிர்பார்ப்பீர்கள். உதிரி வருமானங்களைப் பெறலாம். திட்டமிட்ட வேலைகள் சரியான நேரத்திற்கு முடியலாம். அரசியல்வாதிகள் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம்.

### மிதுனம்



உங்களின் பிரச்சினை ஒன்றை சமாளிக்க சிலரிடம் யோசனை கேட்பீர்கள். பெண்கள் விடயத்தில் சபலங்களைத் தவிர்க்க வேண்டும். தந்தை வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கலாம். சில வேலை களில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடியும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

### கடகம்



தாய் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். மனதிற்கு பிடித்த ஒருவருக்கு தாராளமாக செலவு செய்வீர்கள். நேற்று முடிக்காத சில வேலைகளால் இன்று அவதிகளுக்கு ஆள்படலாம். உங்களின் தயவில் சிலர் ஆதாயம் பெறலாம். ஒரு வழியில் வந்த வரவுகள் மற்றொரு வழியில் செலவாகும். வீட்டுத் தேவைகளை நிறைவேற்று வீர்கள்.

### சிங்கம்



சிலர் உங்களை நம்பி ஒப்படைத்த வேலைகளை நிறைவேற்ற முடியாமல் சிரமங்களைச் சந்திக்கலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரை பார்க்க நேரிடலாம். அரசியல் வாதிகள் மேலிடத்தின் பாராட்டுக்களைப் பெறுவர். ஒவ்வாத பொருள்களை சாப்பிட்டு உடல் உபாதைகளுக்கு ஆள்படலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### கன்னி



கடும் பேச்சுக்களை தவிர்த்து, கனிவான பேச்சுக்கள் மூலம் காரியம் சாதிக்க வேண்டிய நாள். சிலரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம். ஒருவர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம். சில வேலைகளை அவசரப்பட்டு தவறாக செய்து விட்டு பின்னர் மீண்டும் செய்யலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் நீங்களும் பங்கேற்கலாம்.

### துலாம்



மனதில் நிம்மதி, சந்தோஷம் குடிகொள்ளும் நாள். பல நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரை இன்று திடீரென சந்திக்கலாம். பற்றாக்குறை தீர புதிய பணவரவுகள் வரலாம். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். ஆபத்தான பொருள்களை கவனமாக கையாளவும். மாமன், மைத்துனர் உதவி கிட்டும்.

### விருச்சிகம்



வழக்கமான வேலைகளில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். சிலர் மூலம் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். வெளியிடங்களுக்கு செல்லும் போது விலை உயர்ந்த பொருள்களை கவனமாக எடுத்துச் செல்லவும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை அவசியம்.

### தனுசு



சண்டைபோட்ட உறவினர்கள் சிலர் உங்களிடம் சமாதானமாகச் செல்லலாம். கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுப்பீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சங்கடத்தில் தவிக்கும் நண்பர் ஒருவருக்கு எதிர்பாராமல் உதவி செய்வீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

### மகரம்



இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று இன்று முடிவுக்கு வரும். பல நாள்களாக வராத உறவினர் ஒருவர் உங்களின் வீட்டிற்கு வரலாம். கணவன் மனைவி இடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். உங்களுக்காக சில செலவிடலாம்.

### கும்பம்



குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் செயற்படுவீர்கள். பெற்றோர் வழியில் உருவான மனக்கசப்புகள் நீங்கி பாசம் அதிகரிக்கும். உங்களுக்கு தீங்கு செய்த ஒருவரிடமும் அதை வெளிக்காட்டாமல் அன்பாக நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் மீது சந்தேகம் கொள்ளலாம்.

### மீனம்



தொடங்கிய சில வேலைகளை பாதியில் விட்டு விடலாம். உறவினர்கள் சில்ரை பார்க்கச் சென்று அவர்கள் இல்லாமல் திரும்பலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். அயலாரின் விமர்சனங்களை எதிர்கொள்ளலாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து வருத்தம் அடைவீர்கள். வீண் பிடிவாதங்களை தவிர்க்கவும்.

## இஸ்ரேல் - இலங்கை நட்பு;

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை முன்னெடுத்த போருக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆரம்பத்தில் தனது காத்திரமான ஆதரவை வழங்கி நின்றது. ஆனால், இந்த நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் முன்னெடுத்த தொடர்ச்சியான போராட்டங்கள் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தனது கவனத்தைச் செலுத்தவேண்டிய நிலைக்கு அதனைத் தள்ளியது எனலாம். இதன் விளைவாக இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மேம்படும் வரைக்கும் ஜி.எஸ்.பி பிளஸ் என்ற வரிச்சலுகையை இடைநிறுத்துவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முடிவெடுத்திருக்கிறது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக வல்லுநர்கள் குழுவை அமைப்பது என்ற தீர்மானத்தை செயலாளர் நாயகம் பான் கீ - மூன் எடுப்பதில் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் முன்னெடுத்த போராட்டங்களும் காத்திரமான பங்கை வகித்தன என்பதை மறுக்கமுடியாது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் அதிகரித்துச் செல்லும் கரிசனையின் வெளிப்பாடே அணிசேரா நாடுகளின் குறிப்பிட்ட சில அங்கத்துவ நாடுகள் பான்கீ மூன் நியமித்த வல்லுநர்கள் குழுவிற்குத் தங்களது ஆதரவை வழங்கி நிற்கிறார்கள்.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையில் போர் முடிவுக்கு வந்து ஆண்டொன்று கடந்துவிட்ட நிலையில் இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதும், குழுவின் அங்கத்தவர்கள் தங்களது பணியை ஆரம்பிப்பதில் காலம் தாழ்த்துவதும் இந்தக் குழு எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுத் தராது என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகிறது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணைகளை மேற்கொள்வதற்கான ஒரு முயற்சி என்றல்லாமல் மனித உரிமைகள் தொடர்பான எழுந்திருக்கும் கரிசனைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஓர் ஏற்பாடாகவே இது தெரிகிறது. தவிர, பான் கீ - மூன் அமைத்திருக்கும் இந்த வல்லுநர்கள் குழுவுக்கு எதிரான எதிர்ப்புகளும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன.

இக்குழு தனது பணியைச் சரிவர முன்னெடுத்திருந்தால் இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கி ஆளப்படுவது தொடர்பாக அனைத்துலக ரீதியில் போதிய விழிப்புணர்வு ஏற்படுவதற்கு அது வழிவகுத்திருக்கும். ஆனால், இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் தமிழ் மக்களும் அவர்களது துணை அமைப்புக்களும் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு மாற்றீடாக ஐ.நாவின் இந்த வல்லுநர்கள் குழு அமையாது.

எது எவ்வாறிருப்பினும், இலங்கை இஸ்ரேலுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்கிறது என்ற உண்மை வெளிவந்திருப்பதானது தமிழ் மக்களது போராட்டம் அனைத்துலக ரீதியில் ஆ[illegible] இவர்களது [illegible] வதற்கும் வழிவகுக்கலாம். (ஒ)


மாபெரும் மலிவு விற்பனை யாழ்ப்பாணத்தில்...
AHIEZER SUPPLIERS
எகி(H)சர் சப்ளையர்ஸின் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில் உள்ள புதிய காட்சி அறையில் (பல வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக)இன்னும் ஒரு படி மேலே சென்று பல பொருட்கள் உங்களுக்காக விசேட விலைக் கழிவுடன் .....!

- Tiles விற்பனையில் புதிய புரட்சி ... India, Australia Tiles Company ஆன H & R Johnson (Super cut) Tiles நேரடி இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.(www.hrjindia.Com) (சர்வதேச தரநியமம் ISO மற்றும் இலங்கை தர நியமம் SLS தரச்சான்று பெற்றது)
- உங்கள் குளியலறை புதிய பொலிவு பெற India,Malaysia விலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Commode, Squatting Pan, Bathroom Fittings.
- மிகக் குறைந்த விலையில் S - LON PE+ நீர்த்தாங்கிகள்
- 2 வருட உத்தரவாதத்துடன் Venus, Bajaj Ceiling Fans.
- Electrical Wires (வயர்) & Electrical Accessories (உதிரிகள்), New Design show Lamps.
- ISO,SLS தரம் வாய்ந்த PVC Pipes, Conduit Pipes & Fittings.
- Large Diameters PVC Pipes and Fitting available


★ தரமாகவும் மலிவாகவும் நீங்கள் ஏமாற்றமடையாமல் கொள்வனவு செய்ய வேண்டுமானால் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

25000 ரூபாவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு வாகன சேவை இலவசம்...!

[Building Department, Contractors,NGO'S, Water Board, Plumbers & Electricians] ஆகியவற்றுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.

AHIEZER SUPPLIERS
No .289, Brown Road,Kaladdi Junction,Jaffna.
021 5100 700
(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும்,தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து நடத்திய "ருவென்ரி-20" கிரிக்கெட் போட்டி இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் இலங்கை விமானப்படை பலாலி அணியும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

## தேசிய ரீதியிலான கிரிக்கெட் போட்டிகள்; 18,19,20 ஆம் திகதிகளில் கொழும்பில்

### -வடமாகாண அணிகளும் பங்கேற்பு-

வலி.வடக்கு, செப்.13

இலங்கைக் கல்வி அமைச்சினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தேசிய ரீதியிலான கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

வாதுவ ஸ்ரீ சுமங்கல ஆண்கள் வித்தியாலய மைதானம், மகாஜனா விளையாட்டரங்கு, நகரசபை மைதானம், பாணந்துறை வாதுவ மத்திய மகா வித்தியாலய விளையாட்டு அரங்கு ஆகியவற்றில் இப்போட்டிகள் நடை பெறவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்கள், பெண்கள் பிரிவுகளில் 480 வீரர், வீராங்கனைகளும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாகாணப் பாடசாலைகளின் சார்பில் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வவுனியா பெரிய கோமரசன்குளம் மகா வித்தியாலயம் என்பனவும், பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயம், வடமராட்சி மெதடிஸ்த மகளிர் கல்லூரி ஆகியனவும் யாழ். மாவட்டத்திலிருந்து கலந்து கொள்ளவுள்ளன. (எ-86)




## பிபாவின் உதைபந்தாட்ட பயிற்சி முகாமில் யாழ்ப்பாணத்தவர் இருவர் கலந்து கொண்டனர்

யாழ்ப்பாணம், செப்.13

உதைபந்தாட்டப் பயிற்றுநர் தரம் 'பி' இற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அண்மையில் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் (பிபா) நடத்திய 22 நாள் பயிற்சி முகாமில் கலந்துகொண்டனர்.

இலங்கையின் உதைபந்தாட்டத் தரத்தை உயர்த்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி முகாமில் 24 பேர் கலந்துகொண்டனர். இதில் யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் இ.அனுராகாந்தன், இளவாலை ஹென்றியரசர் கல்லூரியின் விளையாட்டு ஆசிரியர் எம்.டி விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சி முகாமில் எழுத்துப் பரீட்சை செய்முறைப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளன. இதில் தெரிவானவர்கள் உதைபந்தாட்டப் பயிற்றுநராகக் கடமையாற்றுவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவார்கள். (6-121)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.13

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் இவ்வாண்டுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை உடுவில் சிந்து விளையாட்டுக் கழக மைதானத்தில் பி.ப 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குகொள்ளவுள்ள அணியினரின் விவரம் வருமாறு-

கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக அணி எதிர் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணி. (எ-23)

* * *

யாழ்ப்பாணம், செப்.13

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கைதடி நாவற்குழி பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையில் இடம்பெற்று வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பி.ப 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்வுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

நாவற்குழி மகாவிஷ்ணு விளையாட்டுக் கழக அணி எதிர் கைதடி குமரன் விளையாட்டுக்கழக அணி. (எ-23)

## தேசிய மட்டக் கராத்தேப் போட்டிக்கு யாழ். மாவட்ட வீராங்கனை தெரிவு

யாழ்ப்பாணம், செப்.13

வவுனியாவில் இடம்பெற்ற வடமாகாணக் கராத்தேப் போட்டியில் பெண்கள் பிரிவில் 50 கிலோவுக்கும் 55 கிலோவுக்கும் இடைப்பட்ட பிரிவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கோணேசபிள்ளை பிரசாந்தினி தங்கப்பதக்கத்தை பெற்றுத் தேசிய மட்டக் கராத்தேப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

பருத்தித்துறை தற்பாதுகாப்புக் கழக மாணவியான இவர் இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக்கழகம் நடத்திய கராத்தேப் போட்டியிலும் பங்கு பற்றி தங்கப்பதக்கத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-23)

## முப்பாய்ச்சலில் வடமாகாணச் சாதனையாக மன்னார் மாவட்ட சியந்தனின் பெறுபேறு பதிவு

வலி.வடக்கு, செப்.13

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட விளையாட்டு அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளின் அடிப்படையில் ஆண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியின் வடமாகாணச் சாதனையாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கே.சியந்தனின் பெறுபேறு பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் கடந்த மூன்று ஆண்டுகாலப் பெறுபேறுகளின் அடிப்படையில் சாதனைகளின் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2007 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜசீர் அரபாத் 13.22 மீற்றர் தூரமும் 2009 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கே.சியந்தன் 14.31 மீற்றர் தூரமும் பாய்ந்தும், 2010 ஆம் ஆண்டு 13.59 மீற்றர் தூரமும் முப்பாய்ச்சலில் ஈட்டிய பெறுபேறாகப் பதிவு செய்யப்பட்ட நிலையில், மன்னார் மாவட்ட வீரன் கே.சியந்தனின் பெறுபேறு சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-86)

## கொக்குவில் வராகி அணி வெற்றி

யாழ்ப்பாணம், செப்.13

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இந்த வருடத்துக்கான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உடுவில் சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கொக்குவில் வராகி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் வராகி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் கொக்குவில் வராகி விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய கைதடி குமரநகர் விளையாட்டுக்கழக அணியை 19:01 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (எ-23)

## மரதனோட்டப் போட்டிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.13

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இதில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலை மாணவர்கள் அதிபரின் சிபார்சுடன் விண்ணப்பப்படிவத்தினைக் கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு போட்டியின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த மரதன் ஓட்டப் போட்டி இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ளது (எ-23)



'கிறீன் பீல்ட்' சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையேயான - மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கொய்யாத்தோட்ட விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
கிறீன் கிங்ஸ், கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் ஆகிய விளையாட்டுக்கழகங்களின் தலைவர்கள் நாணயச்சுழற்சியில் ஈடுபடுவதை முதலாவது படத்திலும்-
'கிறீன் பீல்ட்' சனசமூக நிலையத் தலைவர் சுரேசுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதை இரண்டாவது படத்திலும், கிறீன் கிங்ஸ், கலைச்சுடர் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் நிகழ்வதை இறுதி இரு படங்களிலும் காணலாம்.
(படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பாக அமெரிக்கா அதிருப்தி தெரிவிப்பு

வாஷிங்ரன், செப்.13

இலங்கையில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் அமெரிக்கா கவலையும் அதிருப்தியும் கொண்டுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பி.ஜே.குரோவ்லி தெரிவித்துள்ளார்.

ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கான கட்டுப்பாட்டை நீக்குவது உள்ளிட்ட 18ஆவது திருத்தச் சட்டமூலம் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பி.ஜே.குரோவ்லி நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு-

இலங்கையின் அரசமைப்புத் திருத்தமானது ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பலவீனப்படுத்துவதாக அமைந்துள்ளது. இலங்கைஅரசு ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்தல், சுயாதீன குழுக்களை வசப்படுத்துவதற்காகத் தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமித்தல், அதிகளவு வெளிப்படைத் தன்மை, அதிகளவு அதிகாரப் பகிர்வு, தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் என்பனவற்றையே மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்கா எதர்பார்க்கின்றது - எனக் குறிப்பிட்டுள்ளது. (எ-15)

# மரத்தின் கீழ் படுத்த சுற்றுலாப் பயணிக்கு நேர்ந்த கதி!

தென்மராட்சி,செப்.13

மரத்தின் கீழ் படுத்திருந்த சுற்றுலாப் பயணிக்கு ஒவ்வாமை (அழற்சி) ஏற்பட்டாகக் கூறி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து அவசரமாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை நுணாவில் பகுதியில் தங்கியிருந்த வேளையில் உடல் நிலையில் மாற்றம் ஏற்பட்டதால் நேற்று முன்தினம் அதிகாலையில் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கொழும்பைச் சேர்ந்த மாயாதுன்ன வசந்த (வயது 40) என்பவருக்கே உடம்பில் ஒவ்வாமை ஏற்பட்டது.

மயிர்கொட்டி மயிர் உடலில் பட்டதால் ஒவ்வாமை ஏற்பட்டிருக்கலாம் என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-207)


## வீடு வாடகைக்கு

தாவளை, வட்டுக்கோட்டை கிழக்கில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 9040033 (சி/570865)

## அறைகள் வாடகைக்குண்டு

V.T.S. வீதி, உரும்பிராய் தெற்கில் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு. அரச ஆசிரியர்கள், மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: அ.நல்லதம்பி, மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். T.P. 021 222 4011

## திருமண வாழ்த்து

நேற்று (12.09.2010) ஞாயிற்றுக்கிழமை
வல்வை சிவன் தேவஸ்தான மண்டபத்தில்
திருமண பந்தத்தில் இணைந்த
பிரம்மஸ்ரீ பிரதாபசர்மா - பிரியங்கா
தம்பதியினரை பதினெண் வரங்களையும் பெற்று
அத்தியடிப் பிள்ளையாருடைய திருவருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சிவஸ்ரீ
போ. பிரபாகரக்குருக்கள் - நாகேஸ்வரி தம்பதிகள்.
அத்தியடிப் பிள்ளையார் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.
(103271)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப்.13

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 23ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (201)

* * *

கோப்பாய், செப்.13

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா இடம் பெற்று எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(201-72)

# டெங்கு ஒழிப்பு சிரமதானத்தால் வீடுகளுக்குள் குடிபுகும் பாம்புகள்

கோப்பாய், செப்.13

நீர்வேலி மேற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் தையல் இயந்திரத்தின் உபகரணங்கள் வைக்கும் சிறிய இலாச்சிக்குள் புடையன் இன பாம்பு ஒன்று உடலை நீட்டியபடி இருந்துள்ளது.

உபகரணத்தை கையாள இலாச்சிக்குள் கையை உள் நுழைத்தபோது கையில் ஒருவித உணர்ச்சி தென்பட உடனே கையை வெளியே எடுத்து அவதானித்தபோது பாம்பு தென்பட்டது. பாம்பின் வால் பகுதியிலே கையை வைத்ததால் அது தீண்டுவதில் இருந்து தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த இயந்திரம் இடைக்கிடையே பயன்படுத்துவதாக உரிமையாளர் தெரிவித்துள்ளார். தற்போது டெங்கு ஒழிப்பு முன்னெடுப்பு காரணமாக பற்றைகள் பலவும் அழிக்கப்பட்டு சூழல் துப்புரவு காரணமாக இவை போன்ற உயிரினங்கள் ஒதுங்க இடமின்றி குடிமனை பகுதிகளுக்குள் உலாவுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (6-72)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த சொந்தமாக தொழில் நடத்தும் விவாகரத்துப் பெற்ற 50 வயதுடையவருக்கு 45 வயதிற்கு உட்பட்ட விவாகரத்துப் பெற்ற அல்லது கணவனை இழந்த மண மகள் தேவை. கிறிஸ்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
விளம்பர இல: 4068 c/o உதயன்,
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆனந்தி திருமண சேவை
## மணமகன் தேவை

1975இல் பிறந்த உத்தரம் 2ஆம் பாதம், 9இல் செவ்வாய், கிரகபாவம் 43, விஞ்ஞான விவசாயப் பட்டதாரி ஆசிரியை,ஏகபுத்திரிக்கு உள்ளூரில் அரசுத்துறை மணமகனைத் தேடுகின்றோம். நேரடியாக தபால், தொலைபேசி 021 222 8708 மூலம் தொடர்பு கொள்ளுங்கள். V.A.சிவராசா சோதிடர் 56, அம்மன்றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (103268)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, வடமாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
யா/சுழிபுரம் வடக்கு, ஆறுமுக வித்தியாலயம். (103200)

## பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்
## திறப்பு விழா அழைப்பு
### 14.09.2010

| | |
|---|---|
| தலைவர் | : திரு.சி.இராமலிங்கம் J.P |
| காலம் | : நாளை (14.09.2010) செவ்வாய்க்கிழமை |
| நேரம் | : மு.ப. 9.30 மணி |
| இடம் | : பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்க கட்டடம் புலோப்பளை வீதி, பளை (ப.நோ.கூ.சங்கத்திற்கு அருகில்) |

முதன்மை விருந்தினர்: லயன் சி.சத்தியசீலன் (தொழிலதிபர்)
சிறப்பு விருந்தினர்கள்: திரு.சு.புத்திசிகாமணி
(தலைவர், வை.எம்.சி.ஏ.,யாழ்ப்பாணம்)
செல்வி ஞானலோஜினி சிவஞானம்
(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
விழாக் குழுவினர். (103267)

அனுசரணை: பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்,லண்டன் கிளை.

## தொழிற்பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழில்நுட்பத்துறையில் இலகுவாக தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கான பயிற்சிகள்

- ஏயர் கொண்டிசனிங் — காலம்: 6 மாதம்
- றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் — காலம்: 10 மாதம்
- Mobile Phone Repairing — காலம்: 3மாதம்

சகல பயிற்சிகளும் செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
பயிற்சிகள் ஆரம்பம்: 15.09.2010 புதன்
18.09.2010 சனி

விவரங்களுக்கு
**Jaffna Technical Institute**
No. 45, மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோயில் முன்பாக)
யாழ்ப்பாணம். தொ.பே.: 071 8561654, 077 9254078 (சி/570845)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி கேசவநாதன் பாக்கியலட்சுமி
(வேலணை கிழக்கு, வேலணை)

மண் மகிழ 05•02•1939 — கண் நெகிழ 14•08•2010

கடந்த 14.08.2010 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (13.09.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.32/2, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 1817
குடும்பத்தினர். (சி/103269)

## BRITISH COUNCIL — British College of English

யாழ்ப்பாணத்தில்...
**IELTS** 20th November பரீட்சைகள்...

இரண்டாவது தடவையாக British Council Colombo யாழ்ப்பாணத்தில் November 20 ஆம் திகதி IELTS பரீட்சைகளை நடாத்த தீர்மானித்துள்ளது.

நீங்கள் எங்கு IELTS படித்துக் கொண்டு இருந்தாலும் அல்லது படித்து முடித்து பரீட்சை எடுப்பதற்கு ஆயத்தமாக இருந்தாலும் எமது கல்லூரியில் வந்து பதிவு செய்வதன் மூலம் பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே பிரயாணச் செலவுகள் எதுவுமின்றி எழுதமுடியும். **பரீட்சைக் கட்டணம் ரூபா 16700/=**
Speaking Test பிரித்தானியர்களால் யாழ்ப்பாணத்திலேயே நடாத்தப்படும்.

November 20 இல் நடைபெற இருக்கும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த இருப்பவர்கள் நன்மைகருதி British College of English 18.09.2010, இல் ஓர் புதிய IELTS வகுப்பு ஒன்றை ஆரம்பிக்கின்றது.

வகுப்புக்கள் 2.00 மணி முதல் 5.00 மணிவரை Saturday & Sunday நடைபெறும்

**We Provide**
- Updated course modules
- Materials approved by British Council which are quite new including Cambridge 7
- 40 practice test
- Free IELTS pack & Mock Exams

| Course Schedule | Saturday & Sunday |
|---|---|
| Duration | 10 Weeks |
| Time | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 18th Nov. 2010 |

கடந்த April 2010 இல் நடைபெற்ற IELTS பரீட்சைகளில் எமது கல்லூரியில் படித்துப் பரீட்சை எழுதிய மாணவர்களில் ஒருவர் Band - 8 இருவர் 7.5 நால்வர் 6.5 எடுத்து சாதனைபுரிந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**BRITISH COLLEGE OF ENGLISH**
IELTS Registration Centre for British Council
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0213216027 - 0778803887


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை சிற்பனை முருகன் ஆலய

## தேர்த் திருவிழாச் சிறப்புமலர் - 13.09.2010





### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



கந்தபுராண கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட வேலணை சிற்பனை முருகன் ஆலயம் முன்பு ஒரு காலத்தில் கந்தபுராண மடமாக இருந்ததாக வரலாறு கூறு கின்றது. இவ்வாலயத்தில் கந்தசஷ்டி விழா நீண்ட காலமாகப் பக்திபூர்வமாக நடைபெற்று வருவதோடு தற்போது மகோற்சவ திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்ற வேளையில் இம்முறை புதிய சப்பறத்தில் முருகப் பெருமான் எழுந்தருளிக் காட்சியளித்தார். இன்று சண்முகப் பெருமான் தேர் ஏறி வருகின்றார். எல்லா அடியார்களும் சுபீட்சம் நிறைந்த மங்களம் பொருந்திய வாழ்வினைப் பெற எல்லாம் வல்ல சிற்பனை வேலவன் திருவருள் கிடைக்க ஆசி கூறி அமைகின்றேன்.

சுபம் சுபம்.

சிவஸ்ரீ ந.உமேந்திரக் குருக்கள்.
(உமா குருக்கள்)
சிற்பனை, வேலணை.




### ஆலய பரிபாலன சபையின் ஆசிச்செய்தி

வேலணை, சிற்பனைப் பதியில் பன்னெடுங்காலமாகக் கோயில் கொண்டு தன்னை நாடிவரும் அடியவர்களின் இன்னல் இடர்களைக் களைந்து அருள் பாலித்து வரும் முத்துக்குமாரசுவாமிப் பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராக புதிய சப்பறத்தில் வீதி உலா வந்தமை கண்கொள்ளாக் கட்சியாகும். இச் சப்பறத்தை உருவாக்கிய சிற்பாசாரியார் திரு.சின்னத்துரை நந்தகுமார் (சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்) அவர்களையும். இச் சப்பறத்தை ஆலயத்துக்குத் தந்து உதவிய முருக பக்தரும் எமது பரிபாலன சபையின் உபதலைவரும் 9ஆம் திருவிழா உபயகாரருமாகிய திரு. திருநாவுக்கரசு ஜீவரத்தினம் குடும்பத்தினருக்கும் புதிய தேர்க்கொட்டகை அமைப்பதற்கு உதவிய அடியார்கள் யாவருக்கும் ஆலயத்தில் எழுந்தருளி மூர்த்திகளான கஜவல்லி மகாவல்லி சமேத வேலவப் பெருமானை உருவாக்கித் தந்த எமது ஆலய பிரதம குருவான சிவஸ்ரீ ந.உமேந்திரக் குருக்கள் அவர்களுக்கும் எல்லா நலன்களும் கிடைக்க அவன் அருள் வேண்டுவதுடன் மற்றும் ஆலயத்துக்குச் சகல வழிகளிலும் உதவி புரிந்த அதி உத்தமர்களையும் நினைவு கூருவதில் பெருமகிழ்வு அடைவதோடு அனைவருக்கும் எம்பெருமானின் கிருபாகடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வேலனை சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்

சிற்பனை முருகன்
ஆலய பரிபாலன சபையினர்




## விழாச்சிறப்புற வாழ்த்துவோர்:

**சின்னத்துரை நந்தகுமார்**
சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

சிற்பனையின் சீலனே தேரேறி வந்து
அருள் மழை பொழிந்திடய்யா!
அனைத்து வகையான வாகன உதிரிப் பாகங்களுக்கும்
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்
**R.K.MOTORS**
17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2345.

**எடிசன் அக்கடமி**
யாழ்.நல்லூர், கொக்குவில்
வெட்டுக்கோட்டை,
சண்டிலிப்பாய்.

**வேணி களஞ்சியம்**
165, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**நந்தலாலா இரும்பு அகம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**எடிசன் அக்கடமி**
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**அன்னராஜா பல்பொருள் களஞ்சியம்**
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**அம்பாள் றேடர்ஸ்**
324, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**மகாமாரி ஸ்ரோர்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ரூபன் விவசாய விற்பனை நிலையம்**
வங்களாவடி சந்தி,
வேலணை.


**அம்பாள் ஸ்ரோர்ஸ்**
வங்களாவடி சந்தி,
வேலணை.

**கந்தன் களஞ்சியம்**
270, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பியன்ஸ் லீக் இருபது:20 போட்டி

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றியுடன் ஆரம்பித்தது


அரைச்சதம் கடந்த பத்ரிநாத்....

டேர்பன், செப். 13

சம்பியன்ஸ் லீக் தொடரை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றியுடன் ஆரம்பித்தது. நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் அணியை 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது. பத்ரிநாத்தின் அதிரடியான அரைச்சதம் சென்னை அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக அமைந்தது.

தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் லீக் இருபதுக்கு இருபது தொடர் நடந்துவருகிறது. நேற்றுமுன்தினம் டேர்பனில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் இந்தியாவின் சென்னை சுப்பர் கிங்ஸ், நியூஸிலாந்தின் சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் அணிகள் மோதின. நாயணச் சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி, துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

சென்னை அணியின் அதிரடியான துடுப்பாட்ட வீரரும் ஆரம்ப வீரருமான ஹைடன் முதல் ஓவரிலேயே ஓட்டம் எதும் பெறாமல் மேஸனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து சுரேஷ் ரெய்னா (4), முரளி விஜய் (19) என குறைந்த ஓட்டங்களுடன் வெளி யேறினார்கள். 8.1 ஓவர்கள் முடிவில் 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து திணறியது சென்னை சூப்பர் கிங்ஸ் அணி.

இதற்கு பின் தமிழக வீரர்களான பத்ரிநாத், அனிருதா ஸ்ரீகாந்த் இணைந்து அணியை மீட்டனர். அனிருதா 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துக் களம் கண்ட மார்கல் சிக்ஸர்களாக விளாசிக் கைகொடுத்தார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களை எடுத்தது. அரைச்சதம் கடந்த பத்ரிநாத் 52 (4 பவுண்டரி, 2 சிக்ஸர்) மற்றும் ஆல்ப மார்கல் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சவாலான இலக்கை விரட்டிய சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் அணி திணறல் ஆரம்பம் கண்டது. இறுதியில் சென்ட்ரல் அணி 18.1 ஓவரில் 94 ஓட்டங்களை எடுத்து சகலவ விக்கெட்டுக்களையும் இழந்தது, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகன் விருதை பத்ரிநாத் தட்டிச் சென்றார்.

நேற்றுமுன்தினம் நடந்த போட்டியை அரங்கில் இருந்து உற்சாகமாக கண்டு களித்தார் டோனியின் மனைவி சாக்ஷி சிங் ராவத். இவரது ராசி கைகொடுக்க, சென்னை அணி அசத்தல் வெற்றி பெற்றது.

* சமீபத்தில் டெஸ்ட் அரங்கில் 800 விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்தார் முரளிதரன். இதனைப் பெருமைப்படுத்தும் விதமாக, சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஆடிய முரளிதரன் தனது ரி-சேட்டின் பின் புறத்தில் 800 என்ற எண்ணுடன் விளையாடினார்.

# முதல் போட்டியில் தோற்றது இலங்கையின் வயம்ப அணி

போர்ட் எலிசபெத், செப். 13

சாம்பயன்ஸ் லீக் தொடரில் பௌச்சர் அதிரடி கைகொடுக்க, வாரியர்ஸ் அணி, இலங்கையின் வயம்ப அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் லீக் இருபது:20 போட்டித் தொடர் நடந்துவருகிது. நேற்றுமுன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடந்த 'ஏ' பிரிவு லீக் போட்டியில் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ், இலங்கையின் வயம்ப அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற வயம்ப அணியின் தலைவர் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

வயம்ப அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. திரான் வீசிய முதல் ஓவரில் அனுபவ வீரர் ஜெயவர்தனா(0), உதவாட்டே(2) ஆட்டமிழந்தனர். முபாரக்(9) ஏமாற்றினார். பின் அதிரடியாக ஆடிய குலோதுங்கா அணியை சரிவிலிருந்து மீட்டார். டிசோடோபே வீசிய 4ஆவது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்ஸர்களை விளாசினார். இவர் வயம்ப அணி 59 ஓட்டங்ககளை எடுத்திருந்த போது பெரேரா (39) ஆட்டமிழந்து வெளியேறினார். வயம்ப அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது.

அடுத்துக் களமிறங்கிய வாரியஸ் அணி ஆரம்பத்திலேயே பிரின்ஸின்(10) விக்கெட்டை இழந்தது. ஜேக்கப்ஸ் (26), இங்கராம்(34) பொறுப்பாக ஆடினர்கள். பின் அனுபவ வீரர் பௌச்சர், ஜஸ்டின் கிருச் இணைந்து வாரியஸ் அணியை வெற்றிபெறச் செய்தனர்.

## விளையாட்டு அரங்குகளில்

# பட்டம் வென்றார் கிம் கிளியஸ்டர்ஸ்




நியூஜோர்க், செப்.13

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார் கிம் கிலிஸ்டார்ஸ்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடந்து வருகிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்), 7ஆம் நிலை வீராங்கனை வெரா வீரா சுவனரேவாவை (ரஷ்ஷியா) எதிர்கொண்டார்.

இதில் எதிர்பாராத விதமாக வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார். சுவனரேவா 6-4, 6-3 என்ற நேர் செற்றில் வோஸ்னியாக்கியை வீழ்த்தி முதல் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் உலகின் 2ஆம் நிலை வீராங்கனை கிம் கிலிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) 4-6, 7-6 (7-2), 6-4 என்ற செற் கணக்கில் முன்னாள் முதல் நிலை வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸை (அமெரிக்கா) வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

நேற்று அதிகாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிம் கிலியஸ்டர்ஸ் (பெல்ஜியம்) - சுவனரேவா (ரஷியா) ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினார்கள். இதில் கிம் கிலியஸ்டர்ஸ் சுவனரேவாவை 6-2, 6-1 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று கிண்ணத்தை தன்வசப்படுத்தினார். 27 வயதான கிலிஸ்டர்ஸ் அமெரிக்க ஓபன் பட்டத்தை 2005, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் வென்றுள்ளார். 26 வயதான ஸ்வோனாரிவா முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். இதுவரை இருவரும் 8 முறை நேருக்கு நேர் மோதி உள்ளனர். இதில் கிலியஸ்டர்ஸ் 6 தடவையும், ஸ்வோனாரிவா 2 முறையும் வெற்றி கண்டுள்ளனர்.


சம்பியன்ஸ் லீக் இருபது:20 போட்டியில் மும்பை இந்தியஸ் அணி வீரர்களுக்கு ஆதரவாக நடனமாடி கிரிக்கெட் ரசிகர்களை உற்சாகப்படுத்திய அழகிகள்...

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி:

# கிண்ணம் வெல்லும் வாய்ப்பை தவறவிட்டது இந்தியா, போபண்ணா - பாக்., குரேஷி ஜோடி



நியூஜோர்க், செப். 13

அமெரிக்க ஓபன் டென்னிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதிச் சுற்றில் இந்தியாவின் போபண்ணா, பாகிஸ்தானின் அய்சம்-உல்-ஹக் குரேஷி ஜோடி கடும் போரட்டத்துக்கு பின் தோல்வியடைந்தது. இருப்பினும், தோல்விக்குப் பின் இவர்களது அமைதிச் செய்தி உலக ரசிகர்களின் இதயங்களை வெகுவாகக் கவர்ந்தது.

அமெரிக்காவின் நியூஜோர்க் நகரில், இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்லாம் தொடர் நடக்கிறது. இதன் ஆண்கள் இரட்டையர் பிரிவு இறுதிச் சுற்றில் தரவரிசையில் 16ஆவது இடத்திலுள்ள இந்தியாவின் ரோகன் போபண்ணா, பாகிஸ்தானின் அய்சம்-உல்-ஹக் குரேஷி ஜோடி, உலகின் முதல் நிலை ஜோடியான அமெரிக்காவின் பாப் பிரையன், மைக் பிரையன் சகோதரர்களைச் சந்தித்தது.

முதல் செற்றில் இரு ஜோடியும் தொடர்ந்து மாறி, மாறி வெற்றிபெற்றனர். இதனால் போட்டி 3ஆவது சுற்றுக்குச் சென்றது. இதில் முன்னணியில் இருந்த போபண்ணா ஜோடி, பின் 6-7 என செற்றை இழந்தது. தொடர்ந்து நடந்த இரண்டாவது செற்றும் மூன்றாவது சுற்று வரை நீடித்தது. இதிலும் ஆதிக்கம் செலுத்திய பிரையன் சகோதரர்கள் 7-6 என செற்றைக் கைப்பற்றினர். இறுதியில் 6-7, 6-7 என்ற நேர்செற்களில் போபண்ணா ஜோடி தோல்வியடைந்தது. கிராண்ட்ஸ்லாம் தொடர் ஒன்றில் முதன் முதலாக இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய போபண்ணா ஜோடி, இரண்டாவது இடத்துடன் ஆறுதல் அடைந்தது.

இந்தப் போட்டியை அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் ஹர்தீப் ரி, பாகிஸ்தான் தூதர் அப்துல்லா ஹெச் ஹருன் இருவரும் இணைந்து ரசித்தனர். அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்பட்ட செப். 11 அன்று நடந்த இப்போட்டியில் போபண்ணா - குரேஷி, உலகில் அமைதி நிலவ வேண்டும் என்று வலியுறுத்தினர். 'போரை நிறுத்துங்கள்; டென்னிஸ் போட்டிகளை ஆரம்பியுங்கள்' என்ற தங்களது கொள்கை முழக்கத்தை வெளியிட்டனர். இந்தியா, பாகிஸ்தான் இடையே நல்லுறவு ஏற்பட முயற்சி மேற்கொண்டு வரும் இவர்களது செயலை பிரையன் சகோதரர்கள் உட்பட அனைவரும் பாராட்டினார்கள்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான

# ஒருநாள் போட்டியிலும் தோற்றது பாகிஸ்தான்


ஆட்டநாயகன் விருதுபெற்ற டேவிஸ்

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்திற்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையிலான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் இங்கிலாந்து 3-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

கடைசி டெஸ்டில் பாகிஸ்தான் வீரர்கள் முகமது அசீப், முகமது அமீர், அணித் தலைவர் சல்மான் பட் ஆகியோர் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் 3 பேரும் சர்வதேச போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து நடந்த இரண்டு இருபது:20 ஓவர் போட்டியிலும் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்திருந்தது.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரின் முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஷெஸ்டர் லீ ஸ்ரீட்டி மைதானத்தில் நடந்தது.

மழை காரணமாக ஆட்டம் தாமதமாகத் தொடங்கியதால் போட்டி 41 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 41 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களை எடுத்தது. டேவிஸ் (87), டோட் (69) ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் சார்பில் சயீத் அஜ்மல் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி 41 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களை எடுத்தது. இதனால் இங்கிலாந்து அணி 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணியின் ஆரம்ப ஆட்டக்காரரான டேவிஸ் ஆட்டநாயகன் விருதுபெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லேடனைக் கொல்லும்வரை ஓயமாட்டோம்; ஒபாமா சூளுரை

வொஷிங்டன், செப்.13

சர்வதேச பயங்கரவாதியும், அல் குவைதா இயக்கத்தின் தலைவருமான ஒசாமா பின்லேடனை உயிரோடு பிடிக்கும் அல்லது கொல்லும்வரை ஓயமாட்டோம் - என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சூளுரைத்துள்ளார்.

இந்த விடயத்தில் அமெரிக்க அதிகாரிகளும், படையினரும் மனம் தளர்ந்துவிடவில்லை. பின்லேடனைத் தீர்த்துக்கட்டியே ஆகவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் அல் குவைதா தீவிரவாதிகளால் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதின் 9 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி (செப்டம்பர் 11) ஜனாதிபதி ஒபாமா, வாஷிங்டனின் வெள்ளைமாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள அல்குவைதா தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து செய்தியாளர்களுடன் மனம் திறந்து பகிர்ந்து கொண்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாங்கள் இஸ்லாமியர்களுக்கு எதிரான போரை நடத்தவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே போர் நடத்துகிறோம். இஸ் லாம் என்ற போர்வையில் யாரெல்லாம் மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபடுகிறார்களோ அவர்களுக்கு எதிராகவே நாங்கள் போர்புரிகிறோம்.

கடந்த இரு ஆண்டுகளாக அல் குவைதா தீவிரவாதிகளுக்கு எதிரான போரை தீவிரமாக நடத்தி வருகிறோம். இந்தப் போரில் நல்ல பலன்கிட்டியுள்ளது. ஆப்கானிஸ் தான் - பாகிஸ்தான் பிராந்தியத்தில் புகலிடம் அடைந்துள்ள அல் குவைதா பயங்கரவாதிகளால் நமது தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை.

அந்த அமைப்பின் தலைவர் பின்லேடன் தாக்குதலுக்குப் பயந்து பூமிக்கடியில் பதுங்கியுள்ளார். எதற்கெடுத்தாலும் அறிக்கை விட்டு மிரட்டல் விடுத்து வந்த ஜவாஹிரியின் செயற்பாடும் முடங்கிவிட்டது. இதெல்லாம் அமெரிக்கப் படைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி.

பின்லேடனையும், ஜவாஹிரியையும் உயிருடன் பிடித்துவிட்டாலோ, கொன்றுவிட்டாலோ அமெரிக்காவின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடப்போவதில்லை. எனினும் இருவரையும் தீர்த்துக்கட்டுவதற்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளிக்கிறது.

கடந்த 8 ஆண்டுகளாக பயங்கரவாதிகளுக்கு எதிரான போரை மேற்கொண்டபோதிலும் பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து நமது நாட்டை முழுமையாக காத்துள்ளோமா என்று கேட்டால், இல்லை என்றே சொல்ல முடியும். இதனால் மனம் துவண்டுவிடத் தேவையில்லை. பயங்கரவாதிகளின் எத்தகைய சவாலையும் சமாளிக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

இப்போதைய காலக்கட்டத்தில் ஈவிரக்கமின்றி பலரைக் கொல்லுவதற்கு ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவினரோ துணிந்து உயிரைத் துறக்கத் தயாராகவுள்ளனர் என்றே நினைக்கிறேன். இதுபோன்ற போக்கு மோசமானது. மனித சமுதாயத்துக்கே ஆபத்தானது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## சந்திரனுக்கு விண்கலம் அனுப்புகின்றது சீனா

பீஜிங், செப். 13

சீனா சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கிறது. இந்த விண்கலம் அடுத்த சில மாதங்களில் அனுப்பப்பட இருக்கிறது.

சீனா ஏற்கனவே சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பியுள்ளது. சாங்க் - 2 விண்கலம் சந்திரனுக்கு அனுப்புவதற்கு ஆயத்தங்கள் நடந்து வருகின்றன என்று சீனப் பொறியியலாளர் வூ வெய்ரன் தெரிவித்திருக்கிறார்.

இந்த முயற்சி வெற்றி பெற்றால், சந்திரனுக்குத் தொடர்ந்து விண்கலங்களை அனுப்பி அமெரிக்கா, ரஷ்யா என்ற நாடுகளின் வரிசையில் சீனாவும் ஒரு விண்வெளி சக்தியாக மாறும் என்றும், சந்திரனில் தரை இறங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.





2001 செப்ரெம்பர் 11 ஆம் திகதி நியூயோர்க்கில் இரட்டைக் கோபுர வர்த்தக மையத்தின் மீது நடைபெற்ற தாக்குதலின் 9 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் 'அமெரிக்க ஜனாதிபதி பங்குபற்றுவதையும், தாக்குதலில் பலியானவர்களின் படங்களை உறவினர்கள் தாங்கிச் செல்வதையும் படங்களில் காணலாம்.

# யானைகளிடம் இருந்து மரங்களை எறும்புகள் பாதுகாக்கின்றனவாம்

## பிரிட்டன் விஞ்ஞானிகள் புதுவிளக்கம்

யானைகள் சுண்டெலிகளுக்குப் பயப்படாது; ஆனால், எறும்புகளைக் கண்டால் தலைதெறிக்க ஓடும் - என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அடர்ந்த காட்டுப்பகுதியில் எறும்புகள் கூடுகட்டி வாழும் மரங்களுக்கு அருகில் யானைகள் செல்வதில்லை. இதனால் ஏராளமான மரங்கள் யானைகளிடமிருந்து பாதுகாக்கப்படுகின்றன என்ற அதிசயத் தகவலையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

யானைகளுக்கு சுண்டெலிகளைக் கண்



டால் 'அலர்ஜி'; அவற்றைக் கண்டால் பின்னங்கால் பிடரியில் அடிக்க ஓடும் என காலம் காலமாக நம்பப்பட்டு வருகிறது. ஆனால் யானைகள் சுண்டெலிகளுக்குப் பயப்படுவது இல்லை; எறும்புகளைக் கண்டுதான் பயப்படுகின்றன என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இதுகுறித்து கென்யாவில் வாழும் ஆபிரிக்க யானைகளிடம் விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தினர். இந்த ஆய்வறிக்கை, லண்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகையில் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

ஆய்வுக்குழுவில் இடம்பெற்ற புளோரிடா பல்கலைக்கழகப் பேராசிரியர் டோட் பால்மர் கூறியவை வருமாறு -

சுண்டெலிகளைக் கண்டால் யானைகள் பயப்படும் என்பது கட்டுக்கதை. எறும்புகளைக் கண்டால்தான் யானைகள் பயப்படுகின்றன. கென்யக் காடுகளில் நாங்கள் ஆய்வு நடத்தினோம். இதில் பல அதிசயத் தகவல்கள் கிடைத்தன. இதில் எறும்புகள், யானைகளிடமிருந்து மரங்களைப் பாதுகாக்கும் விடயம் எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அடர்ந்த காட்டுப்பகுதியில் உள்ள மரங்களில், எறும்புகள் கூடுகட்டி வாழ்கின்றன. எறும்புகள் கூடுகட்டியுள்ள குறிப்பிட்ட மரங்களுக்கு அருகில் மட்டும் யானைகள் செல்வதில்லை. இதனால் ஏராளமான மரங்கள் யானைகளிடமிருந்து பாதுகாக்கப்படுகின்றன. யானைகளிடமிருந்து ஓர் எறும்பு 5 மில்லி கிலோ தழையைப் பாதுகாக்கிறது. இதுவே மொத்தமாக கணக்கிட்டால் பெரிய அளவில் மரங்களை எறும்புகள் பாதுகாப்பது தெரியும். மரங்களைப் பாதுகாக்க இயற்கை செய்துள்ள வழிமுறைகளை கண்டால் வியப்பாக இருக்கிறது.

- இப்படி அவர் கூறினார்.

## உலக அரங்கில்

# 2013ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதி பதவியைப் பிடிப்பேன்

## பாக். முன்னாள் அதிபர் முஷாரப் தெரிவிப்பு

2013 ஆம் ஆண்டு நடக்கும் தேர்தலில் எனது கட்சி சார்பில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவேன் - என்று பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஜனாதிபதியாக இருந்து பதவி விலகியவர் முஷாரப். இவர் கடந்த ஏப்ரல் மாதம் முதல் லண்டனில் வசித்து வருகிறார். அவர் பி.பி.ஸி. ரி.விக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியவை வருமாறு -

பாகிஸ்தானில் புதிய அரசியல் கட்சியை நான் தொடங்கியிருக்கிறேன். 2013 ஆம் ஆண்டு நடக்கும் தேர்தலில் நான் போட்டியிடுவதன் மூலம் தீவிர அரசியலில் ஈடுபடுவேன். நான் அடுத்த தேர்தலில் போட்டியிடுவது 200 சதவீதம் உறுதி.

இந்தத் தேர்தலில் நான் உருவாக்கிய கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவேன்.

நான் ஜனாதிபதியாக வருவது வேண்டுமானால் சந்தேகமாக இருக்கலாம். ஆனால் தேர்தலில் நான் வெற்றி பெறுவது உறுதி.

பாகிஸ்தானில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான நேரம் வந்து விட்டது. இந்தப் புதிய கலாசாரம், பாகிஸ்தானை சரியான ஜனநாயகப் பாதையில் கொண்டு சென்று, முன்னணி நாடாக மாற்றும். இப்போது பாகிஸ்தானில் இருப்பது பொய்யான ஜனநாயகம் ஆகும்.

நான் ஆட்சியில் இருந்தபோது பல அற்புதங்களை பாகிஸ்தானுக்காக நிகழ்த்தினேன். நான் சட்ட பூர்வமாகத்தான் ஆட்சி நடத்தினேன். ஆனால் இராணுவச் சீருடையில் இருந்ததால் சட்டபூர்வமான அங்கீகாரம் எனக்குக் கிடைக்காமல் போனது.

முயற்சி செய்யாமல் இருப்பதை விட, தேர்தலில் நின்று முயற்சி செய்து பார்ப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். இப்போது பாகிஸ்தான் இருட்டில் தட்டுத்தடு மாறி கொண்டிருக்கிறது. என்னால் ஒளியூட்ட முடியும். மாற்று பாதையை என்னால் காட்ட முடியும்.

மக்கள் மத்தியில் எனது செல்வாக்கு மிகக் கீழே இருப்பதாக கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. இந்தக் கருத்துக்கணிப்புகள் எல்லாம் ஒரு சிலரை திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்படுபவை. உண்மையில் எனது செல்வாக்கு உயர்ந்து கொண்டிருக்கிறது.

நான் பாகிஸ்தானுக்கு திரும்பவிருக்கிறேன். அங்கு சில வழக்குகள் என் மீது உள்ளன. அவற்றை நான் சந்திக்கத் தயார். என் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு நான் பதில் சொல்வேன். பாகிஸ்தானில் இருக்கும்போது என்னைக் கொல்ல முயற்சிகள் நடக்கலாம். [illegible]

- இப்படி அவர் கூறினார்.

# மும்பையை தீவிரவாதிகள் மீண்டும் தாக்கினால் இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் வெடிக்கும்

## அமெரிக்க நிபுணர்கள் எச்சரிக்கை

வாஷிங்டன், செப். 13

மும்பையில் மீண்டும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால், இந்தியா - பாகிஸ்தான் இடையே போர் மூளும் - என்று அமெரிக்க நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி மிக உயரமான 'இரட்டைக் கோபுரம்'' என்று அழைக்கப்பட்ட பிரமாண்ட வர்த்தக கட்டடம், தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது. இதன் 9 ஆவது நினைவு நாள் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் வாஷிங்டன் நகரில் உள்ள தேசியப் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த பீட்டர் பெர்கென், புரூஸ் ஹாப்மேன் ஆகியோர், 'தற்போது தீவிரவாதிகளின் நிலை' பற்றி ஆய்வு நடத்தி ஓர் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

மும்பை நகரில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி தாஜ் ஹோட்டல் உட்பட பல்வேறு இடங்களை ஒரே நேரத்தில், பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்கினார்கள். இதில் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டது. இது போன்று மீண்டும் மும்பை மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினால் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படும். [illegible] தான் மீது இந்தியா போர் தொடுக்கும். அந்த அளவுக்கு அரசுக்கு எதிர்க்கட்சிகளும் நெருக்கடி கொடுக்கும்.

மீண்டும் இரு நாடுகள் இடையே போர் வெடித்தால், அது முழு அளவு போராக இருக்கும். 1947 இற்கு பின்னர் இரு நாடுகள் இடையே நடக்கும் 4 ஆவது போராக இது அமையும்.

இந்த போரில் பாகிஸ்தான் எல்லைக்குள் செயற்பட்டு வரும் தீவிரவாத முகாம்கள் அழிக்கப்படும்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மும்பை நகருக்குள் பங்களாதேஷைச் சேர்ந்த கலிமுதீன் கான், பாகிஸ்தானைச் சேர்ந்த ஹபீப் செரீப் என்ற 2 தீவிரவாதிகள் நுழைந்திருப்பது உறுதியாகியிருக்கிறது. இதைத்தொடர்ந்து மும்பையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் பற்றி எரிகிறது காஷ்மீர்!

## அரச கட்டடங்கள் தீ வைத்து எரிப்பு; பொலிஸார் துப்பாக்கிச் சூடு!!

ஸ்ரீநகர், செப். 13

காஷ்மீரில் நேற்றுமுன்தினம் மீண்டும் பயங்கர வன்முறை வெடித்தது. அரசு கட்டடங்களைக் கலவர கும்பல் தீ வைத்து எரித்தது. கலவரத்தை அடக்க பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

காஷ்மீர் மாநிலத்தில் பிரிவினைவாத இயக்க ஆதரவாளர்கள், கடந்த 3 மாதங்களாக வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு காண்பதற்காக, மத்திய - மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் கடந்த சில நாட்களாக வன்முறைச் சம்பவங்கள் சற்று ஓய்ந்து இருந்தன. இந்த நிலையில், காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில், தால் ஏரிக்கரையில் உள்ள புகழ்பெற்ற ஹசரத்பால் மசூதியில் நேற்று முன்தினம் காலை ரமழான் தொழுகை நடைபெற்றது.

தொழுகை முடிந்ததும் ஜிலானி தலைமையிலான ஹுரியத் பிரிவினை இயக்க ஆதரவுப் பிரிவினரும், முஸ்லிம் லீக் தொண்டர்களும் பொலிஸாருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியபடி ஊர்வலமாகச் செல்ல முயன்றனர்.

அங்கு காவல் பணியில் இருந்த படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள். அவர்கள் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீசி தாக்குதல் நடத்தினார்கள். மசூதிக்கு அருகே உள்ள அக்வாப் கட்டடத்தில் பொலிஸார் தங்கியிருந்த முகாமுக்கு சிலர் தீவைத்தனர்.

பொலிஸ் வாகனம் ஒன்றும் தீ வைத்து எரிக்கப்பட்டது. உடனே பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியும் அவர்களைக் கலைக்க



முயன்றனர். அது பயன் அளிக்காததால் துப்பாக்கிச் சூடு நடத்தி, ஆர்ப்பாட்டக்காரர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இந்த மோதலில் 3 பொலிஸார் உட்பட 7 பேர் படுகாயம் அடைந்தனர்.

தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து பொலிஸ் முகாமில் எரிந்து கொண்டு இருந்த தீ மற்ற கட்டடங்களுக்குப் பரவாமல் அணைத்தனர். தொடர்ந்து அந்தப் பகுதியில் பதற்றம் நீடித்தது.

இதற்கிடையில், ஈத்கா மைதானத்தில் தொழுகை முடிந்ததும், ஹுரியத் பிரிவினைவாத இயக்கத்தின் மிதவாதப் பிரிவுத் தலைவரான மிர்வாஸ் உமர் பரூக், ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் முகமது யாசின் மாலிக் தீவிரவாத பிரிவின் தலைவர் நிசார் உசேன் ரத்தர் ஆகியோர் மிகப்பெரிய ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

நகரின் மையப்பகுதியான லால்சவுக் நோக்கி அணிவகுத்துச் சென்ற இந்த ஊர்வலத்தில் ஏறத்தாழ 2 லட்சம் பேர் பங்கேற்றனர். ஊர்வலத்தின் முடிவில் காஷ்மீரில் நடந்த பொலிஸ் துப்பாக்கிச் சூட்டில் பலர் கொல்லப்பட்டதை கண்டித்து, 30 நிமிடங்கள் தர்ணா போராட்டம் நடைபெற்றது. பின்னர் அரச கட்டடங்களுக்கு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

**இந்தியச் செய்திகள்**

# காங்கிரஸுக்கு 109 தொகுதிகளுடன் முதல்வர் பதவியையும் தரவேண்டும்

## இளங்கோவன் அதிரடி; கலக்கத்தில் தி.மு.க.

தூத்துக்குடி, செப். 13

வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸிற்கு 109 தொகுதிகளையும், அதன் பின்னர் முதல்வர் பதவியையும் தரவேண்டும் - என்று தி.மு.கவிற்கு, முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தூத்துக்குடி அடுத்த புதுக்கோட்டை, கூட்டாம்புளி உள்ளிட்ட இடங்களில் நேற்று முன்தினம் காங்கிரஸ் கொடியை ஏற்றிவைத்த இளங்கோவன் மேலும் கூறியவை வருமாறு -


தமிழகக் காங்கிரஸ் தலைவராக தங்கபாலு பொறுப்பேற்றது முதல், மாவட்டத் தலைவர்களின் கூட்டம் நடத்தப்படவில்லை. அவரது தலைமையின் கீழ் கட்சி செயலிழந்து விட்டது. எனவே, அவரை மாற்ற வேண்டுமெனக் காங்கிரஸ் அகில இந்தியத் தலைமைக்குக் கோரிக்கை விடுத்தேன். இதற்காக, என் மீது நடவடிக்கை எடுக்க தங்கபாலுவுக்கு அதிகாரம் கிடையாது. முன்பு அவர், தமிழகக் காங்கிரஸ் தலைவராக இருந்த போது, என்னை மாவட்ட தலைவர் பதவியில் இருந்து நீக்கினார். அதன்பின்னர் அவர் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அகில இந்தியக் காங்கிரஸ் தமிழகக் பொறுப்பாளர் மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத், கூட்டணி பற்றித்தான் பேசக் கூடாது என்றார். மாறாக, ராஜிவ் மற்றும் ராகுல் குறித்து விமர்சிப்போருக்கு பதில் கூறக்கூடாது என வலியுறுத்தவில்லை.

தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி வலுவாக உள்ளது. மேலும், வலுப்பெற வேண்டுமென்பதற்காக, தி.மு.க. ஆட்சியின் சில தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறேன். 1980 இல் தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸிற்கு 110 தொகுதிகள் வழங்கப்படதுபோல், வரும் பொதுத் தேர்தலில் ஒரு தொகுதியை குறைத்துக் கொண்டு தி.மு.க. எங்களுக்கு 109 தொகுதிகளைத் தரவேண்டும். அது தவிர, காங்கிரஸிற்கு முதல்வர் அல்லது துணை முதல்வர் பதவியைத் தர வேண்டும். முதல்வர் பதவி தந்தால் சந்தோஷம். துணை முதல்வர் பதவி தந்தால் ஆறுதல் அடைவோம்.

தி.மு.க., கூட்டணியில் புதிய கட்சிகளை சேர்ப்பது குறித்து, காங்கிரஸுடன் பேசி முடிவெடுப்போம் என முதல்வர் கருணாநிதி கூறியிருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. நான்கு ஆண்டு கால ஆட்சியில், முதல்வர் கருணாநிதி இப்போதுதான் கூட்டணி கட்சியான காங்கிரஸிற்கு உரிய மரியாதை தந்துள்ளார். இதற்கு முன் தி.மு.க. கூட்டணியில் பா.ம.கவை சேர்க்கும்போதோ, வெளியேற்றும் போதோ எங்களிடம் எதுவும் கேட்கவில்லை.

# டில்லியில் தாழ்வான இடங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

## 25 ரயில்சேவைகள் ரத்து



டில்லி, செப். 13

யமுனை ஆற்றில் தொடர்ந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் டில்லியில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

டில்லி மற்றும் அதைச் சுற்றியுள்ள பஞ்சாப், அரியானா, உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அந்த மாநிலங்களில் நிரம்பி வழியும் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுவதால் யமுனை ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது.

யமுனை ஆற்றின் அபாய அளவு 204.83 மீற்றர் ஆகும். நேற்றுமுன்தினம் டில்லியில் பழைய ரெயில்வே பாலத்தில் வெள்ள அளவு 206.80 மீற்றராக உயர்ந்தது. அதாவது 2 மீற்றர் கூடுதலாக நீர்மட்டம் உயர்ந்து விட்டது. அரியானா அணையில் இருந்து மேலும் 30 ஆயிரம் கன அடி அளவுக்கு தண்ணீர் திறந்துவிட இருப்பதால், இந்த அபாய அளவு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. யமுனை வெள்ளம் காரணமாக டில்லியின் தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. தொடர்ந்து வெள்ளம் அதிகரித்தால் இந்தப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் வீடுகளை விட்டு வெளியேறிய ஏராளமான குடிசைவாசிகள், தங்களுடைய எஞ்சிய உடைமைகளுடன் வீதிகளில் வரிசையாக அணிவகுத்து நின்றனர்.

ஏற்கனவே நேற்றுமுன்தினம் டில்லியின் தாழ்வான பகுதிகளில் வசித்த் நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக 74 மீட்புப் படகுகள் மற்றும் 68 நீச்சல் வீரர்கள் மற்றும் 100 இற்கு மேற்பட்ட தேசிய பேரிடர் நிவாரணப் படையினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.யமுனை ஆற்றின் வெள்ளப்பெருக்கு காரணமாக வடக்கு ரயில்வே 25 ரயில் சேவைகளை ரத்து செய்தது. 36 ரெயில்கள் மாற்று வழியில் திருப்பி விடப்பட்டன. 39 ரயில்கள் நடு வழியில் நிறுத்தி வைக்கப்பட்டன.

# இளங்கோவன் மீது காங்கிரஸ் மேலிடம் நடவடிக்கை எடுக்கும்

## பெயர் குறிப்பிடாமல் தங்கபாலு தாக்கு

சென்னை, செப். 13

ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மீது காங்கிரஸ் மேலிடம் நடவடிக்கை எடுக்கும் - என்று அந்தக் கட்சியின் மாநிலத் தலைவர் தங்கபாலு தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் தங்கபாலு இதுகுறித்து கூறியவை வருமாறு -

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை கட்சியின் மேலான தலைமைக்கும், கொள்கைகளுக்கும் யாரும் பங்கம் விளைவிக்க முடியாது. சோனியா காந்தியின் வழிகாட்டுதலின் பேரில்தான் தமிழக காங்கிரஸ் செயற்பட்டு வருகிறது.

எனினும், ஒரு சிலரின் (இளங் கோவன்) பேச்சுக்கு நான் பதில் கூற விரும்பவில்லை. கட்சியின் உள் விவகாரங்களைப் பகிரங்கமாக வெளியில் பேசக் கூடாது என்ற விதியுள்ளது. இதை மீறிச் செயற்படுவோரின் நடவடிக்கைகளைக் கட்சி மேலிடம் கவனத்தில் கொண்டுள்ளது. தேவையற்ற வகையில் பிரச்சினைகளையும், சர்ச்சைகளையும் எழுப்புவோர் குறித்து தலைமையிடம் எடுத்துரைக்கப்படும். கட்சியின் கொள்கை, விதிகளுக்கு முரணாக யார் பேசினாலும் அது குறித்து கட்சியின் மேலிடத்துக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

எனவே, உள்கட்சி விவகாரங்களை வெளியில் விமர்சித்துப் பேசுவது கட்சி விரோத நடவடிக்கையாகத்தான் கருதப்படும். தமிழக காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து என்னை நீக்க வேண்டும் என்று சிலர் (இளங்கோவன்) கூறினர் எனத் தெரியவந்துள்ளது. கட்சியின் மாநிலத் தலைவராக யார் இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் கட்சியின் தலைவரான சோனியா காந்திக்கு மட்டுமே உண்டு. இதுகுறித்து கருத்துத் தெரிவிக்க விரும்புவோர் கட்சியின் உள் அரங்கில் மட்டுமே தெரிவிக்க வேண்டும்.

கட்சியின் விதிகளை யார் மீறினாலும் அவர்கள் மீது கட்சி மேலிடத்தில் இருந்து நடவடிக்கை வருவது உறுதி.

- இப்படி அவர் கூறினார்.

# எனது படங்கள் அனைத்தும் தமிழர்களை பெருமைப்படுத்தும் விதமாகவே அமையும்

## எந்திரன் அத்தகைய படம்தான் என்கிறார் ரஜனி

சென்னை, செப். 13

நான் எந்தப் படம் நடித்தாலும் அது தமி ழர்களைப் பெருமைப்படுத்தும் வித மாகவே இருக்கும் - என்று சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் தெரிவித்துள்ளார்.

ரஜனி இரு வேடங்களில் நடித்துள்ள 'எந்திரன்' பட சீ.டி. வெளியீட்டு விழா சென்னை சத்தியம் திரையரங்கில் நேற்று முன்தினம் நடந்தது.


தயாரிப்பாளர் கலாநிதிமாறன் முன்னிலையில் படத்தின் சி.டியை ரஜனி வெளியிட்டார். படத்தின் இயக்குநர் ஷங்கர் மற்றும் தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகர் நடிகைகள் மற்றும் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் உட்பட ஏராளமான திரையுலகப் பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சி.டியை வெளியிட்ட பின்னர் ரஜனி பேசியவை வருமாறு -

சங்கரின் பெரிய கனவை நனவாக்கியுள்ளார் கலாநிதி மாறன். அவர் இல்லா விட்டால் இந்த அளவுக்கு 'எந்திரன்' படம் வந்திருக்காது. நான் பஸ்ஸில் டிக்கெட் கொடுத்தவன். எனக்கு ஓட்டோச் சாரதி, ரவுடி பாத்திரங்கள்தான் பொருத்தமாக இருக்கும், விஞ்ஞானி பாத்திரத்துக்கு நான் எப்படி பொருந்துவேன் எனச் சங் கரிடம் கேட்டேன். 4 நாள் படப்பிடிப்புத் தளத்துக்குப் போனேன். அதன்பின் அந்தக் கதாபாத்திரத்துடன் ஒன்றி விட்டேன். இதில் நான் நடிக்கவில்லை. எல்லாமே சங்கர்தான். அவருக்கே அனைத்துப் புகழும் - என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் அருகில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதை முதற்படத்திலும்,தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன் மற்றும் திணைக்களத் தலைவர்கள்

## மழை காலம் நெருங்குகிறது; மழையும் கொட்டப்போகிறது

# வன்னி மக்கள் நடுத்தெருவில் பரிதவிக்க நேரிடும் ஏதுமறியாது தூங்கும் அமைச்சர்களைத் தட்டி விடுங்கள்

## யாழ்.செயலகக் கூட்டத்தில் சுரேஷ் எம்.பி. பௌஸியிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப்.13

மாரிகாலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மழையும் கொட்டப்போகிறது. வன்னிப் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் நடுத்தெருவில் நின்று பரிதவிக்கும் நிலையும் ஏற்படப் போகின்றது.

அது பற்றி சிந்திக்காமல் அமைச்சர்கள் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையை எடுத்துச்சொல்லி அவர்களை தட்டி எழுப்புங்கள்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் இவ்வாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்திருந்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி யாழ். செயலகத்தில் திணைக்களத் தலைவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதில்தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக சுரேஷ் பிரரேமச் சந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர். அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் ஓலைக் குடிசைகளிலும், தறப்பாள் கொட்டில்களிலும் தமது வாழ்நாளை கழித்து வருகின்றனர்.

இந்த நிலையில் மழை காலம் நெருங்கி விட்டது. மக்கள் தங்குமிடம் வசதிகள் ஏதுமின்றி தவிக்கின்ற பரிதாபநிலை ஏற்படப்போகின்றது. அந்த மக்கள் தஞ்சம் அடைவதற்கு பாடசாலைகளில் கூரைகள் இல்லை. அதேநிலை தான் ஆலயங்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

எனவே அங்குள்ள பாடசாலைகளை கோயில்களை சீரமைத்து மக்கள் மழை காலத்தில் பாதுகாப்பாக தங்குவதற்குரிய ஏற்பாடுகளை செய்துகொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இது பற்றி சிந்திக்காமல் இருக்கும் அமைச்சர்களுக்கு நிலைமைகளை எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்- என்றார். (ஒ-9)

ஜேர்மனியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உலகத் தமிழ் பண் பாட்டியக்கத்தின் அகம் புலம் தமிழர் வாழ்வியல் மாநாட்டில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட மூத்த பத்திரிகையாளர் ந.வித்தியாதரன், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உள்ளிட்டவர்களைப் படத்தில் காணலாம்.



## மன்னிப்புச் சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்குக் கிடைத்துள்ளது என சர்வதேச மன்னிப் புச்சபை மட்டும் அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் யுத்தம் நிறைவடைந்த காலப்பகுதி வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை இராணுவத்தினரும் யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் என சர்வதேச அனர்த்தக் குழுவும், சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகமும் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் சாட்சியமளிக்குமாறு உண்மையைக் கண்டறியும் குழு கேட்டுக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கால்நடை மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளார். (ஒ-சி)

## தமிழரின் சுயநிர்ணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துயரத்தில் உறவுகளை இழந்தவர்களாக வாழும் நாங்கள் இன்று முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் இராணுவ அடக்குமுறைக்குள் சிக்கியிருக்கும் இனத்தின் விடியலுக்காகப் பேசுகிறோம்.

உலகத் தமிழ் பண்பாட்டியக்கம், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக - அவர்களைத் தூக்கி விடுவதற்காக இந்த மாநாட்டின் மூலம் நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறேன்.

தமிழர்களுடைய வாழ்வியல் பண்பாடு இனங்களுக்கான ஒற்றுமை தமது கலாசாரத்தை இழந்துவிடாமல்அடுத்த சந்ததிக்காக அதை எடுத்துச்செல்ல முற்படும் உலகத்தமிழ் பண்பாட்டியக்கத்தின் செயற்பாடு வெற்றிபெற எனது வாழ்த்துக்கள்.

தமது பரம்பரிய பிரதேசங்களையும், மொழியையும், உரிமையையும் காப்பாற்றிக்கொள்ள 60 ஆண்டு காலமாக எமது இனம் போராடி வருகின்ற போதிலும் அந்த இலக்கை அடையமுடியாத நிலையில் இருக்கிறது.

இன்று நாங்கள் கல்லில் கட்டி கடலில் போடப்பட்ட இனமாக வாழ்கிறோம். நாங்கள் என்றாவது ஒருநாள் மேலே வருவோம். முகாமில் அடைத்து வைத்திருக்கும் மக்களை நாங்கள் சென்று பார்ப்பதற்கு அரசு அனுமதிக்கவில்லை. ஆனாலும் அந்த மக்கள் எமக்கே வாக்களித்து தமது ஒற்றுமையையும் உறுதியையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அந்த மக்களை வாழ்விக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. துன்பத்தில் துவழும் அந்த மக்களுக்கு உதவ வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு மேற்குலக நாடுகளில் வாழும் தமிழ் உறவுகளுக்கு இருக்கிறது.

கடந்த தேர்தலின்போது எம்மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. தேர்தலின்போது பிளவுகள் இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் மேலும் பல உறுப்பினர்களைப் பெற்றிருப்போம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் மட்டக்களப்புக்கு போகமுடியாமல் இருந்தோம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் எண்ணில் அடங்காத துன்பத்துடன் வாழும் மக்களை கைதூக்கி விடவேண்டிய மிகப் பெரிய பொறுப்பை உணர்ந்து செயற்படுவீர்கள் என நம்புகிறேன் - என்றார். (ஒ-சி)

## சிறையில் உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டு இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் எமது பிள்ளைகள் மிக நீண்ட காலமாய் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களைப் பிணையிலோ அல்லது பொது மன்னிப்பிலோ விடுதலை செய்து எமது வாழ்வில் வசந்தம் மலர வையுங்கள்.

தாங்கள் 'வடக்கின் வசந்தம்', 'கிழக்கின் உதயம்' எனப் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறீர்கள். கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தில் நாம் பாதிக்கப்பட்டு எமது அனைத்தையும் இழந்துபோய் உள்ள நிலையிலும் கூட எமக்கு நல்ல எதிர்காலம் உதயமாகும் என்ற தங்களின் நல்லெண்ண நடவடிக்கை ஊடாக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். நாங்கள் உங்களில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றோம். யுத்தம் முடிந்து விட்டது. நிம்மதியாய் இருப்போம் என்று நினைக்கும்போது எமது பிள்ளைகள் சிறையில் நீண்ட காலமாக எவ்வித முடிவுமின்றி ஒன்று தொடக்கம் பதினெட்டு வருடங்களாய் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை நினைக்கும்போது நாம் இனி உயிர் வாழ்வது ஏன் என்ற விரக்தியுடனும் எமது பிள்ளைகளின் எதிர்காலத்தையும் எண்ணியெண்ணி உயிர் வாழ்கின்றோம். நாளாந்தம் கண்ணீரும் கவலைகளுமே எமக்குச் சொந்தமாகி விட்டன. உடைமைகளை இழந்த நாம் எமது உறவுகளையும் இழந்து விடுவோமா என எண்ணத் தோன்றுகின்றது.

### பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கிறோம்

நிவாரணக் கிராமங்களிலும் மர நிழல்களிலும் வீதி ஓரங்களிலும் நின்ற எமது பிள்ளைகளுக்கு எப்போது விடுதலை கிடைக்குமென எதிர்பார்த்து காத்திருக்கின்றோம். பிள்ளைகளை காணாது பெற்றோரும் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளும் கணவனைக் காணாது மனைவியும் எவருடைய அரவணைப்புமின்றி அநாதைகள் போல அன்றாட செலவுகளையே கவனிக்க முடியாமல் உழைத்துத்தீர எவரும் இல்லாமல் பிச்சை எடுக்கும் நிலையில் குடும்பம் நடத்துகின்றோம். சிறையில் வாடும் நாம் தந்தையரின் அரவணைப்பின்றி அவர்களின் பாசத்துக்காக ஏங்கும் எம் குழந்தைகளின் ஏக்கங்களைப் புரிந்துகொள்ளுங்கள்.

சிறு வயதில் ஒரு குழந்தைக்கு தாய் தந்தையரின் அன்பும் அரவணைப்பும் எவ்வளவு முக்கியம் என்பது தங்களுக்குப் புரியும். வயதான பெற்றோரும் அவர்களின் கடைசிக் காலத்தின் ஆறுதலுக்கும் அவர்களைப் பராமரிக்கக்கூட யாருமில்லாமல் மன அழுத்தங்களுடன் எம்மிடத்தில் வாழ்கின்றனர்.

எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் எமது பிள்ளைகளின் கையில் தங்கியிருக்கையில் எம் பிள்ளைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது. இந்நிலையில் எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் என்னாவது? எங்கள் நிலைமையை எண்ணிப் பாருங்கள்.

### தேர்தல் நடந்து பல மாதங்களாகியும்..,

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ்க் கைதிகளில் குற்றமற்றவர்களை உடன் விடுதலை செய்யவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டியவர்களை பிணையில் விடுவிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக சட்டமா அதிபர் தெரிவித்திருந்ததாக செய்தி வெளியாகி இருந்தது. ஆனால் தற்போது தேர்தல் முடிந்து பல மாதங்களாகியும் யுத்தம் முடிந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் எமது பிள்ளைகளுக்கு விடுதலை எதுவும் கிடைக்கவில்லை. அவர்களுக்குப் பிணையும் கிடைக்கவில்லை. கைதிகளின் பெற்றோர்களாகிய நாம் மிகுந்த வருத்தத்துடனும் வேதனையுடனும் விரக்தியான மன நிலையிலேயே இந்தக் கடிதத்தை அனுப்பி வைக்கின்றோம். தாங்கள் நல்ல முடிவைத் தெரிவிப்பீர்கள் என்ற எண்ணத்தில், மீண்டும் இக்கடிதத்தை எழுதுகின்றோம். தயவுசெய்து எமது பிள்ளைகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குங்கள் அல்லது பிணையிலாவது அவர்களை விடுதலை செய்வதற்கு ஆவன செய்யுங்கள். - என்று உள்ளது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தலிங்கம் படுகொலை வழக்கில்

# நிரபராதியென விடுவிக்கப்பட்டவர் 14 வருடங்களுக்குப் பின்னர் கைது!

கொழும்பு, செப். 13

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் படுகொலை வழக்கில் நிரபராதியென 14 வருடங்களுக்கு முன் விடுவிக்கப்பட்டிருந்த வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் என்பவர் மீண்டும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி ஆயுததாரிகள் மூவரால் அமிர்தலிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்நிலையில் அமிர்தலிங்கத்தைப் படுகொலை செய்கின்றமைக்கு அம்மூவருடனும் சேர்ந்து சதித் திட்டம் தீட்டினார் என்கின்ற சந்தேகத்தில் வின்சன்ட் வில்லியம் மரியதாஸ் மறுநாள் கைதுசெய்யப்பட்டார்.

அவருக்கு எதிராக 1991 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அவர் நிரபராதியென விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இதே மரியதாஸ் வவுனியா நலன்புரி முகாமில் வைத்து கடந்த வருடம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர் இவர் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டார். பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். இத்தடுப்புக் காவலை ஆட்சேபித்து இவர் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அவ்வழக்கு விசாரணை விரைவில் ஆரம்பமாக உள்ளது.

## பிரதித் தேர்தல் ஆணையர் இன்று வடக்குக்கு விஜயம்

2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் திருத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கு பிரதி தேர்தல் ஆணையாளர் பி.எம். சிறிவர்தன இன்று வடக்கிற்கு விஜயம் செய்கிறார்.

இவ் விஜயத்தின் போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள தேர்தல் அலுவலகங்களுக்கும் அவர் செல்வார். இடம் பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்ப் பட்டியல்களில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டங்களில் கலந்துகொள்வது என்று கூட்டமைப்பு முடிவு செய்திருந்தது.

இந்த முடிவின்படி -

மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற அபிவிருத்தி, மீளாய்வு, இணைப்புக்குழு ஆகியவற்றின் கூட்டங்களில் கூட்டமைப்பு எம்.பிக்கள் பங்குபற்றியிருந்தனர்.

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பங்குபற்றிய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி ஏற்பாடு செய்த கூட்டம் நேற்று பிற்பகல் ஒருமணிக்கு நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு அனர்த்த செயற்பாட்டு மையத்தை அமைச்சர் பௌஸியுடன் இணைந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அரச அதிபர் இமெல்டா சுகுமார் ஆகியோர் திறந்துவைத்தனர்.

இதுவரை காலமும் அரசு ஏற்பாடு செய்த கூட்டங்களில் அரச சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்களே பங்குபற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஐ-9)

## குடாநாட்டில் அனர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரிடம், அவரது விஜயம் தொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக பௌஸி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்ட மக்கள் எவ்வகையான இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள் என்ற விடயம் குறித்தும், அவற்றில் இருந்து தப்புவதற்கு எவ்வகையான முற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம், அவற்றுக்கான அனர்த்த முகாமைத்துவ திட்டங்களாக எவற்றை அமுல்படுத்த வேண்டும் என்பன தொடர்பாக துறைசார் அதிகாரிகளுடனும் பொதுமக்களுடனும் கலந்துரையாடியுள்ளேன்.

யாழ்.மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் மற்றும் ஏனைய இடங்களில் வெள்ளம் மற்றும் புயல் அனர்த்தங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. எனவே அவற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தோம்.

வெள்ள அனர்த்தத்தை தவிர்த்துக் கொள்வதற்காக அந்த வெள்ள நீரை தேக்கி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக நாம் உறுதியளித்தள்ளோம்.

குளத்தில் மூழ்கி பலர் உயிரிழந்துள்ளதாக அறிந்தேன். எனவே இங்கு நீச்சல் பயிற்சித் தடாகம் பல அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

### தேசிய பாதுகாப்புத் தினம்

அத்துடன் தேசிய பாதுகாப்புத் தினத்தை யாழ்.மாவட்டத்தில் நடத்துவதற்கு ஏதுவாகப் பல்வேறு விடயங்களை மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராய்ந்தோம்.

முஸ்லிம் மக்கள், அனைவரும் மீளவும் யாழ்.மாவட்டத்தில் குடியமரக் கூடிய சூழல் உருவாகியுள்ளது. அந்த மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல திட்டங்கள் எம்மிடமுள்ளது.

முஸ்லிம் மக்களது வீடுகள் சின்னாபின்னமாகச் சீரழிந்துள்ளதை என்னால் அவதானிக்க முடிந்தது. அரசு நிதி ஒதுக்கி முஸ் லிம் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இங்குள்ள முஸ்லிம் மக்களது பள்ளிவாசல்களை வெளிநாடுகளில் உள்ள முஸ்லிம் மக்களது உதவியுடன் புனரமைத் துக்கொள்ள முடியும் - என்றார். (ஓ-14)

**Spoken English & Grammar**
By: Mr.B.Ruban (A/L Eng. Teacher &BBA)
SMS Your address for Course Details
ஆரம்பம்: 19.09.2010 (8am)
(வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும்)
JTI 45, Clock Tower Road, Jaffna.
More Details: 0779785749 call after 5 pm

**NEW SCIENCE CENTRE**
(BECONஇல்)
JAFFNA
2011 - A/L DAY CLASS
ஆரம்பம் :18.09.2010
Time : அலுவலகத்தில் பெறவும்

ஆலோசனையும், வழிகாட்டலுக்குமான
உத்தியோகத்தர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை
விசேட கருத்தரங்கு
செவ்வாய் / புதன் / வியாழன் } பிற்பகல் 2 முதல் 5 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை எதிரில்)

**வீடு வாடகைக்கு**
இல. 113, செம்மணி வீதி, நல்லூரில் சகல வசதிகளுடன் கூடிய நவீன முறையிலான 5 அறைகள் கொண்ட விசாலமான வாகன தரிப்பிட வசதியும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
★ அலுவலக பாவனைக்கு முன் உரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0775581490

**கணக்கு**
A.P. பகீரதன் BBA (Fm spl.)
பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி விஷேட பிரிவு
A/L - 2011
வருமான செலவுக் கணக்கு
Tue, Thur : 2.30 - 3.30 Pm.
ஆரம்பம் : 14.09.2010 Tue. 2.30 Pm.
NEC ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
அனுமதிகள் இன்றுமுதல்....

# பாதுகாப்புச் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் சீனா பயணம்

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ உள்ளிட்ட உயர் பாதுகாப்பு அதிகாரி கள் சீனாவிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தலைமை அதிகாரி தயா ரத்நாயக்க, கடற்படைத் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் திசநாயக்க, விமானப்படைத் தலைமை அதிகாரி எயர் வைஸ் மார்சல் பிரேமச்சந்திரா உள்ளிட்ட உயரதிகாரிகள் இவருடன் சீனா சென்றுள்ளனர்.

ஆயுதக்கொள்வனவு மற்றும் இந்தியாவுடனான பாதுகாப்பு உறவுகள் பற்றி சீனாவுக்கு விளக்கமளிக்கவே கோத்தபாய அங்குச் சென்றிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

இந்தியாவுடன் இலங்கை விரைவில் பாதுகாப்புக் கலந்துரையாடல் ஒன்றை நடத்துவுள்ளது. இதுபற்றிக் கலந்துரையாடுவதற்காக இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா, இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி.சிங் ஆகியோர் அண்மையில் இலங்கை வந்திருந்தனர். அதேவேளை இந்த விவகாரம் தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக இந்திய விமானப்படைத் தளபதி மற்றும் பாதுகாப்புச் செயலர் ஆகியோர் இந்த மாதம் இலங்கை வரவுள்ளனர்.

இவர்களின் வருகையின் நோக்கம் குறித்து சீனாவுக்கு விளக்கமளிப்பதுடன் ஆயுதத் தளபாடக் கொள்வனவுகள் தொடர்பாக சீன நிறுவனங்களுடன் பேச்சு நடத்துவதற்கே கோத்தபாய அங்கு சென்றிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

# கந்தரோடை காளி கோயிலுக்கு அருகிலுள்ள விடுதியால் அடியார்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், செப்.13

சுன்னாகம் கந்தரோடை காளி கோயிலில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வின்போது அருகில் உள்ள விடுதியில் தங்கியுள்ளவர்களால் தங்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதாக அடியார்கள் முறைப்படுகின்றனர்.

ஆலயத்துக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் தென்னிலங்கையில் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் தங்கியிருக்கின்றனர். கந்தரோடை தொல்பொருள் நிலையத்தைப் பார்வையிட வரும் இவர்கள் குறிப்பிட்ட விடுதியில் தங்கியுள்ளனர்.

ஆலயச் சூழலில் தங்கும் அவர்கள் அநாகரிகமான செயல்களில் ஈடுபடுவதால் கும்பாபிஷேக நிகழ்வுகளில் பங்குகொள்ளும் அடியார் கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக முறைப்பாடு தெரிவிக் கின்றனர்.

கும்பாபிஷேக கிரியைகள் மற்றும் கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை வரை நடைபெற விருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-ஐ)

## பாண்டிருப்பில் மாணவன் சுழியில் சிக்கிப் பலி

கல்முனையை அடுத்துள்ள பாண்டிருப்பு கடலில் குளிக்கச் சென்ற நால்வரில் ஒருவர் கடலினால் இழுத்துச் செல்லப்பட்டார். இச்சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது.

பாண்டிருப்பைச் சேர்ந்த பிரபல மனோதத்துவ வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி. குமுதினி துரைரட்ணத்தின் ஏக புதல்வன் அனோஜன் (வயது - 17) என்பவரே கடலில் மூழ்கினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று தனது நண்பர்களுடன் கடலுக்குக் குளிக்கச் சென்றவேளையில் இத் துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றது. கல்முனைப் பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்து தேடுதலில் உதவி வருகின்றனர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைதூக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதென சந்தேகிக்கப்படும் சகல இடங்களிலும் இந்த முகாம்கள் நிறுவப்படும் எனப் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-சி)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றித் தமக்குக் கவலை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியமளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்து ஆணைக்குழுவின் தலைவர் அனுப்பிய கடிதம் தமக்குக் கிடைத்துள்ளது என தமிழோசையிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தரப்பின் நியாயங்களை சரித்திர ரீதியாக முன்வைக்க வேண்டிய நிலையில் தாம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆணைக்குழு மீதுள்ள நம்பகத் தன்மைகளுக்கு அப்பாற்பட்டு, அதன் முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கான கடப்பாடு தமிழர் தரப்புக்கு இருக்கிறது எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் சகல நடவடிக்கைகளிலும் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள விரும்புவதாகவும் சம்பந்தன் தெரிவித்தார். (அ-சி)

## 25 எம்.பிக்கள் தனித்தியங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியாகக் கூட்டும்படி கட்சித் தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு திரும்பியதும் அதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் - என்று அவர் கூறினார்.

இதேவேளை நாடாளுமன்றத்தில் சுயேச்சைக் குழுவாக இயங்கப்போவதாக அறிவித்துள்ள 25 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது தலைவராக அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசாவை நியமிக்கவுள்ளதாக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

சஜித் பிரேமதாச எம்.பி. கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தாம் தயார் என ஏற்கனவே அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 25 எம்.பிக்களைக் கொண்ட சுயேச்சைக் குழுவாக இயங்கினால் பிரதான எதிர்க்கட்சி என்ற அங்கீகாரம் இக்குழுவுக்குக் கிடைக்குமென்றும் இக் குழுவுக்கு தலைமை வகிக்கப்போகும் சஜித் பிரேமதாச எம்.பி. எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படலாமெனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள நேற்றும் பல்வேறு சந்திப்புகள் இடம்பெற்றன. இக்குழுவின் முக்கியஸ்தர் எனக் கூறப்படும் தயாசிறி ஜயசேகர எம்.பியுடன் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் நேற்றுப் பேச்சு நடத்தியதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org